உ

சிவமயம்.

திரு முருகன் றுணை.

செந்தமிழ் நாட்டுச் சிறப்பு

சொக்கர்கடம்பில்வரு நாடு சோம
சுந்தரராண்டதமிழ் நாடு
மிக்குயர்கன்னிவள நாடு அம்மை
மீனாளாண்டதமிழ் நாடு 1

முருகனாண்டதமிழ் நாடு கும்ப
முனிவன்வாழுந்தமிழ் நாடு
பெருகுதென்றல்வளர் நாடு அறம்
பேணிப்புரியுந்தமிழ் நாடு. 2

சங்கம்வளர்ந்ததமிழ் நாடு சைவ
சாத்திரமோங்குந்தமிழ் நாடு
மங்களமானதமிழ் நாடு தவம்
வாய்த்துப்பலிக்குந்தமிழ் நாடு. 3

போற்றுஞ் சங்கந்தனிற் புல்லும்பொய்யா மொழிப்
புலவர் நாற்பதினெண்மரோடும்
ஏற்றமுறுஞ் சோமசுந்தரநாதனார்
இறைமைபெற்றதமிழ்நாடு. 4

முத்தியளிக்குந்தமிழ் நாடு திரி
மூர்த்தி வணங்குந்தமிழ் நாடு
பத்தியளிக்குந்தமிழ் நாடு மிக்க
பாவத்தைப்போக்குந்தமிழ் நாடு. 5

சம்பந்தர்வந்ததமிழ் நாடு திருத்
தாண்டகவேந்தர்வளர் நாடு
நம்பியாரூரர்வரு நாடு எங்கள்
நல்வாதவூரர்திகழ் நாடு. 6

மெய்கண்டார்வந்ததமிழ் நாடு சிவ
மேவருணந்திவள்ர் நாடு
கைகண்டதோர் மறைஞானசம்பந்தர்
கருதுமுமாபதிவாழ் நாடு 7

தொண்டருபான்மூவர்தம் நாடு மேற்று
கையடியார்கள்வரு நாடு
பண்டிசைப்பாவோதுமொன்பதின்மர் மிகு
பத்தியாய்வாழ்ந்ததமிழ்நாடு. 8

பாக்கியம் நாஞ்செய்த பான்மையினு லிந்தப்
பாரினிற்சீர்த்திமிகுந் தோங்கும்
ஆச்கியோஞ்கிய சேக்கிழார் பெருமான்
அன்பாய்வளர்ந்த தமிழ் நாடு 9

வண்சிரஞ் சோதிதமைக்காணும் தவ
மன்னியே யெஙகள் தமைப்பேணும்
தண்பரஞ் சோதி மகாமுனிவர் வந்து
தானேயுதித்த தமிழ் நாடு 10

பட்டினத்தார் வந்த நன்னாடு உயர்
பத்ரகிரி வளர் பொன்னாடு
சிட்டர் குமாருருபரரு நற்
சிவப்ரகாசர்வரு நன்னாடு 11

தாயுமானவர் வாழ் நாடு அவர்
தந்திடும்பாடல் வளர்நாடு
தூயரானபல தொண்டர்கள் கூட்டந்
தொகுத்து வளர்ந்த தமிழ்நாடு 12

நற் வ வாக்கியர் வாழ்நாடு தவம்
நாடிடைக்காடர் வளர்நாடு
பொற்புறுவள்ளுவர் வாழ்நாடு கலைப்
பூவையாம்ஔவைதமிழ் நாடு 13

சிற்றம்பலங்கொண்ட நன்னாடு சிவன்
றண்டவமாடுந்தமிழ் நாடு
கொற்றமுடனறுபத்து நாலாடல்
குழகன்புரிந்ததமிழ் நாடு 14

தேவாரமோங்குந்தமிழ் நாடு திரு
வாசகம்வீசுந்தமிழ் நாடு
நாவாரருங்கலனுந்திருத்தொண்டர்கள்
நல்லபுராணம்வளர் நாடு 15

பத்தித்திருவிளையாடற் புராணம்
பரவிவளருந்தமிழ் நாடு
நித்தியுங்கந்தப்புராணபடனம்
நிகழுஞ்சைவத்தமிழ் நாடு 16

மன்னுஞ்சிவஞானபோதமுஞ் சித்தியும்
வழிச்சிவப்பிரகாசமற்றும்
பன்னும் பதினான்கு சாத்திரஞ் சைவப்
பயிரைவளர்க்குந்தமிழ்நாடு. 17

சீரார்கச்சியப்பச் சிவாச்சாரியர்
சீர்த்தியாய் வந்ததமிழ் நாடு
ஏராருஞ்சிவஞான முனிவரர்
இன்பமாய்வாழ்ந்ததமிழ்நாடு. 18

மன்னுந்திருமுறை பன்னிரண்டு மோங்கி
மங்களமேறுந்தமிழ்நாடு
பின்னும்பல நூற்றொருகுதிகளும்
பிறங்கத்திகழும் தமிழ்நாடு. 19

வேதந்திகழுந்தமிழ் நாடு மிக்க
மேன்மையுடையதமிழ் நாடு
பாதங்கணாலுந்தருமூய ராகமம்
பண்புடனோங்குந்தமிழ் நாடு. 20

மன்னநபாயனபயகுலசோழன்
வந்தெமைக்காத்ததமிழ் நாடு
மின்னுமநுநீதிகண்டதோர்சோழனார்
மேவிவளருந்தமிழ் நாடு. 21

தெய்வமுசுகுந்தமன்னனரசு
சிறக்கப்புரிந்ததமிழ் நாடு
சைவத்திருமுறைதந்த நம்பியாண்டார்
நம்பிவளர்ந்ததமிழ் நாடு. 22

மின்னுமௌலியிளங்கோவடி மன்னன்
மேவிப்பிறந்ததமிழ் நாடு
மன்னனதிவீரராமன்வரதுங்க
வள்ளல்கள்தோன்றுந்தமிழ் நாடு 23

பகரும்வைதிகசைவசித்தாந்தம்
பரவியே யோங்குந்தமிழ் நாடு
புகரில்லாதசிவனடியார்கள்
பொலிந்துவளருந்தமிழ் நாடு. 24

சேரனுஞ்சோழனும்பாண்டியன்மூவருஞ்
செங்கோலோச்சுந்தமிழ் நாடு
பாரதியத் தெய்வ நன்மணம்வீசியே
பத்திவளருந்தமிழ் நாடு. 25

பன்னிருஞ்சைவசமயம் வளரவே
பன்முனிவோர்கள்வரும் நாடு
மின்னுஞ்சிவமணம் வீசிக்கதித்தென்று
மேலாய்விளங்குந்தமிழ் நாடு 26

இன்பம்விளையுந்தமிழ் நாடு நிக
ரின்றியேயோங்குந்தமிழ் நாடு
துன்பமொழியுந்தமிழ் நாடு பரி
சுத்தமதாக்குந்தமிழ் நாடு 27

சந்தத்திருப்புகழ் சந்ததமோங்கியே
தானேதழைக்குந்தமிழ் நாடு
கந்தரலங்காரம் கந்தரனுபூதி
கந்தரந்தாதி வளர்நாடு 28

எங்களருணகிரிநாதரென்று
மின்பமாயோங்குந்தமிழ் நாடு
பொங்கிவிளங்குறும்பூதிசாதனத்தைப்
போற்றிவளருந்தமிழ் நாடு 29

முத்திப்பதிகள்திகழ நாடு சிவன்
முத்தர்கள்வாழுந்தமிழ் நாடு
சத்தியமோங்கிவளர் நாடு சிவன்
றானேதெய்வமெனு நாடு 30

காவிரியோங்கிவரும் நாடு சைவம்
காட்டியவைகைவளர் நாடு
மேவும்பொருநைவளப்பமிகுந்து
விளங்கித்திகழுந்தமிழ் நாடு 31

தென்பரங்குன்றங் கொடுங்குன்றங் குற்றாலத்
தென்பொதிகாசலம்வாழ் நாடு
மின்பரனருள் வேலன்றுபடை
வீடுதிகழுந்தமிழ் நாடு 32

குன்றைமுதற்பலகுன்றுகளிற் கந்தன்
கோவில்கொண்டதமிழ் நாடு
என்றைக்குமேமுருகேசன் றமிழ்நாட்
டிறையெனவோங்குந்தமிழ் நாடு 33

(தொடரும்)

கல்லல் மணிவாசக சரணாலய சுவாமிகள்,
குன்றக்குடி

தமிழர் பட்டிகையைப் பற்றிய சில அபிப்பிராயங்கள்.

(108-ம் பக்கத் தொடர்ச்சி.)

EDUCATIONAL DEPARTMENT.

FROM

S. A. STEELE ESQ., B. A.,
District Educational Officer,
Salem Schools, SALEM.

TO

THE PRESIDENT,
District Board, SALEM.

Dis. on No 900/25 Dated 31—7—25.

SIR,

In transmitting herewith your Endt., N. Ref. No. 2851—25 H. dated 12—7—25, I have the honour to state that the monthly "Tamilar" edited by Mr. H G. Pancharatnam of Trichinopoly was referred to the Head-master, Board High School, Trichengode for, his opinion He says the journal is a fairly good one and may be supplied to all the High and Middle Schools under the Salem District Board. I, therefore, support his recommendation for the consideration of the District Board and suggest that copies may be supplied to all the schools under the Board.

I have the honour to be,
Sir,
Your Most Obedient Servant,
(Sd) S. A. STEELE,
District Educational Officer,
SALEM.

Copy to the Editor with reference to his letter dated 13—7—1925.

S. V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS

திருச்சிராப்பள்ளி டிஸ்டிரிக்ட் எடுகேசனல் ஆபீசர் திரு.
K. நடேச அய்யர் எம். ஏ. அவர்கள் எழுதியது.

RAMA NILAYAM,
38, Shanian Tank Street,
Trichinopoly, Teppakulam P. O.,
7—8—1925.

I have seen three numbers of the Monthly, "Tamilar" (தமிழர்) that is being edited by Mr. Pancharatnam Pillai of Trichinopoly. It contains varied and very interesting subject matter and the several articles are written by contributors who are fit by training, capacity and position in life, to deal with their subject matter in a fresh and living way and write a style at once lucid and elegant. I believe that teachers and pupils of College and High Schools will greatly benefit by a regular study of this magazine.

K. NATESA AYYAR,
7—8—1925. *District Educational Officer*,
TRICHINOPOLY.

மணி நகரம் ஹைகோர்ட்டு வக்கீல் திரு. S. S. பாரதி
எம்.ஏ., பி எல்., அவர்கள் எழுதியது.

MANI NAGARAM,
Madura, 24-7-25.

DEAR SIR,

I will try to do what I can for your "TAMILAR". Your good magazine will commend itself to people of task and culture without much persuasion on its behalf. For contribution of articles, I will try to send you now and again. With best wishes.

Yours Truly,
(Sd) S. S. BHARATI.

சென்னை ஹைகோர்ட்டில் நியாயாதிபதியா யிருந்தவரும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் பெரிய நிலக்கிழவருமான திரு. தி. வே. சேஷகிரி அய்யரவர்கள் எழுதியது.

கோவர்த்தனம்,
இழ்பாக்கம், 30-7-25.

ஐயா,

பத்திராதிபர் அனுப்பிய மூன்று பிரதிகளையும் அப்போதைக்கப்போது கவனித்துவந்தேன். ஒவ்வொரு சஞ்சிகையிலும் தமிழ் நாட்டில் ஆங்கிலேய பாஷையில் திறமையாக பயிற்சி யில்லாமலிருப்பவர்களுக்கு அறியவேண்டிய விஷயங்கள் காணப்படுகின்றன. இனிமையாகவும் எளிதில் உணரக்கூடிய விதம் தமிழ் நடையும் ஏற்பட்டிருக்கின்றது. இம்மாதிரியான மாதாந்திர சஞ்சிகைகள் மிக்க உபயோகமுண்டுபண்ணு மாதலால் நான் இதை தமிழரும் யாவரும் வேண்டக்கூடியதென்று அபிப்பிராயப்படுகின்றேன்.

வேணும்,
சேஷகிரி அய்யர்.

திருச்சிராப்பள்ளி செயிண்டு ஜோசப்பு காலேஜ் ஆங்கிலப் புலவர் திரு. பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் எம் ஏ., எல்.டி., எழுதியது.

“தமிழர்” என்னும் மாதாந்த்ரப்பத்திரிகை தமிழ் மொழியில் வசன நடையில் நூல்களில்லை என்னும் குறையைக் கொஞ்சம் வரையில் தீர்த்து விட்டது. அன்றியும் படிப்போர் கல்வி, கேள்விகளுக்குத் தக்கவாறு உயர் நடையிலும், எளிய நடையிலும் பல அருமையான கட்டுரைகளைக் கொண்டிருப்பதால் பலவகைப் பள்ளிக்கூடங்களுக்கும் ஏற்றதாயிருக்கிறது. ஆகையால் இந்தப் பத்திரிகையைச் சிறுவர்களுக்குக் கிட்டுமாறு செய்பவர்களெல்லோரும் தமிழ்த்தாய்க்கு ஊழியம் செய்பவராவர். அன்றியும் பெரியோர்கள் எத்தொழிலைப் பின் தொடர்பவரானாலும் சரி, பயிர்த்தொழில், வணிகம், மற்றைய கைத்தொழிலைப் பின் தொடர்பவரானாலும் சரி, அவரவர்கட்குத் தக்க பொருள்களைப்பற்றியும் கட்டுரைகள் இதில் அமைந்துள்ளன. ஆதலால், இவர்களெல்லோரும் இப்பத்திரிகையை ஆதரிக்கவேண்டும். தமிழர் தங்களது பிளவுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் தமிழ் நாட்டின் உயர்வைக் கோரவேண்டுமென்பதே “தமிழர்” பத்திரிகையின் கருத்தாம்.

திருச்சிராப்பள்ளி,
குரோதன, ஆடி, உங.

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

"தமிழ்ப் பொழில்," தஞ்சை.

(குரோதன-ஞூ ஆனி-மீ 1925 ஜூன்-ஜூலை.)

மதிப்புரை:—"தமிழர்" இது தமிழரின் முன்னேற்றம் கருதி, தமிழ் வளர்ச்சி, கைத்தொழில், பயிர்த் தொழில், வாணிகம், அரசியல், செய்தி வெளியீடு முதலிய பல நெறிகளில் வெளிவரும் அரிய கட்டுரைகளைக்கொண்டு குரோதன சித்திரையிலிருந்து வெளிவரும் சிறந்ததோர் திங்கள் வெளியீடு. இதன் ஆசிரியர் திருவாளர். உ. க. பஞ்சரத்தினம் பிள்ளையவர்கள். தாய்நாடு, தாய்மொழிப்பற்றுக்களில் தலைசிறந்து விளங்குபவர். எண்ணியவற்றை எண்ணியகாலையே தொடங்கி நடாத்தும் திண்ணியர். தாள்ஆளர் ஆதற்கு உரியதாளாளர். கட்டுரை எழுதும் பிறரும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லுநராவர். தமிழ் நூல்களில் உயர்ந்த முடிபுகளும் ஆங்கில வெளியீடுகளின் அரிய முடிபுகளும் உள்ள கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. பொது (உயர்ந்த)ப் பதிப்பு, மாணவர்பதிப்பென இருவகைப்படுவனவற்றுள் யாம் பெறும் மாணவர் பதிப்பும் அச்சுநலம் முதலிய திகழ்ந்து நன்குறுதலின் உயர்பதிப்பின் நலத்தினைக் கூறல்வேண்டா. தமிழராவார் ஒவ்வொருவரும் பெற்று மகிழ்வாராக.

கிடைக்கும் இடம்.—அமைச்சர் "**தமிழர் நிலையம்,**" மலைவாசல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

"ஊழியன்"

(காரைக்குடி, ஆடிமீ 13உ 28-7-25.)

இத்திங்கள் வெளியீட்டின் முதலாவதாண்டின் முதலிரண்டு இதழ்கள். வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. பஞ்சரத்தினம் பிள்ளை அவர்கள் ஆண்டுக்கட்டணம் உள்நாட்டிற்கு ரூ. 2-8-0 வெளிநாடுகட்கு ரூ. 3. மாணவர் பதிப்பு ரூ. 2-0-0. ஆயுட்காலசந்தா ரூ 25-0-0. கிடைக்கும் இடம் "தமிழர் நிலையம், 23, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி". இது தமிழர் முன்னேற்றத்தைப் பலமுறையிலும் நாடுதற்கு காணப்பட்டதாக ஆசிரியர் குறிக்கின்றார். இந்நாள், தாழ்நிலையுற்றுக் கிடக்கும் தமிழரை முன்னேற்ற நல்ல வெளியீடுகள் வேண்டப்படுவனவே. "தமிழர்" பலநல்ல கட்டுரைகளைத் தாங்கி வந்திருக்கின்றது. தமிழரை வளர்த்தல் தமிழர் கடனே.

உ

தமிழ்

ஒரு உயர்ந்த தனித்தமிழ் மாதப்பட்டிகை.

மலர்—க. திருச்சிராப்பள்ளி, குரோதன, ஆடி, இதழ் ச

"அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"—(திருக்குறள்)

இந்திய வறுமை.

இந்தியாவைப் போல் வறுமையினால் வருந்தும் நாடு இவ்வுலகத்திலேயே இல்லை யென்று துணிவாகச் சொல்லலாம். நம்மைப் படைத்த இறைவனால் நம் நாட்டுக்கோ மக்களுக்கோ ஒரு குறையும் ஏற்படவில்லை. உயர்ந்த மலைகளையும் நீண்ட ஆறுகளையுமுடைய வளமிக்க அழகுபொதிந்த நாட்டை நமக்கு உதவினான்; மற்ற நாட்டார் விலங்குகள் போல் திரிந்துவந்த நாளிலேயே நல்லறிவையும் நாகரிகத்தையுங் கொடுத்தான்; பல வீரர்களையும் பேரறிவாளர்களையும் ஈந்தான். பல தலைசிறந்த சமயங்கள் நம் நாட்டில் தோன்றித் திகழ்ந்தன; பல கைத்தொழில்கள் ஓங்கி வளர்ந்து விளங்கின; தரைவழியாகவும் கடல் வழியாகவும் வணிகம் சிறப்புடன் நடைபெற்றது. கடவுள் நமக்கு ஒருவித குறையையும் வைக்காதிருந்தும் நமது அறிவின்மையால் நமது பொருளையும் பலவித உரிமைகளையும் இழந்து, அவைகளைத் திரும்பவும் இழக்காதிருப்பதற்கும், இழந்தவைகளைத் திரும்பப் பெறுவதற்கும் வழிதேடாமல் அல்லற்படுகின்றோம். கல்வியில்லாது, கொசுக்கள் போல் நோய்களால் இலட்சக் கணக்காக மடிந்து, பிறநாட்டு மக்கள் போல் வீரமும் ஊக்கமும் ஒற்றுமையும் எய்தி நமது நிலையை உயர்த்திக் கொள்ளாது, காலந் தாழ்த்து வருவோமெனின் விரைவின் நம் வளநாடு பெரும் பாலைவனமாகமாறிவிடு மென்பதில் ஐயம் சற்றும் இலது.

நாம் இவ்வாறு வறுமை நோயால் துன்புறுவதற்குக்காரணம் நமது செல்வத்தைக் கவலையுடன் காப்பாற்றி வாராததே. இந்திய நாட்டைவிட்டு ஒவ்வொரு ஆண்டும் வெளிச்செல்லும் பணத்திற்குக் கணக்கில்லை. பட்டாளத்திலும் மற்ற அரசியற் பதவிகளிலும் அம

ர்ந்து ஓய்வுச் சம்பளம் பெற்ற ஆயிரக்கணக்கான ஆங்கிலர்களுக்
கும், இப்பொழுது நம் நாட்டில் உயர்ந்த வேலைகளில் அமர்ந்துள்ள
ஆங்கிலேயர்களின் சம்பளத்தினின்று அவரது மனைவி மக்களுக்கும்,
இலட்சக் கணக்காகப் பணம் ஆண்டுதோறும் அனுப்பப்பட்டு வரு
கின்றது. ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளி
லிருந்து நமக்குத் தேவையான பொருள்களுடன் தேவையில்லாத
பொருள்களும் இயந்திரங்களாற் குறைந்த விலைக்குச் செய்யப்பட்டு
நம் நாட்டிற் கொண்டுவந்து குவிக்கப்படுகின்றன. இத்துடன் பிற
நாட்டார் நமது நாட்டில் நிதியங்கள் ஏற்படுத்திக் கொடுக்கல் வாங்கல்
செய்தும், இயந்திரச்சாலைகள் அமைத்துக் கைத்தொழில்கள் நடாத்தி
யும் பெரும் பொருள் ஈட்டி தமது நாட்டிற்கு அனுப்பிவருகின்றனர்.
இத்தனையாண்டுகளாக நம்மையாண்டுவரும் ஆங்கிலேயருக்கு இந்திய
கைத்தொழில்களைச் சிதையாது காக்கவும், இந்தியரின் வணி
கத்தை ஊக்கவும், உயர்ந்த அரசியற் பதவிகளுக்குப் பெரும்பாலும்
இந்தியர்களையே நியமிக்கவும், கட்டாயக்கல்வி புகட்டவும், இந்தியப்
பட்டாளத்தை உண்மையான இந்தியப்பட்டாளமாக மாற்றவும், இந்
தியக்கப்பற்படை யொன்று உண்டாக்கவும், இந்தியரின் செல்வத்தை
மேன் மேலும் வளரச்செய்யவும், இந்தியரைத் தன்னரசு பெறும்
நிலைக்குக்கொண்டுவரவும் மனமில்லாமற் போயிற்று. ஆங்கில அர
சாட்சியால் நமக்கு ஏற்பட்ட நன்மைகள் அவையிவை யென நாம்
பள்ளிகளில் இளமையில் மனப்பாடஞ்செய்துள்ளோம். இருப்புப்
பாதைகள், தந்தி, அஞ்சல் (தபால்) முதலியவைகளெல்லாம் பட்டிக்
காட்டார்களுக்குத்தான் மலைப்பைத்தரும். பணமிருந்தால் எந்நாடும்
இவைகளை எளிதில் தேடிக்கொள்ளும். இவைகளால் நமக்கு ஏற்
படும் நன்மைகளுக்கு மேல் ஆங்கிலேயருக்கு நன்மைகள் உள.
வெளிநாட்டுப்பொருள்களை கிராமாந்தரங்களுக்குச் சென்று விற்
பனை செய்யவும், ஆங்கில நாட்டிற் செய்யப்படும் தண்டவாளங்களும்
இயந்திரங்களும், கம்பிகளும், உயர்ந்த சம்பளங்களில் வேலைக்காரர்
களும் சீமையிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரவும், நமது
நாட்டை அரசியல் பிழைத்தாரினின்றும் பகைவரிடமிருந்தும் பாது
காக்கவும் இருப்புப்பாதைகள், தந்தி முதலியன அதிகமாகப் பயன்
படுகின்றன. இந்தியருக்கு ஆங்கிலேயரால் ஒரு நன்மையும் இல்லை
யென்று துணிவாகச் சொல்ல இயலாதெனினும் ஆங்கிலேயர்
பெருத்த வியாபார மக்களாகையால் இந்தியக் கைத்தொழில்களுக்
கும் வணிகத்துக்கும் இதுவரை மனமார ஒரு நன்மையையும் செய்ய
வில்லை யென்று துணிவாகச் சொல்லலாம். நமது பொதுக்கடன்,
நாணயம் அச்சிடுதல், நாணய மாற்றல், துறை முகவரி (Public Debt
Currency, Exchange and Excise) முதலிய விஷயங்களில் இந்தி
யருக்கு வெகுகாலமாக இன்னல்கள் நேர்ந்து வந்துள்ளன. பழைய
இந்தியர் பொது மகாசபை (Indian National Congress)ம் திரு

வாளர்கள், உரோமேச்சந்திர தத்தர், தா்காபாய் நௌரோஜி, கோக்லே, முதலிய பொருள் நூலறிஞர் பலர் நமது அரசாட்சியாரின் கவனக் குறைவைக் கடிந்து வரைந்தும், பேசியும், வந்தும் இதுவரை யாதொரு பயனுமில்லாது போயிற்று.

நம் நாடு இனியேனும் தனது செல்வத்தை இழக்காது வளனெய்தி உய்யும் வழிதான் என்னே? இவ்வுலகத்தில் பொருளில்லாதார் இருந்தென்ன, போயென்ன? அவர்களுடைய வாழ்வுதான் என்னே? தூய நெறிகளிற் செல்வம் ஈட்டலும், அவ்வாறு தேடிய செல்வத்தை "இறைவன் தந்த தெனக்" கொண்டு வறியார்க்கும் பிணியாளர்க்கும் உதவி தாமும் இன்புற்று வாழ்வதும் நமது கடமை. "தன்னரசு, தன்னரசு" என்று கூக்குரலிடுவதெல்லாம் எதற்காக? மக்கள் இப்பொழுதைவிட பல நலன்களைப்பெற்று இன்புற்று வாழ்வதற்காகத்தானே? எனவே, தன்னரசுக்குப் போராடுவதைச் சற்றுக் குறைத்து நமது பல்வேறு வளர்ச்சித்துறைகளும், கைத்தொழில்களும், பயிர்த்தொழிலும் மேம்படும் வழிகளைத் தேடுவதிற் பேரூக்கம் காட்டவேண்டும். அரசாட்சியாருடன் இத்துறைகளிற் போராடிக் கைத்தொழில்கள் செழித்தோங்குவதற்காகப் பாதுகாப்பும் (Protection), பயிர்த்தொழில் மேம்பட நீர்ப்பாய்ச்சல் வசதிகளும் வரிக் குறைவும் அவசியமென்றும், உயர்ந்த அரசியற் பதவிகளிலும் இந்தியர்களையே நியமித்தல் வேண்டுமென்றும் சரியான துறைகளில் வழக்காடிச் சிறுகச்சிறுகவாவது சில நன்மைகளைத் தேடிக்கொள்ளவேண்டும். தன்னரசுவரும்போது வரட்டும்; அதுவரையில் நாம் நமது செல்வத்தை இழந்துவருவது அழகாகாது.

இத்துடன் நில்லாது, நம்மவர் எல்லோரும் தம்மால் முடிந்தவரையிலும் வெளிநாட்டுப் பொருள்களை விலக்கி உள்நாட்டுப் பொருள்களையே வாங்கிக்கையாளவேண்டும் என்னும் உறுதிகொள்ளவேண்டும். இருநிதியம் படைத்த பெருமக்களும் வாழ்க்கைக்கு இன்றியமையாத வேண்டாதனவாகிய வெளிநாட்டுப் பொருள்களை வாங்கவே கூடாது. விலையுயர்ந்த வெளிநாட்டுத்துணிகளை வாங்குவதும், வகைவகையாக ஆங்கில நாகரிக முறையில் உடுப்புகள் உடுத்திக்கொண்டு உலாவுவதும், வெளிநாட்டு உண்பண்டங்களையும், கள், லாகிரி வகைகளையும் உண்டு களித்தலும், புதிது புதிதாகத் தமிகியியங்கள் (Motar Cars) வாங்கி அவைகளில் வேலையொன்றுமில்லாது அங்குமிங்கும் ஊர்ந்துசெல்வதும் நம் நாட்டுச்செல்வர்களின் பழக்கமாயிருந்துவருகிறது. நாம் துணிகளில்மட்டும் அறுபதுகோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டிலும் வெளிநாடுகளுக்குக் கொடுத்துவருவதாகத் தெரிகிறது. எனவே, உள்நாட்டுத்துணிகளையே நாம் பெரும்பாலும் வாங்கவேண்டியது நமது கடமையாகும். உள்நாட்டுத்துணிகளிலும் கதர்த்துணி வாங்கி கட்டுபவர்களே மிகவும் சிறந்தவர்க

ளென்பதை யாவரும் மறுக்கார். கதர் கட்டுவதால்மட்டும் நமக்குத் தன்னரசு உடனே கிடைத்துவிடுமென்று நினைத்தல் அவ்வளவு சிறந்த கொள்கை என்று எமக்குப் புலனாகவில்லை. கதர் கட்டுவதால் நம் நாட்டுக்கு அதிக நன்மை யுண்டாகிறதென்பதை எவரும் ஒப்ப வேண்டும். கதர்த்துணி மிகவும் முரடாயிருப்பதாலும், உயர்ந்த விலைக்கு விற்பதாலும், விரைவில் கிழிந்துபோவதாலும், விரைவில் அழுக்குப் பிடிப்பதாலும், பார்வைக்கு அழகாயில்லாததாலும் நாம் அத்துணியை விரும்புவதில்லை. காந்தியடிகள் சொல்வதுபோல் நம் மக்கள் ஒவ்வொருவரும் ஒழிந்த நேரங்களில் நூல் நூற்றுத் தமக்குத் தாமே துணி நெய்துகொள்வார்களானால் கடைக்குச் சென்று கதர்த் துணி வாங்கவேண்டிய அவசியமிராது. அதிக விலைக்கும் விற்காது. இவ்வளவு கஷ்டங்களுடனும் கதர்த்துணியையே கட்டுவோமென விரதம் பூண்டு அவ்விரதத்தைக் கைவிடாது காப்பாற்றி வருபவர்கள் மிகவும் சிறந்தவர்களென்பதில் யாதும் ஐயமில்லை. கதர்த்துணியையேவாங்கி உடுப்பதற்கு அதிதீவிரபக்குவமில்லாத ஒரு சிலரும் உள்நாட்டு நெசவுத் துணிகளையாவது வாங்கலாம். நாம் கடைக்குச் சென்று துணிமணிகளும், தட்டுமுட்டுகளும், தின்பண்டங்களும் வாங்கும்போதெல்லாம் நம் நாட்டில் அரைவயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழியற்று வருந்தும் கணக்கற்ற மக்களை நினைவுகூறவேண்டும்.

வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை நம் நாட்டிலேயே உண்டாக்கிக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே நமது பழைய கைத்தொழில்களையும், புதிதாக நமக்கு வேண்டியுள்ள கைத்தொழில்களையும் விரைவில் சிறந்த முறைகளில் நம் நாட்டில் நிலைநாட்ட வேண்டும். கைத்தொழில்களை வளர்ப்பதற்குக் குடிசைக் கைத்தொழில் முறை நல்லதா, இயந்திரக்கைத்தொழில்முறை நல்லதா என்று ஊன்றிப்பார்க்குமிடத்து, குடிசைக்கைத்தொழில் முறையே பலவழிகளிற் சிறந்ததெனப் புலப்படும். மேல் நாடுகளில் மக்களின் கூலி மிக உயர்வு; பணமோ மிகமலிவு. நம் நாட்டில் மக்களின் கூலி மிகக் குறைவு; பணமோ எளிதிற்கிடைக்காது. மேலும் இயந்திரச் சாலைகளில் வேலைசெய்வதால் மக்களுக்கு உடல் நலமும் நன்னடத்தையும் நல்லுணர்ச்சியும் கெட்டுப்போம். பொருளாளர்க்கும் தொழிலாளர்க்கும் எப்பொழுதும் சண்டை நேரிடும். பரந்து யாவர்க்கும் இன்பமளிக்காமல் இயந்திரக் கைத்தொழில்முறை ஒரு சில மக்களிடத்தே பொருளைக் கொண்டுபோய்க் குவிக்கும். பொருளாளர் குறைந்த கூலி கொடுத்து பெருத்த ஊதியம் பெற விரும்புவர்; தொழிலாளர்களோ கூலிக்கு மாரடித்துவிட்டு, நல்ல சமயத்தில் வேலை செய்வதை நிறுத்திவிட்டு அதிகக்கூலிவேண்டுவர். குடிசைக் கைத்தொழில்களில் செய்த வேலைக்குத்தான் கூலி கிடைக்கும்; மேற்கூறப்பட்ட குறைபாடுகள் இல்லை. இயந்திரச் சாலைகளுக்குச் செல்ல விருப்பமில்லாத பெண் மக்களும் ஏனையோரும் தமக்கு

ஒழிந்த நேரங்களிலெல்லாம் தமக்குத்தெரிந்த பலவேறு கைத்தொழில்களைச் செய்துவரலாம்.

எனவே, அதிகப் பணச்செலவுசெய்து மின்சாரத்தின் உதவியைக் கொண்டு இயந்திரச் சாலைகளமைத்துத் திரண்ட வணிகப்பொருள்களைச்செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து ஊதியம்பெற நம்மால் ஆகாது. நாம் பிறருடைய ஆளுகைக்குட்பட்டவர்களாகையாலும், அறிவுவளர்ச்சிக்குவேண்டிய தற்கால இயல்புகளெல்லாம் மிகக்குறைவாகவே விருத்தலாலும், வெளிநாட்டுப் பொருள்களைப் பலகாலமாக வாங்கி நமது கைத்தொழில்களைக் கவனிக்காது விட்டுவிட்டோம். நமக்குவேண்டிய பொருள்களை நாம் நம் நாட்டிலேயே செய்துகொண்டாற் போதும் பிறநாடுகளுக்கு அனுப்பிப் பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற எண்ணமே இதுபோது நமக்குவேண்டாம். குடிசைக் கைத்தொழில்களைக்கொண்டே பெரும்பாலும் நம் நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவரக்கூடும். மேல் நாட்டிலும் நமது நாட்டிலும் இயந்திரங்கள் இத்தனையாண்டுகளாகப் போட்டியிட்டுவந்தும் நமது குடிசைக் கைத்தொழில்கள் முற்றும் ஒழிந்துபோகாமல் சமாளித்து வருகின்றனவென்றால் இயந்திரங்களை கண்டுபிடிக்கப்படாதகாலத்தில் நமது குடிசைக் கைத்தொழில்கள் சீரியநிலையிலிருந்து வந்தமையும், சிலந்திவலைபோன்ற துணிகளும் நம்மவர்களாற் செய்யப்பட்டு ஏற்றுமதியாகிவந்தனவென்பதும் வியப்பல்ல. ஆகவே, வெளிநாட்டுப்பொருள்களை மிக உயர்ந்த துறைமுகவரிகளால் உள்ளே வாராமல் தடுத்துவிட்டால் (Protective Tariff) நமது குடிசைக் கைத்தொழில்கள் விரைவில் நன்னிலைக்கு வந்துவிடும். இக்கைத்தொழில்களைத் தொடங்குவதற்கு வேண்டிய சிறு மூலப்பொருள்களைக்கொடுத்து உதவவும், அவர்களுக்கு வேண்டிய பருத்தி முதலிய வெற்றுப்பொருள்களை மொத்தமாகக் குறைந்தவிலைக்கு வாங்கி பங்கிட்டுக்கொடுக்கவும், அவர்கள் செய்துமுடிக்கும் துணி முதலிய பண்டங்களை நல்லவிலைக்கு விற்றுக்கொடுக்கவும் பலவிதமான கூட்டுறவு நாணயச் சங்கங்கள் (Cooperative Banks and Societies) நிறுவப்படல்வேண்டும்.

இவ்வழிகளில் நமது கைத்தொழில்களுக்கு உயிருண்டாக்கிப் பயிர்த்தொழிலையும் சீர்படுத்திக்கொள்வோமானால் நாம் விரைவிற் செல்வம் எய்துவோம். நம் நாடு என்றும் வறுமைப்பிணியால் நலியாது. வறுமை ஒழிந்தால், கல்வி மிகும். நோய்கள் அகலும். அறம் வளரும். நாகரிகம் உயரும். மக்கள் இயலிசை நாடகத்துறைகளில் இறங்கி இன்புறுவர். நாமும் நாளடைவில் தன்னரசு பெறுவோம். மற்ற நாட்டார் நம்மை ஒத்தநண்பராகக் கொண்டாடுவர்: எவரும் நமக்கு இன்னல் இழைக்க அஞ்சுவர். இந்தியநாடு அப்போது இந்திர உலகமாக விளங்கும்

தாள் ஆளர்.

கோப்பெருஞ் சோழர்,

அல்லது நட்பின் பெருமை.

(135-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வரசர் பெருந்தகையாகிய கோப்பெருஞ் சோழருக்கு இரண்டுமக்கள் உளராயினர். 'மகனுரைக்கும் தந்தை நலத்தை' என்றும், 'தக்கார் தகவிலரென்ப தவரவர்—எச்சத்தாற் காணப்படும்' என்றும் ஆன்றோர் கூறும் பொதுநீதிக்கு விலக்காக ஓரோவழித் தகவிலார்க்கு நன்மக்களும், தகவுடையாருக்குத் தீயமக்களும் உண்டாகின்றனர். கோப்பெருஞ்சோழரின் மக்களும் பாற்கடலிற் றோன்றிய ஆலகாலம்போலும் கொடியபண்பினராயிருந்தனர். அன்பிற்கே நிலைக்களமாகிய தம் அருமைத்தந்தையுடன் போர்செய்யவும் எழுந்தனரென்றால் அன்னவரின் தீயபண்பை என்னென்றெடுத்துரைப்பது? கொடியவர்களான மக்கள் போர்குறித்து வருதலைக் கோப்பெருஞ்சோழர் கண்டார். சினங்கொண்டார். தாமும் போர்செய்தற்கு அக்கொடியார்மேற் சென்றார். அப்பொழுது அங்கிருந்து அந்நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர்க்கு ஓர் நல்லெண்ணம் உண்டாயிற்று. அஃது அவருக்கு இயற்கையுமாகும் அருஞ்சீர்த்திப் பெருஞ்சோழரைப் போர்செய்யாது தடுக்கவேண்டுமென்பதே அவரது எண்ணம். பெருங்கோவைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினர்:

"அமரின்கட் பகைவரை அடுதல்செய்த வென்றியையும், வலிய முயற்சியையும், நிலமுழுதும் நிழல்செய்யும் வெண்கொற்றக் குடையினையும் உடையவேந்தே, நின்னுடன் போர்செய்தற்கு வந்த இருவரையும் பார்க்குமிடத்து அவர்கள் நின்பகைவேந்தர்கள் அல்லர். நீயும் அவர்க்குப் பகைவன் அல்லை. தோன்றலே, நீ இவ்வுலகத்துப் பரந்தபுகழை எய்தித் தேவருலகத்தை யடைந்தபொழுது நின்னால் ஒழிக்கப்பட்ட அரசாட்சியுரிமை அவர்க்குரியது; அதனையும் நீயே அறிவை. புகழைவிரும்புவோனே, நின்னுடன் போர்செய்தற்கெழுந்த சூழ்ச்சியற்ற அறிவினையுடைய நின்புதல்வர் தோற்பின் நின்பெரிய செல்வத்தை அவருக்கன்றி யாவர்க்குக் கொடுப்பாய்? நீ அவருக்குத் தோற்பின் நின்னையிகழும் பகைவர் உவக்கும்படியாக இவ்வுலகத்தே பழியைநிறுத்துவாய். ஆகலால், நினது மறன் ஒழிவதாக; விண்ணோர்கள் விருப்புடன் நின்னைவிருந்தாக எதிர்கொள்ளுமாறு நல்வினைசெய்தல்வேண்டும். அதற்கு விரைந்து எழுக; நின் உள்ளம் வாழ்வதாக."

இவ்வாறாக நல்லிசைப்புலவரால் தெருட்டப்பெற்றபின் பெருங்கோவின் உள்ளத்திற் பொங்கியெழுந்த சினம் 'இடுநீற்றாற் பையவிந்த

நாகம்போல்'' அடங்கிவிட்டது. எனினும் மானம் என்பது அரசர்க்கு உயிரினுஞ் சிறந்ததாதலின் அவர் பின் உயிர்வாழ ஒருப்பட்டிலர். 'மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே' 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்-உயிர்நீப்பர் மானம்வரின்' என்பன ஆன்றோரின் முதுமொழிகளல்லவா? தம் மக்களால் தமது குலத்திற்கும், தமக்கும் பழியுண்டாதலையுன்னி உயிர் துறக்கத் துணிந்தார் பெருஞ் சோழர். தற்கொலை செய்துகொள்வதில் பழியில்லாததொருவழியை முற்காலத்தவர் கைக்கொண்டிருந்தனர். அதுதான் வடக்கிருத்தல் என்பது. வடக்கிருத்தல் என்றால் யாதானும் இன்றியமையாக் காரணம்பற்றி உயிர் துறக்கத் துணிந்தவர் ஆற்றிடைக்குறைபோலும் தூயதொரு தனியிடத்தையெய்தி, வடக்குநோக்கியிருந்து, உணவு முதலியன துறந்து, கடவுட் சிந்தையுடன் உயிர்விடுதலாம். பெருங்கோவும் அங்ஙனமே வடக்கிருத்தலை மேற்கொள்வாராயினர். வடக்கிருக்குங்கால் உலகத்தார்க்கு அறத்தின் மேன்மையைத் தாம் தெளிந்தவாறு அறிவுறுத்திச் சொல்லவேண்டுமென்று அவர்க்கு விருப்பமுளதாயிற்று. தாம் உயிர் துறக்கும்பொழுதும் உலகத்தாருக்கு உதவிசெய்வதே உயர்ந்தோரின் நோக்கமெனபதற்கு இஃதொரு சான்றாம். தாம் அறிவுறுத்தக் கருதியதனை நாம் என்றும் போற்றுவதொரு செந்தமிழ்ச் செய்யுளாகப் பாடித்தந்தனர் நம் புவிக்கரசாகிய கவிக்கரசர், அது,

''செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனில்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே''.

என்பது. (புறநானூறு)

இதன்பொருள்: 'அழுக்குநிறைந்த தெளிவில்லாத உள்ளத்தினையுடையோர் அறத்தினைச்செய்வோமோ செய்யாதிருப்போமோ என்று கருதி ஐயம்நீங்காதவராகின்றனர்; யானைவேட்டைக்குச் செல்வோன் யானையையும் எளிதாகப்பெறுவன்; காடைவேட்டைக்குச் செல்வோன் அது பெறாமல் வெறுங்கையுடனும் திரும்புவன்; அதனால் உயர்ந்த

விருப்பத்தையுடைய உயர்ந்தோர்க்குத் தாம்செய்த நல்வினைப்பகுதியால் அதனை நுகர்தல் உண்டெனின், அவர் இருவினையும் செய்யாத உம்பருலகத்தின்கண் இன்பமனுபவித்தலும் கூடும்; அவ்வுலகத்து நுகர்ச்சியில்லையாயின், மாறிப்பிறக்கும் பிறப்பு இல்லையாகவும் கூடும்; மாறிப்பிறத்தலென்பதே இல்லையென்று சொல்வாருளராயின் இமயமலையின்சிகரம் ஓங்கினாற்போன்ற தமதுபுகழை நிலைபெறுத்தி வசையில்லாத உடம்பொடு கூடிநின்று இறத்தல் மிகவும் பெருமையுடையது; அதனால், எவ்வாற்றானும் நல்வினைசெய்தல் அழகிது' என்பது.

இங்ஙனம் அறிவுறுத்தருளி, அங்கே குழுமியிருந்த சான்றோர்களைப்பார்த்து 'என்நண்பன் பிசிராந்தை இப்பொழுது வருவன்' என்று பெருஞ்சோழர் கூறினர். சான்றோர்களோ அவர் வாரார் என்றனர். அது கேட்டதும் பெருங்கோவானவர்' என் உயிரைப் பாதுகாக்கும் நண்பன் பாண்டி நாட்டுள்ளும் சேய்மையிலுள்ளதாகிய பிசிர் என்னும் ஊரிடத்தான் என்று சொல்லுவர்; எனினும்; நாம் செல்வம் உடைய காலத்து அவன் வாராதிருப்பினும் யாம் துன்புறுங்காலத்து வாரா திருப்பானல்லன்' என்றனர். சான்றோர்கட்கோ ஐயந்தீர்ந்தபாடில்லை, கோப்பெருஞ்சோழர் பின்னரும் கூறுகின்றார். "நிறைந்த அறிவினையுடையீர், 'அவன் நின்னைக் கேள்வியுற்றிருப்பதல்லது சிறிதுபொழுதும் கண்டதில்லை; பல ஆண்டுகள் தவறாது பழகிப்போந்த உரிமையுடையராயினும் நீ கூறிய வாறு வழுவுதலின்றி யொழுகுதல் அரிதேயாகும்' என்று கருதி ஐயுறாதொழிவீராக; அவன் என்றும் என்னைப் புறக்கணித்தவனல்லன், இனிய குணங்களை யுடையன்; பிணித்தநட்பினை யுடையன்; புகழை யழிக்கும் பொய்ம்மையை விரும்பான்; தன்பெயரைப் பிறர்க்குச் சொல்லும்பொழுது 'என்பெயர் கோப்பெருஞ்சோழன்' என்று என் பெயரையே தன்பெயராகச்சொல்லும் அன்பின் உரிமையையும் உடையன்; அதன்மேலும் இப்படி யான் துயருறுங்காலத்து ஆண்டு நில்லான், இப்பொழுதே வருவன்; அவனுக்கு இடமொழித்து வைப்பீராக" என்றனர்.

(தொடரும்)

பண்டிதர்,

மு. வேங்கடசாமி நாட்டார்.

பரதகண்டமும் பன்னாட்டார்குழூஉவும்.
(India and League of Nations).

பரதகண்டம் புண்ணிய பூமி யென்பர். பரதகண்டம் இக்காலத்தில் இந்தியா என்ற பெயர் பெற்றுளது. அது தற்காலத்தில் ஆங்கிலவாட்சியிலிருக்கின்றது. ஆங்கிலேயர் இந்நாட்டாருக்குச் சிறிது சிறிது ஆட்சி நயங்காட்டிவந்தனர். தன்னாட்சிவழியில் ஊர்நலம்பார்த்தல், சிறிய பெரியநாட்டாண்மை செய்தல், மாகாணவாட்சியுரிமை யெய்தல் முதலானவற்றைப் படிப்படியாக ஏற்படுத்தினர். 1914-ல்ஐரோப்பாக்கண்டத்தில் பெரும் போர் விளைந்தது. ஆங்கில நாட்டாருக்கு இந்நாட்டினுதவி வேண்டியிருந்தது. இந்நாட்டார் நட்புரிமையும் நன்றியும் பாராட்டி இடுக்கண்களையத்தலைப்பட்டுப் பொன்னும் பொருளும் படையும் உதவினர். இந்தியப்படை செர்மானியப்போரில் காட்டிய வீரத்தை எவரும் மெய்ச்சினர். 1919-ஆம் ஜூன்-மீ 28ல் வெர்சேலிஸ் (Versailles) நகரத்தில் நிகழ்ந்த சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டார் பலரில் இந்நாடுமொன்றே. கையொப்பமிட்டவர்கள் பன்னாட்டார் குழூஉவொன்று ஏற்படுத்த இணங்கினர். அவரினும் இந்தியா ஒன்றேயாம். நிகழ்காலத்தில் ஐம்பத்தைந்து நாடுகள் இக்குழூஉவில் சேர்ந்துள. ஒவ்வொருநாடும் தன்னாட்சியுடையது. இந்தியா வொன்று மட்டுமே அப்பதவி பெறவில்லை. முதலில் கையொப்பமிட்ட இருபத்தொன்பதின்மரினும் இந்தியா ஒன்றாம். தன்னாட்சிபெறாத இக்கண்டம் அதுபெறுமாறு குழூஉ உதவி புரிதல் கடமையாம். தங்கள் நாட்டின் ஆட்சியைத்தாமே பெறுவிடின் குழூஉவினருதவியால் பெறலா மென்றெதிர்பார்த்தல் கூடாதென்றனர் கில்பர்டமரே (Gilbert Murray) எனும் பேராசிரியர் (வாத்தியார்). மேலும் குழூஉவுறுப்பினர் ஒவ்வொருவரும் உடன்படிக்கை முதலானவற்றில் கையொப்பமிடுவதாயிருந்தால் அன்னார்கையொப்பம் அன்னாட்டாரைக் கட்டுப்படுத்தக் கூடியதாயிருத்தல் வேண்டுமென்றும் அவர் கூறினர்.

செனீவா (Geneva)வில் நிகழ்ந்த குழூஉ வில் இந்நாட்டிற்காகப் பேசிய உறுப்பினர் மூவர். ஸர் ஆலி இமாம் (Sir Ali Imam) என்பவர் பாதி துலுக்கர், பாதி கிறித்தவர் கூடிவாழும் ஆல்பேனிய (Albania) நாட்டையும் குழூஉவில் சேர்த்தல்வேண்டி மனங்கவரப் பேசினர். வெகுசீர் சீனிவாச சாஸ்திரியாரும் நன்றாக வழக்குரைத்தனர். நவநகர் சாம்சாகேபும் (Navanagar Jam Sahib) டைபஸ் சுரத்தை யொழித்தல்பற்றி எவரு மெய்ச்சுமாறு உரை நிகழ்த்தினர்.

1925-ஆ இந்தியாவின் வரவு செலவு பட்டியலில் படைச் செலவிற்காக 56 கோடி 95 நூறாயிரம் காணப்படுகிறது. இந்தியாவின் வரும்படி 133 கோடி 68 நூறாயிரம். 100க்கு 42 படைக்குச் செலவாகின்றது. இத்தொகை சாலப் பெரிது. ஏனெனில் இந்நாட்டிற்கு இராணுவப்படை தவிர கப்பற் படையே கிடையாது. பன்னாட்டார் பெருங் குழூஉ ஏற்பட்டிருத்தலால் பெரும்படை தேவையில்லை. இந்நாட்டின் நலம்பற்றித் தீராதுவேண்டும் படைச் செலவை மட்டும் எடுத்துக்கொண்டு எஞ்சியதை வேறு நல்வழிகளிற் செலவு செய்தால் நாடு செழிக்கும், துயரடையாது. ருசியாவும் ஆப்கனிஸ்தானும் பெருங் குழூஉவில் உறுப்பினராய்விடின் இராணுவச் செலவை அதிகமாக்க் குறைத்துவிடலாம் ஏனெனில் இவ்விரு நாட்டார் படையெடுப்புப் பயம் நீங்கிவிடும்.

தொழிற்கழக சம்பந்தமாக சில நலன்கள் இந்நாடு பெற்றிருக்கின்றது. வாரத்தில் 60 மணி வேலை, 12 ஆண்டுள்ள பிள்ளைகளுக்குத் தொழிற்சாலையில் நாடோறும் ஆறுமணி மட்டும் வேலை, 10 ஆள் வேலை செய்யுந் தொழிற்சாலைகளும் சட்டத்திற்குள்பட்டன. தீக்குச்சுகளில் வெள்ளை பாஸ்பரஸ் (நீரெரி) வழங்கக்கூடாது என்பனவாம். வேலையில்லாமல் குடியேறிய புதுக்குடிகள் தட்டுத்தடையன்னியில் வேலையிலமரலாம். விருப்பப்படி மாறுதல் செய்யலாம். வேலையற்றவர்களின் இன்சூரன்ஸ்படி தமக்குள் நடவடிக்கைகள் நடத்தலாம். இவை முதலான நன்மை பயக்கத்தக்க பல ஏற்பாடுகள் பெருங் குழூஉ செய்திருக்கின்றது. அபின் விஷயமாக சென்றால் (Central) போர்டு ஒன்று ஏற்படுத்துகிறதாகவும் முடிவு செய்யப்பட்டது. அபின் அழிவைப்பற்றி 1925-ஆ மார்ச்சு மீ 12, 13ல் இந்திய அசம்பிளி (Assembly) யில் பேச்சு நிகழ்ந்தது. அபின் இலாகா பிரிவுக்குண்டாகிய செலவு குறைவுபடவேண்டுமென்று அச்சபை முடிவு செய்தது. கல்வி, சாத்திரம் இவை சம்பந்தமாகப் பன்னிருவர் கொண்ட கமிட்டியில் இந்தியாவும் ஒருறுப்பினராம். ஆதலால் இந்திய தத்துவக்களஞ்சியப் பொருள்கள் உலகப்பொருளாக விளக்கமுறலாம்.

இத்தகைய நன்மைகளுக்கீடாக இந்நாடு பெருங்குழூஉவிற்கு ஆண்டுதோறும் அளிக்குந் தொகையாது? 1924-ம்ஆ வரை பிரிட்டானியா, பிரான்சு ஆகிய இரண்டு பெருவருவாயும் பேரதிகாரமுமுள்ளநாடுகள் அளிக்கும் பொருளுதவிக்கு அடுத்த படியில் இந்திய நாடு இருந்தது. செப்பானையும் இற்றலி (Italy) யையும் விட நான்கு மடங்கும் ஸ்பெயினை (Spain) விட 25 மடங்கும், பிரேசிலை (Brazil) விட 30 மடங்கும் இந்தியப்பொருளுதவி பெருங்குழூஉவிற்கு இருந்தது. துவக்கத்தில் குழூஉவிற் சேர்ந்த எழுநாடுகள் பிரான்ஸ், ஐக்கிய அரசாங்கம் (U. S. A.), ஆஸ்ட்ரேலியா, இற்றலி, கனடா, செப்பான்

இந்தியா ஆகும். இவற்றின்வருவாய் முறையே 23,18,15,14,14,6,1. ஆம். இதையுற்று நோக்குங் கண்ணிற்கு இந்தியாவின் நொடைமட்டுக்குமிஞ்சிய தென்பது புலப்படும். ஆனால் பெருமிதமான பொருளைப் பெருங்குழுவிற்கு நம்நாடு கொடுக்கச் சிணுங்கவில்லை, ஹார்டிங் பிரபு தலைமைப்பட்டு எடுத்தோதியதன் பயனாக முன்னளித்த பெருந்தொகையில் ஐந்திலொரு பங்குகுறைந்தது. பெருங்குழுவிற்கு மொத்தச்செலவில் பதினான்கிலொரு பங்கை இந்தியா ஏற்றுக்கொண்டது. செனிவா (Geneva) வில் பெருங்குழுவின் காரியம் நடாத்து எழுத்தாளர் கூட்டத்தில் இந்தியர்கள் உயர்ந்தபதவியிலமர்தல் வேண்டும். அன்னார்க்கு தக்கசம்பளம் ஏற்படவேண்டும். இவ்விரண்டு வேண்டுகோள்களையும் பெரும்பொருளளிக்கும் இந்திய நாட்டின் தனிப்பிரதிநிதியானவர் வற்புறுத்தல் கடமையாம் இந்தியன் அசம்பிளியில் கிரஹாம் (Graham) என்பவர் மேற்காட்டிய வேண்டுகோட்களுக்கு இணங்கிப்பேசவில்லை. ஆயினும் பெருங்குழுவின் கமிட்டி, அளிக்கும் முதலுக்குத்தக்கவாறு அந்தந்த நாட்டின் நன்மை கருதப்படவேண்டு மென்பதை ஒத்துக்கொள்கின்றது. ஆதலால், நம் நாட்டுப்பிரதிநிதிகள் குழுவில் செய்துள்ள வேலை யாது? அடுத்த ஆண்டு செப்டெம்பரில் செனிவாவில் நிகழும் குழுவில் நம்மவர்கள் செய்யும் வேலையைக்கண்ணிலெண்ணெய் விட்டு உற்றுப் பார்த்து ஆய்தல் நமது தவறாக்கடமையாம்,

குழுவின் காரியாதிகளை நடாத்தும் பன்னாட்டாரில் இந்தியாவும் ஒன்றாதலின் ஏனைய நாடுகளைப் போன்று இந்தியாவும் தன்னாட்சி பெற்றதாயிருத்தல்வேண்டும். இல்லையெனிலோ ஏனையர் இந்தியாவை மதியார். பொருள் சுமந்துகொண்டுகரும் வெள்ளிமூக்கராகிய இந்நாட்டை ஏனையர் சுமைப்பொருளை யெடுத்துக்கொண்டு வெண்மூக்கரைத் தரிசில் துரத்தநேரிடும். ஆதலால் பெருங்குழுவின் மதிப்பைப் பெறுமாறு இந்தியா எவ்வழியிலும் முயலவேண்டும்.

மு. சி பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ., எல். டி.,
திருச்சிராப்பள்ளி.

தென் ஆபிரிக்கா நிறத்தடை மசோதா.

தென் ஆபிரிக்காவில், வெள்ளையர்கள் தவிற வேறு எவரும் அரசிய லுரிமைகளுக்கு அருகரல்லவென்று பேரவையில் ஓர் மசோதா கொண்டு வரப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. சட்டப்படி அது தென் ஆபிரிக்கா உட்கழகத்துக்குச் சென்றபோது அக்கழகத்து உறுப்பினர்கள் அதைத் தள்ளிவிட்டார்கள். இச்செய்தி நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றதெனினும், மற்றொருகடவை இதே மசோதா கொண்டுவரப் பட்டு ஏற்றுக்கொள்ளப்படுமென்ற அச்சம் நீங்கினபாடில்லை. இம்மசோதாவை ஏற்றுக்கொள்ளாததற்குப் பெருந்துணையாயிருந்த ஸ்மட்ஸ் சேனைத்தலைவர்க்கு நாம் மிகக் கடப்பாடுடையோம்.

சி. வே.

*யாவனத்தீவின் குகைகள்.

(118-ம் பக்கத் தொடர்ச்சி)

உ. சிற்பங்களிற் காட்டியுள்ள உருவங்கள்.

சிவன்.

விஷ்ணுவைத் தெய்வமாகக்கொண்டாடும் வைணவ வகுப்பாரல்லாத சைவ இந்துக்கள் வழிபடும் சிவபிரானுக்கே பெரிய குகையிலுள்ள கோவில் உரிமையாக்கப்பெற்றிருக்கிறது. அக்குகையிலுள்ள சிற்பங்களிலெல்லாம் சிவ உருவமே முதன்மையாகக் காணப்படுகிறது. பழைய எகிப்து, கிரேக்க நாடுகளில் வணங்கப்பட்டுவந்த உருவத்தையொத்த இலிங்க வடிவாலேயே சிவன் வணங்கப்பட்டுள்ளான். படைப்பவன் பிரமன், காப்பவன் விஷ்ணு, அழிப்பவன் சிவன் (உருத்திரன்) என்பதும், இம்மூவரும் மும்மூர்த்திகளாக விளங்குவரென்பதும் இந்துக்களின் கொள்கை. சொல்லிணக்கப்படி "சிவன்" என்பதற்கு "மங்களமானவன்" என்பது பொருள். ஓர் தெய்வத்தின் வெறுப்புக்கு ஆளாகாதவண்ணம் அதற்குரிய பெயரைவிட்டு மேன்மையும், அமைதியும், மங்களமுமான சொல்லையே உபயோகிக்கவேண்டுமென்பது பழங்காலந்தொட்டு வழங்கிவருவோர் கொள்கை. சிவனுடைய முடியணி இளம்பிறைச் சந்திரன். அவனுடைய முதன்மையான சின்னம் நாகப்பாம்பு. அவன் பல நாகங்களைக் கழுத்திலும் கைகளிலும் இடுப்பைச்சுற்றிலும் அணிந்துகொள்வது வழக்கம். மக்களின் மண்டையோடுகளை மாலையாக அணிந்துகொள்பவனென்றும் மக்கள் எண்ணுவதுண்டு. அவன் சில இடங்களில் இரண்டுகைகளையுடையவனாகவும் மற்ற இடங்களில் நான்கு கைகளையும், எட்டு கைகளையும், பத்துக்கைகளையும் உடையவனாகவும் காட்டப்பட்டுள்ளான். அவனுடைய வாகனம் நந்தியென்ற காளை. அவனை முக்கண்ணனாகவே சிற்பங்களிற் செதுக்கப்பட்டுள்ளது. அவனுடைய மூன்றாவது கண்ணை நெற்றியில் மேல்கீழாகக் காட்டப்பட்டிருக்கிறது. காலமுடிவில் இக்கண்ணினின்றும் தீ வெளிக்கிளம்பி உலகத்தை யழித்துவிடுமென்பது இந்துக்களின்

* இஃது பிரயாணிகளின் நன்மைக்காக பம்பாய் அரசாட்சியாளர் வெளியிட்டுள்ள ஓர் சிறு நூலின் மொழிபெயர்ப்பு. இப்புத்தகத்தில் அநேக தெய்வ இலக்கணங்களும், வழிபாடும், பொருள்களும், வரலாறும் தவறாகக் கூறப்பட்டிருத்தலின் தமிழர் தங்கள் தெய்வங்களின் வரலாறும் பிற உண்மைகளையும் இது முடிந்தவுடன் வெளிப்படுத்தப்பெறும்.—(ப-ர்)

நம்பிக்கை. சர். ஆ லேயால் (Lyol) சொல்வதாவது: "மக்கள் ஆதியில் இயற்கையைக் கண்ணாரக்கண்டபோது அவர்கள் உள்ளத்திற் பதிந்த எண்ணம் உண்டே, அதாவது இயற்கை முடிவற்றதும் கருணையற்றது மான மாறுதல்களையுடையது என்ற எண்ணம் இந்த உண்மையையே சிவன் எடுத்துக்காட்டுபவனுனன். அவன் பலவகை உயிர்களையும் அழித்துத் திரும்பவும் உண்டாக்குபவன். பிறத்தல், இறத்தல் என் இடைவிடாது சுழன்று நிற்கும் இயற்கை வட்டமும் ஏராளமான படைப்புக்களும் அவனுடைய அதிகாரத்துக்கு உட்பட்டன மக்களின் இச்சையையும் இறப்பையும் காட்டுகின்ற சின்னங்களே அவனுடைய முக்கிய குணங்களைக் குறிப்பிக்கும்."

பார்வதி.

இமயத்தின் மிக உயர்ந்த சிகரமாகிய கைலாயமே சிவன் விரும்பும் உறைவிடம். "மலையிற்பிறந்த" பார்வதியே அவரது மனைவியாவள். அவளுக்கு "மலைமகள்" எனப்பொருள்படும் துர்க்கையென்ற பெயருமுண்டு. இம்மலைகளிலுள்ள முக்காலத்துங் குறையாத பனிப்படலங்களின் காட்சிக்கொப்ப சிவனைத்தவசியென்றும் துறவியென்றுங்கருதுவர். தனது முதன் மனைவியாகிய சதியென்பாள் தன் தந்தையாகிய தட்சன் இயற்றிய வேள்விக்கு மற்ற தேவர்களையெல்லாம் அழைத்துத் தன்னையும் தன் மணாளராய சிவனையும் அழைக்காததற்காக வாடிவருந்தித் தீக்கிரையாகிய காலந்தொட்டு, சிவன் தவஞ்செய்து வருகிறுனென்பது புராணக்கதை, சதியின் மரணத்திற்சுப்பால் சிவன் தவக்கோலங்கொள்ளவே, பார்வதி யென்பாள் அவன்மேற் காதல்கொண்டு கொடுந்தவமியற்றி அவனுடைய அன்பைப் பெற்றனளென்றும், சிவன் இமயமன்னனுக்கு அவனது மகளைத் தனக்கு மணஞ்செய்து கொடுக்கும்படி சப்தரிஷிகளைத் தூதனுப்பியதாகவும் புராணங்கள் கூறும். அவர்களுடைய திருமணத்தைச் சிற்பங்களிலொன்றுகாட்டுகிறது.

கணேசர் அல்லது கணபதி.

கணேசர் அல்லது கணபதியென்பவர் ஞானமும் விவேகமும் மலிந்த இந்து தெய்வம்; தடைகளை நீக்க வல்லவராகையால் எக்காரியந் தொடங்கினும் யாவர்க்கு முன்னுற் போற்றப்படுவர். ஞானத்தைக் குறிப்பிடும் யானைத்தலையுடனும், நான்குகைகளுடனும், சரிந்த தொந்தியுடனும், குறுகிய பருத்த உருவத்துடனும் உட்கார்ந்திருக்கும் நிலைமையில் அவர்காணப்படுகிறுர். இவரைப்பற்றிய ஓர் பழங்கதைப்படி சிவன் தனது இல்லத்தைக்காவல்காக்க ஆண்துணைவைக்காது அசுரர்களுடன் போர்செய்யச் சென்றுவிட்டபோது அவனது மனையாட்டியாகிய பார்வதி கணேசரை உண்டாக்கியதாகவும், சிவன் சண்டைமுடிந்து திரும்பியபோது அவனையறியாது கணேசர்

உள்ளே விடேனெனத் தடுத்ததாகவும், அதின்காரணமாகச் சண்டை நிகழச் சிவன் சினங்கொண்டு கணேசரின் தலையைத் துணித்து விட்டதாகவும், இச்செய்தியறிந்த பார்வதி சினமுற்றுப் பொருந்தவ மியற்றித் தேவலோகத்தை நிலைகலங்கச் செய்வதாக அச்சுறுத்தியதற் கஞ்சிக் கணேசரை உயிர்ப்பிக்க ஒருவாறு இசைந்தனராம். ஆனல் அவ்வேளையில் கணேசரின் தலை காணப்படாமையால் அவசரத்தில் அங்கு வந்து அகப்பட்டுக்கொண்ட யானையின் தலையை வெட்டிச் சேர்த்துவிட நேர்ந்ததாம்.

விஷ்ணு.

சைவம், வைணவம் என்ற இருபகுதிகளும் இந்துசமயத்தில் ஒன்றுக்கொன்று உதவியாகக் கருதப்படுகின்றனவேயொழியமுற்றும் மாறுபட்டவைகளாக எண்ணப்படுவதில்லை. வட இந்தியாவிலுள்ள உயர்ந்த வகுப்புகளைச் சேர்ந்த இந்துக்களெல்லோரும் இந்து சமயத்திலுள்ள எல்லாத் தெய்வங்களையும் வழிபடுவர். ஆனல் ஒவ்வொருவரும் தனக்குத் தோன்றியபடி சிவனையோ அவருடைய மனைவிகள் எவரையோ, மக்கள் உருக்கொண்டும் மாக்கள் உருக்கொண்டும் இவ்வுலகத்திற் சிலகாலங்களில் தோன்றியதாக எண்ணப்படும் விஷ்ணுவின் அவதாரங்களில் யாதாயினுமொன்றையோ தமது முக்கிய தெய்வமாகக் கொண்டாடுவர். மக்கள் பெரும்பாலும் கொண்டாடும் விஷ்ணு அவதாரங்கள் கிருஷ்ணவதாரமும் இராமாவதாரமுமே. அழிவுக்கும் படைப்புக்குந் தலைவனுகிய சிவனுடைய பெயரொடு வேடிக்கையும் அசிங்கமுமான சில பழக்கங்கள் சேர்க்கப் பட்டிருப்பது போலல்லாது, வைணவர்களின் சமயக்கொள்கைகள் அன்பு மிக்கதாயும் உயிர்களின் மேம்பாட்டை விரும்புவனவாகவும் தோன்றுகின்றன. எக்காலமும் துரிதனுகவுள்ள சிவனைப்போலல்லாது விஷ்ணு தன் உயர்ந்த பாவனையில் மிக்க அமைதியுள்ள நிலையிற் காணப்படுகிறுன். மகாபாரதக் காவியத்தில் விஷ்ணுவும் சிவனும் இரண்டு தெய்வங்களாகப் பாராட்டப்பட்டிருப்பினும் அவர்களிருவரும் இறைவனுகக் கொண்டாடப்படுவதால் இருவரும் ஒருவரேயாவர். விஷ்ணுவின் முக்கிய சின்னங்கள் தாமரையும் சக்கரமும் ஆகும். அவருடைய முகம் சிற்பங்களிற் பெரும்பாலும் பெண்முகம்போற் காணப்படுகிறது.

கருடன்.

பலசிற்பங்களில் விஷ்ணு கருடவாகனத்தில் ஊர்ந்து செல்வது போற் காட்டப்பட்டுள்ளது. இக்கருடன் மேல்நாட்டுக்கதைகளிற் காணப்படும் "ஃவீனிக்ஸ்" (Phoenix)ஐ ஒப்பான். இவன் பறவைகளின் மன்னன். பாதிகழுகு, பாதிமனிதன்; இறக்கைகளையும் வளைந்தமூக்கையுடைய முகத்தையும் உடையவன். அவன்

உணவு பாம்புகள். அவன் மணஞ்செய்து கொண்டபோது, அவனுடைய பின்னோர் தம்மைத்தின்று ஒழித்துவிடுவார்களென அஞ்சிப் பாம்பினங்களெல்லாம் அவனுடன் போர்புரிந்தனவாம். கருடன் அவைகளை யெல்லாம் கொன்று ஒரு நாகத்தைமட்டும் எடுத்து மாலையாக அணிந்து கொண்டனனும். இவனை இவ்வாறே சிற்பங்களிலொன்றிற் செதுக்கப்பட்டிருக்கிறது.

பிரமன்.

பிராமணர் திரட்டிய மந்திரங்களாகிய வேதமே இந்திய சமயங்களின் ஆதி நூல். வேதகாலங்களில் மக்கள் பரம் பொருளைத் தேடத்தொடங்கினர். பேரறிஞர் சிலர் ஆன்மா என்றொன்றுண்டென்றும் அதுதான் எல்லாப் பொருள்களிலும் உலகத்துள்ளும் தேவர்களுள்ளுங்கூட நிலவி நிற்பதென்றும் சிறிது கண்டனர். பின்னர், எல்லா இயக்கங்களும் தோற்றங்களும் பரமாத்துமாவுக்கே சாற்றப்பட்டன. இப்பரமாத்துமாவின் ஓர் அமிசம் பிரமன் அல்லது படைப்போன். பிரமனின் தொழில் விஷ்ணுவின் தொழிலோடும் சிவனின் தொழிலோடும் ஒக்குமெனறும் பிரமனுக்கு மாறாக இவர்களிருவரில் எவரையேனும் வழிபடலாமென்றும் தற்காலத்திய இந்து சமயத்தார் கூறுவர். பிரமனுக்குச்சாதாரணமாக நான்கு தலைகளுண்டு. ஆனால் மறைபட்ட நான்காவது தலைபோக மற்ற மூன்று தலைகளும் சிற்பங்களிற் புலப்படுகின்றன. அவனுடைய வாகனங்களாகிய ஐந்து அன்னங்களால் தாங்கப்படும் ஓர் தாமரையாசனத்தில் வீற்றிருப்பதாகச் சிலசிற்பங்களிற் செதுக்கப்பட்டுள்ளது. விஷ்ணுவின் உடலினின்று முளைத்த அவனுடைய சின்னமாகிய தாமரையினின்று பிரமன் பிறந்தானென்பது வைணவர்களது கொள்கை.

இந்திரன்.

வேதத்தைப் படித்துப் பார்க்குங்கால் ஈசுவர ஞானமானது வானப்பொருள்களின் வணக்கத்தோடு தொடங்கி நிலப்பொருள்களின் வணக்கத்தோடு முடிவதைக் காணலாம். முதலில் வானவர் வழிபாடும் பின்னர் ஆகாயத் தெய்வங்களின் வழிபாடும், கடைசியாக நிலத்தெய்வங்களின் வழிபாடும் முறையாகக் காண்கிறோம். காலந்தப்பாமல் மழையை வேண்டும் வேளாள மக்கள் மிகுந்த இந்திய நாட்டில் ஆகாயத் தெய்வங்களுள் இந்திரனின் வழிபாடே போற்றப்பட்டு அவனே முதன்மையான தெய்வமாகவும் கொண்டாடப்பட்டான். சூல்கொண்ட மேகங்களைக்கலைத்த அரக்கனுடன் போர் செய்து தெய்வ வீரனாகவும் விளங்கினான். வேதகாலங்களில் அவனே யாவரினும் சிறந்த தெய்வமாகப் போற்றப்பட்டான். பின்னால் அவன் தன் பெருமையையெல்லாம் இழந்துவிட்டமையால், யானைக்குகைகளிலுள்ள சிற்பங்களில் ஊழியத்தெய்வமாகவே காட்டப்பட்டுள்ளான். தன் இடக்கையில் வச்சிராயுதமும் வலக்கையில்

அங்குசமுங்கொண்டு தேவலோகத்து யானையாகிய ஐராவதத்தின் மேல் ஊர்ந்து செல்வதைப்போல் அவன் உருவம் காட்டப்பட்டுள்ளது.

காந்தருவர்களும் அப்சரர்களும்.

சிற்பங்கள் பலவற்றிலும், முக்கியமான உருவங்களுக்கு மேலும் பறந்து செல்வதுபோல் சிறு சிறு உருவங்கள் காணப்படுகின்றன. அவர்களைச் சாதாரணமாகத் தெய்வலோகத்துப் பாடகர் கூட்டமெனச் சொல்வதுண்டு. அவர்கள் தாம் காந்தருவர்களெனவும் அப்சரர்களெனவும் அழைக்கப்படுவர். வேதகாலங்களில் காந்தருவர்கள் வானுலகத்து மறைபொருள்களை யுணர்ந்து பிறர்க்கு வெளிப்படுத்தினர்கள். அவர்களுக்கு ஆகாயமே உறைவிடம். கடவுளர்க்குத் தேவபானமாகிய சோமரசத்தைச் செய்துகொடுப்பது அவர்களுடைய தொழில்களில் ஒன்று. அவர்கள் மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர்கள். நட்சத்திரங்களின் ஓட்டத்தை மேற்பார்வையிட்டுவந்தவர்கள். அவர்கள் பெரும்பாலும் இந்திரலோகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தேவர்களுடைய விருந்துகளில் இன்னிசைக் கருவிகளை இசைத்துப் பாடுபவர். இந்திரலோகத்துத் தேவகன்னிகைகளை அப்சரசெனப் போற்றப்படுவர். இவர்களிலிருந்துதான் காந்தருவர்கள் தமது மனைவியரைத் தெரிந்தெடுத்துக் கொள்வர். இவர்கள் மிக்க அழகு வாய்ந்தவர்கள். போர்முகத்திற் புறங்காட்டாது பொருது மாள்கின்ற வீரர்க்குப் பரிசிலாக இந்திரலோகத்தில் அளிக்கப்படுபவர்கள் இவர்களே.

(தொடரும்)

சி. வேதாசலம், பி. ஏ., பி. எல்.,
தஞ்சை.

சிறுவர் பாதுகாப்புச் சட்டம்.

தான் முன் கொண்டுவந்த இணக்கப் பருவ மசோதா இந்தியசட்டச் சபையாரால் ஏற்றுக்கொள்ளப்படாமையால், கர். அரிசிங்கு கோவர் வரப்போகிற கூட்டத்தில் அதே விதிகளைக் கண்ட சிறுவர் பாதுகாப்பு மசோதா வென்ற ஓர் புதிய மசோதாவைக்கொண்டு வருவதாக விளம்பரஞ்செய்துள்ளார். இம்மசோதா பதின்மூன்று வயதுக்குட்பட்ட பெண்மக்களை அவர்களது மணாளரிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் காப்பாற்றவும், மணமில்லாத மற்ற பெண்மக்களைப் பதினாறு வயது வரையும் ஆண்மக்களிடமிருந்து பாதுகாக்கவும் கொண்டுவரப்படுகிறது. நமது பெண்மக்களின் உடல் நலத்தையும் அவர்களின் குழந்தைகளின் உடல்நலத்தையும் காப்பாற்றி அவர்களை அகால மரணத்தினின்றும் தப்புவிப்பதே இம்மசோதாவின் நோக்கம். முன் செய்தது போல் "சமயம், சமயம்" என்று போலிக் கூக்குரலிட்டு தள்ளிவிடாமல், இம்மசோதாவை ஏற்றுச் சட்டமாக்கும்படி நமது சட்டசபை உறுப்பினர்களை வேண்டுகிறோம். சி. வே.

ஸ்ரீ

திருமுருகாற்றுப்படை!

இன்ன மொருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியதனுள் பழந்தமிழ்த் தனி நூல்களாகப் போற்றப்படுவன ஐம்பெருங்காப்பியம், எண்பெருந் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்பனவாம். இவற்றுள் பத்துப்பாட்டு என்பது பத்துப்பாட்டுக்கள் சேர்ந்த ஒரு நூல். இப்பாட்டுக்கள் பத்தும் மதுரையம்பதியில் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த நக்கீரனார் முதலிய நல்லிசைப் புலவர்களால் செய்யப்பெற்றவை. இவை இரண்டடி நான்கடி உடைய பாட்டுக்கள் அல்ல; ஒவ்வொன்றும் நூற்றுக்கு மேற்பட்ட அடிகளை உடையது. ஒவ்வொன்றும் சொற்சுவை பொருட்சுவை துளும்பும் நீர்மையது. பத்துப் பாட்டுக்களாவன—திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம். இவைமுறையே 317, 248, 269, 500, 103, 782, 188, 261, 301, 583, அடிகளை உடையன. இவற்றுள் ஆற்றுப்படையாக உள்ளவை ஐந்து. ஆற்றுப்படை என்பது வழிப் படுத்தல் அல்லது வழிகாட்டல் எனப்பொருள்படும் (ஆறு—வழி; படை—படுத்தல்) அஃதாவது ஒருவன் ஒரு கொடையாளியின்பால் தான்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு விளங்கக் கூறி, அவ்வறியோரும் அங்கே சென்று தான் பெற்றவையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல். ஆற்றுப்படை என்னும் சொல்லின் பெயர் அத்தொழிலைக்குறிக்கும் பாட்டுக்கு ஆயிற்று. ஒவ்வொருவரும் இங்ஙனம் ஆற்றுப்படுத்தற்குரியராயினும், கூத்தர் முதலியோரே எதிர்வந்த வறியவராகிய கூத்தர் முதலியோர்க்குக் கூறி அவர்களை வழிப்படுத்தியதாகச் செய்யுள்செய்தல் மரபு. இது தொல்காப்பியப் புறத்திணையியலில் 'தாவினல்லிசை' என்று தொடங்குஞ் சூத்திரத்து "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதனால் பெறப்படும். பிற்காலத்தும், ஆற்றுப்படை என்பது தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகையான பிரபந்தங்களுள் ஒன்றாக வழங்குகின்றது ஆற்றுப்படைகள் எதிர்வந்த நல்குரவாளர்களைப் பரிசில் பெறு

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

மாறு ஒரு தலைவன்பால் வழிப்படுத்து முகத்தால் அத்தலைவனது நாடு, ஊர், செல்வம், வண்மை, வன்மை பெருந்தகைமை முதலிய வற்றையும் தமிழ்நாட்டு வழக்கம், ஒழுக்கம் முதலிய பல செய்திகளையும் பல அரிய அறிவுரைகளையும் கூறும் பெற்றிமை உடையன.

இவ்வாற்றுப் படைகள், பெரும்பாலும், பரிசில் பெறற்குரியராகச் சொல்லப்படும் பொருநர், பாணர், (பொருநர்-கூத்தர்; பாணர்-பாடுவோர், இசைவல்லார்) முதலியோரது பெயரை முன்னதாகக் கொண்டு பொருநராற்றுப்படை, பாணாற்றுப்படை (பொருநராற்றுப் படை-பொருநரை ஆறறுப்படுதல்; பாணாற்றுப்படை-பாணனை ஆற்றுப்படுதல்) என இரண்டாம் வேற்றுமையாக வழங்கும். திருமுருகாற்றுப்படை ஒன்றுமே பரிசல் அளித்தற்குரியாரது பெயரை முன்னதாகக்கொண்டு திருமுருகனிடத்தில் ஆற்றுப்படுத்தல் என ஏழாம் வேற்றுமையாக வழங்குவது.

திருமுருகாற்றுப்படை என்பது பத்துப்பாட்டில் முதலாவதாக வைக்கப்பெற்றுளது. 'திருமுருகாற்றுப்படை' என்பதில் திரு என்பது உயர்வை விளக்கும் அடைமொழி [மற்றைய ஆற்றுப்படைகள் இவ்வடைமொழி புணர்த்தாமல் கூறப்பட்டிருத்தல் உணரத்தக்கது]. முருகாற்றுப்படை என்பது முருகு ஆறு படை என்னும் மூன்று சொற்களால் ஆகியது. முருகு என்பதற்கு இளமை, அழகு, மணம் முதலிய பல பொருள்களிருப்பினும் ஈண்டுச் சிறப்பாகக்கொள்ளற்பாலது கடவுட்டன்மை என்பதே. முருகு இப்பொருட்டாதல் "முருகுறழ் தலைச்சென்று" என்னும் மதுரைக்காஞ்சியடிக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் விரிப்புழி 'முருகு-தெய்வத் தன்மை' எனக்கூறியிருத்தலான் என்க. எனவே, முருகு என்னும் பண்புப்பெயர் அதனையுடைய கடவுட்கு ஆயிற்று. [முருகு-முருகன்] ஆறு-வழி; படை-படுத்தல்; இது முன்னர் விளக்கிக்கூறப்பட்டது. ஆதலின், முருகாற்றுப்படை என்பது முருகனிடத்தே ஆற்றுப்படுத்தல் என ஏழாம்வேற்றுமையாகக் கொள்ளப்பெறும்; பெறவே முருக்கடவுளாகிய தலைவன்பால் பரிசில்பெற்ற ஒருவர் அங்ஙனம் பெறக்கருதிய ஒருவனை அப்பெருமானிடத்தே ஆற்றுப்படுத்தல் எனப் பொருள்விரித் துரைக்கப்படும் என்க. உலகத்தில் உள்ள மற்றைத் தலைவரிடத்தெல்லாம் பெறக்கூடியன உண்டி, உடை, பொன், ஊர்தி முதலிய நிலையில் பொருள்களாம். முருகக் கடவுளாகிய முழுமுதற்றலைவர்பால் பெறற்குரிய பெறலரும் பரிசில் என்றும் அழியாத பேரின்பப்பொருளாகிய வீடுபேறு அன்றோ? ஆதலின், உரையாசிரியராய் மெச்சும்புலமை நச்சினார்க்கினியர் "முருகாற்றுப் படை என்றதற்கு வீடுபெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்ததென்று பொருள் கூறுக." என மொழிந்தனர். பிறஆற்றுப்படைகட்குத் தலைவராயி

ஞர் ஒரொரு காலத்துத்தோன்றி மறைந்தனராதலின், அவற்றிற் கூறப்பட்ட முக்கியப் பொருளோடு ஏனைகாலத் திரவலர்க்குச் சிறிதும் இயைபில்லை. திருமுருகாற்றுப்படைக்குத்தலைவராயினர் என்றும் உள்ள கடவுளாதலின் இதிற் கூறப்பெற்ற முக்கியப்பொருளோடு என்றும் எவர்க்கும் இயைபுண்டு. இத்தகைய சிறப்பு இப்பாட்டுக்கு இருத்தலானும் இதில் தெய்வமணம் கமழ்தலானும் இது பத்துப்பாட்டுக்களில் முதலதாக வைக்கப்பெற்றதோடு "திரு" என்ற அடைமொழி புணர்த்தும் கூறப்பெற்றுளது. இதுவேயுமன்றிப் பதினொராந் திருமுறையிலும் சேர்க்கப்பெற்றுளது.

திருமுருகாற்றுப்படையைப் பாடியவர் நக்கீரனர் என்னும் பொய்யடிமையில்லாத புலவர்பெருமான். இவர் திருவாலவாயடிகளும் இறையனரெனும் ஒரு புலவராய் வந்து தமிழாராய்ந்த கடைச்சங்கத்து நல்லிசைப் புலவர்களில் தலை சிறந்து விளங்கியவர். முருகக்கடவுளிடத்து மெய்யன்புடையவர். [சிவபெருமானே முருகக்கடவுள் என்பது சைவசமய நூல் ஆராய்ச்சியாளர் துணிபு.] இவரது வரலாற்றின் பகுதிகளெல்லாம் தமிழ்ப்பேராசிரியர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமது நுண்மாண் நுழைபுலத்தால் இயற்றிய 'நக்கீரர்' என்னும் நூலில் ஆராய்ச்சி முறையில் விளங்கக் கூறப்பெற்றுள்ளன. ஆகலின், அவை ஆண்டே கண்டுணரற்பாலன.

முந்நூற்றுப்பதினேழு அடிகளையுடைய இத் திருமுருகாற்றுப்படை ஆறு பிரிவினதாக அமைந்துளது. ஒவ்வொரு பிரிவின் பொருளையும் பதவுரையாகக் கூறின் மிக விரியுமாகலின் ஈண்டுரைக்கப்படுவது தொகுப்புரையாகக் கூறும் பொழிப்பே.

முதற்பிரிவு:—உலகத்திலுள்ள உயிர்கள் உவக்கும் வண்ணம் எழுந்து திரிதரும் ஞாயிறனது (ஞாயிறு—சூரியன்) கடலில் காணப்படுவதுபோல் மயிலின்மீது எழுந்தருளுவதால் உண்டாகும் கண்கவர் ஒளியும், தன்னைச் சேர்ந்தவரைத் தாங்கி அவரது அறியாமையைப்போக்கும் திருவடிகளும், பகைவரை அழிக்கும் பெரிய கைகளும் ஆகிய இவற்றை உடையவனும்; அறக்கற்பினையுடைய தெய்வயானையார் கணவனும்; செங்கடம்பினது மலராலாகிய மாலை அசையும் மார்பைஉடையவனும்; சூரரமகளிர் (தெய்வமகளிர்) தனது 'கோழிக்கொடி வாழ்வதாக' எனப் புகழ்ந்து பாடி ஆடும் மரமடர்ந்த சோலையினையுடைய மலைப்பக்கத்தில் உள்ள செங்காந்தள் மலராலாகிய கண்ணியைச் (கண்ணி—தலையில் அணியும் மாலை) சூடிய திருமுடியை உடையவனும்; கடல்கலங்க உள்புக்குச், பேய்மகள் துணங்கைக் கூத்தாடுமாறு சூரபன்மாவையும் அவுணர்கள் மந்திரங்கொண்டு சாதித்த கவிழ்ந்த பூங்கொத்துகளையுடைய மாமரத்தையும் நெடிய வேலால் தடிந்ததனால் உண்டாகிய குற்றமில்லாத கொற்றத்தினையும்

(கொற்றம்—வெற்றி), ஒருவராலும் அளந்தறியவொண்ணாத நல்ல புகழினையும், செவ்வேவலினையும் உடைய சேய் என்பவனும் ஆகிய முருகக்கடவுளினது திருவடியில் செல்லும் செலவை (செலவு—செல்லுதல்) நீ விரும்பினையாயின் (நீ என்றது வீடுபேற்றை விரும்பியவனைக் குறிப்பது) நினது நல்வினைப்பயனால் உன் உள்ளத்து உண்டான விருப்பமாகிய இனிய வீடுபேற்றைத் தப்பாது இதுபொழுதே பெறுவை; அது பெறுதற்கு அவன் யாண்டுளன் எனின், மதுரைக்கு மேற்றிசையில் உள்ள திருப்பரங்குன்றத்தில் விரும்பியிருத்தலும் உரியன் என்பது.

இம் முதற்பிரிவில்:

"உலக உவப்ப வலனேர் திரிதிரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கோவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி" என்பதில் முருகப்பிரான் மயிலின்மீது எழுந்தருளியிருத்தற்கு உவமையாக (ஞாயிறு சூரியன்) கடலிற் றேன்றுதல் கூறப்படுகின்றது. இதுவண்ண உவமம் தொழிலுவமம் என்னும் இரண்டினையும் குறித்து நிற்கும். புலரிக்காலையில் கடற்கரையில் நின்று ஞாயிறு தோன்றும்பொழுது பார்த்தால், கடல் நீரின் பசுமை நிறத்தோடு ஞாயிற்றின் ஒளியால் உண்டாகும் பொன்மை முதலிய நிறங்களும் தோன்றும்; இது பசுமை நிறத்தோடு பொன்மை முதலிய நிறங்களும் கூடிய மயிலின் தோற்றத்திற்கு உவமம்; கடலில் தோன்றும் செந்நிறமுள்ள ஞாயிறு மயிலின்மீது தோன்றும் முருகக்கடவுளுக்கு உவமம்: இத்தோற்றமெல்லாம் நிறம்பற்றியதாகலின் வண்ண உவமம் எனப்படும். இனி ஞாயிறு மிகுந்த புற இருளை நீக்குதல் போல முருகப்பிரான் தன்னைக் காண்பவரது மனத்தின்கண் உள்ள அறியாமையாகிய அக இருளை நீக்குதலால் அத்தொழில்பற்றித் தொழில் உவமும் கொள்ளப் பெறும். இன்னும், ஞாயிறு ஒன்றாய் மிகத் தொலைவில் உள்ளதாய் இருப்பினும் தன்னை நோக்குவார் எல்லார்க்கும் தோன்றுதல்போல முருகக்கடவுள் ஒருவராய் யாவற்றையும் கடந்து நிற்பினும் தன்னை மனக்கண்ணால் நோக்குவார் அனைவர்க்கும் தோன்றி அருள் புரிவார் என்பதும் இவ் வுவமையால் பெறப்படுதல் காண்க.

சூரரமகளிரை அடிமுதல்முடி (பாதாதிகேசம்) வரை வருணித்திருப்பதும், [தெய்வமகளிரை அடிமுதல் முடிவரையும் மானுடமகளிரை முடிமுதல் அடிவரையும் வருணிப்பது கவிவழக்கு] அவர்கள் மலைகளில் உள்ள சோலைகளில் முருகக்கடவுளின் பெருமையினைக் குறித்துக் கூடி ஆடிப் பாடி ஏத்தும் இயல்பினையுடையவர் என்பதும் அறியத்தகுவன.

"மால்வரை நிவந்த சேணுயர் வெற்பின்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடி
... ...

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி

சூரர மகளிர் ஆடுஞ்சோலை'' என்பது காண்க. இது முருகன் குறிஞ்சி நிலக்கடவுள் என்பதையும் காட்டுகின்றது.

பேய்கள் போர்க்களத்தில் உள்ள பிணங்களைத் தின்று துணங்கைக் கூத்தாடுதல் கூறப்பட்டுளது.

முருகக்கடவுளது பெருமை அறிதற்கரியதென்றும், அவரது திருவடியாகிய வீடுபேற்றை அடைய மனத்திலுண்டாகும் விருப்பத்திற்குக் காரணம் முன்செய்த நல்வினையே என்பதும் [''தவமும் தவமுடையார்க்காகும்'' என்பது திருக்குறள்] அங்ஙனம் விருப்பமுண்டாயின் அது தடையின்றி நிறைவேறும் [''வேண்டுவார் வேண்டுவதே ஈவான்''] என்பதும் குறிக்கப்பெற்ற

''எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே''

என்ற அடிகளும் அவற்றிற்கு நச்சினார்க்கினியர் கூறியிருக்கும் உரையும்—சிறப்பாகச், சேவடிபடரும் என்றவிடத்து 'திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது ''தென்னன் பெருந்துறையான், காட்டாதனவெல்லாம் காட்டிச் சிவங்காட்டித், தாட்டாமரைகாட்டித் தன் கருணைத்தேன்காட்டி''. என்பதனானும் பிறரும் (மாணிக்கவாசகரும்) திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க' என்றபகுதியும்-நினைவுறத்தகுவன.

கூடல் என்னும் மதுரையம்பதியினது சீரும் சிறப்பும், அரசர் தமதுபகைவரை ஆண்மையில்லாத மகளிராக்கி அவர்கொண்டு விளையாடுதற் குறிப்பாகப் பாவையும் நூலால்வரிந்து புனையப்பட்ட பந்தும் கொடிக்கருகே தொங்கவிடுதலாகிய வழக்கமும் கூறப்பெற்றுள.

''செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்............'' எனவருதல் காண்க.

(தொடரும்.)

திரிசிரபுரம்,
ம. பெரியசாமிப்பிள்ளை.

சென்னைக் கலைமாட சீர்திருத்தம்.

ஐயா பாத்ரோ முயற்சியால் கலைமாட சீர்திருத்தச் சட்டம் புதிதாக ஈராண்டின்முன் ஏற்பட்டு இதுவரை கலைமாட வாடைபடாத பலரும் அதன் கழகங்களில் உறுப்பினராகச் சேர்ந்துளரென்பது பலரும் அறிந்ததொரு செய்தியாம். முதியோர் கழகம், கலைக்கூடக் கழகம், எட்டுக்கல்லூரிக்கழகம், கலைமாட நிர்வாகக்கழகம், இந்நான்கு கழகங்களிலும் பள்ளிகளினின்றும், நாட்டாண்மை, நகராண்மைக் கூட்டங்களினின்றுந் தெரிந்தெடுக்கப்பட்ட பொருட் புலமைவாய்ந்த மக்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள். ஆகலால் சில வகுப்பினர் தனியாட்சி யொழிந்தது. ஆயினுங் கல்விப்பட்டம்பெற்ற பெருந்தொகையாளர் இன்றும் நிர்வாகக் கழகத்தில் தங்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புகின்றார்கள். மேனாட்டு ஆரியரும் கீழ்நாட்டு ஆரியரும் ஒரு தன்மையராய் ஏனையருக்கு இடங்கொடுக்குந் தன்மைவாய்ந்திலராய் விளங்கிவருகின்றனர். தமிழ் மக்களுக்கு இன்னும் நல்லகாலம் வரவில்லையென்றே கூறலாம்.

கலைமாட ஆட்சிக் கழகங்கள் சீர்ப்படுக்கப்படினும் கலைமாடக் கல்வி கோ வால் போன்று நாளடைவில் சிறப்பிழந்து வருகின்றது. இந்த சென்னை மாகாணம் ஏனையமாகாணங்களைவிட ஆங்கிலக் கல்வியில் மேம்பட்டதென்ற பெயர் நாளடைவில் மங்கிவருகின்றது. பள்ளிக்கூட கடைச்சோதனையில் தேர்ந்தவர்களில் அநேகர் கல்லூரியிற்சேர்ந்து படிக்கத்தகுந்தவர்களல்லர் என்பது கலைமாடப்பட்டியலாலறிகின்றோம். தகுந்தவர்களென்று பட்டியலிற் றோன்றும் பேரும் தக்கவர்களாகக் காணப்படுகின்றிலர். இடைக்கலைச் சோதனையில் தேர்ந்தவர் பி. ஏ. பட்டம் பெறுவதற்குத் தகுந்தவராக மதிக்கப்படுகின்றிலர். பி. ஏ. ஆனர்ஸ் பட்டம்பெற்று ஓராண்டின்பின்னர் துகை செலுத்தி எம்.ஏ. ஆனர்ஸ் பட்டந்தரித்துக்கொள்பவரின் திறமையும் வெளுத்துவருகின்றது. இவற்றிற்கு காரணம் என்னை? இக்குறைகளை நீக்கும் வழிகளெவை. கலைமாடத்தார் கவனிப்பாராக.

சென்னை மாகாணக் கலைமாடத்தின் சோதனைகளின் பழம் புகழை மீட்டுக்கொள்ளுமாறு எங்ஙனம்? கல்லூரிகளில் கல்வி தேய்ந்துவருவதைத் தடுப்பது எப்படி? பி. ஏ பட்டம் பெற்றபின் மேற்படிப்பை நல்ல நிலைமைப்படுத்தும் வழியாது? சோதனைகளை நடத்துவதில் சோதனையாளர் மனம்போக்கே விதியா? அவர்களுக்கு விதி ஏற்பட்டுளதா?

பள்ளிக்கூடங்களில் ஆங்கிலக்கல்வி தேய்பிறைபோல் துலங்குவதற்கு நியாயமென்னை? ஒன்று இந்நாட்டார்க்கு அரசமொழியாயும் தாய்மொழியின் அந்நியமொழியாயுமிருக்கு ஆங்கிலமொழியைக் கற்

பவர் அம்மொழியின் இலக்கணத்தை நன்றாகக் கற்கவேண்டும். கலைமாட முதற்சோதனை நிகழ்ந்துவந்த காலத்தில் இலக்கணப் பயிற்சி விரிந்திருந்தது. இலக்கண வழுவில்லாமல் மாணவர் எதையும் யெழுதி வந்தனர். இலக்கணப்பயிற்சி இடையில் எடுபட்டபின்னர் மாணவரெழுதுமுறை சரியோ தவறோ அவருக்குத் தெரியாது. ஏதோ சில சொற்களைத் தொகுத்தெழுதி விடுகின்றனர். அதில் எழுத்துப் பிழைகளும் இலக்கண வழுக்களும் மலிந்து காணப்படுகின்றன. மேற்சோதனைகளிலும் இலக்கணப்பயிற்சி இன்மையால் எம். ஏ. ஆனர்ஸ் பட்டதாரிகளும் தாமெழுது மனைத்தும் இலக்கண பிழையின்றி எழுத வன்மையற்றவராய்ப் பொலிகின்றனர். ஆதலால் இலக்கணக்கல்வி முன்போன்று கட்டாயமான பாடமாகச் செய்தல் வேண்டும். குருவியின் தலையில் பனம்பழமேற்றி வைத்தல்போன்று பலநூல்களைப்படிக்குமாறு மாணவர் வேண்டப்படுவதால் ஒன்றையும் கசடறப்படிப்பதில்லை. கசடறக்கற்கும் வழக்கம் நின்றுவிட்டது. முதற் கலைச்சோதனைக்கும் முற்றியகலைச் சோதனைக்கும் வேறுபாடு பல சுவடிகளைப் படித்தலேயாம். சொற்சுவை, பொருட்சுவை, யாப்புத்திறம், இவற்றைப்பற்றிய வினாக்கள் மாணவர்கட்கு கசப்பாக இருக்கின்றன. நூற்கருத்துமட்டுந் தெரிந்தாற்போதும். ஆதலால் நூற்களின் கருத்தை விளக்குங் கைப்புத்தகங்களைப் படித்துப் பட்டம் பெறுகின்றனர். இவ்வாறு இலக்கண வரம்பறியாதவரும், நூற்சுவையறியாதவரும் ஆசிரியத்தொழிற்குத் தகுந்தவரென்று கலைமாட அதிகாரிகள் வற்புறுத்துவதால் ஆசிரியத்தன்மைக்குரிய மதிப்பு மறைந்து வருகின்றது. ஆசிரியருக்கும் மாணவருக்குமுள்ள வித்தியாசம் குறைந்துள்ளது. வாத்தியைப்போற்றுந் தன்மையும் மாணவர் இகழ்ந்து வருதல் இயற்கையன்றோ.

அன்றியும் கலைமாட அதிகாரிகள் சோதனைகளில் தேர்ந்து வருகின்றவர்களுக்குப் படிப்பு அதிகம். ஆதலால் அவர்களையே உயர்ந்த தொழிலில் ஏற்படுத்தவேண்டுமென்கின்றனர். முன்னாக காட்டியபடி இலக்கணப்பயிற்சியில்லாதவரும் பாவினமறியாதவரும் பெரும்பதவிபெறினால், அவர்மாணவரும் 'தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை' யென்று விளங்குவாரன்றோ. எத்துறையிலும் அநுபவமுதிர்ச்சிக்கு மரியாதையும் சிறப்பும் ஏற்பட்டுள. தற்காலத்திலுள்ள பள்ளிகளிலும் கலலூரிகளிலும் அநுபவமுதிர்ச்சி அறவே ஒழிக்கப்பட்டுவருகின்றது. ஆசிரியத்தொழிற்கு பலவாண்டநுபவம் பயனில்லாததாகக் கருதப்பட்டுப் பழிக்கப்படுகின்றது. வெகுகால அநுபவமுடைய கணக்காயர் மிகுகால மாயினமையின புறக்கடையிற் கட்டப்படத்தக்கவரென்று புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். கல்வி எனைத்தாயினும் அநுபவமில்லையெனில் அக்கல்வி பயன்படாது, சிறக்காதென்ற வுண்மையை 'ஏட்டுச்சுரைக்காய கறிக்குதவுமா' என்ற பழமொழியை யுணர்த்துகின்றது.

'எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்' என்பது முதுமொழி. சிறு வகுப்புகளிலேயே பிள்ளைகள் அவர்களுக்குப் பிரியமான பாடங்களைப் பொறுக்கிக் கொள்வதால் அடிப்படையான கல்வி நலம் பெறுது. சரித்திரமெடுத்துக் கொண்டவனுக்கு சாத்திரந் தெரியாது. கணக்கெடுத்தவனுக்குக் கலைஞானங்கிடையாது. என்று வந்துவிட்டது. உயர்தர வகுப்புகளிலுள்ள மாணவருக்குப் பூகோளக் கோளவறிவு கிட்டுவதில்லை. ஒருதுறையில் தேர்ந்தவர் மற்றொரு துறையில் அறியாமலிருக்கின்றனர். இது உலகவாழ்க்கைக்குப் பொருத்தமில்லாத நிலையாயிருக்கின்றது. உலகியலுக்கு சிலவழிகளில் சிலவற்றில் ஆழ்ந்தபடிப்பும் ஒன்றுசேரவேண்டும். படித்தலும் பாறை கண்டது, நீர் கண்டது என்று இளையாமல் விடாமற் செய்யவேண்டும். இத்தகைய பலகாரணங்களால் பிள்ளைகளுக்குச் சோம்பல் மிகுதிபடுகின்றது உழைக்கின்றிலர், சமைத்துப் பக்குவப்படுத்திக் கொடுத்தால் அந்த வுணவிலுஞ் சிலசிகைகளை நீக்கி சிலவற்றை உண்ணுகின்றனர். சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்' என்பது மூதாட்டியார் வாக்காம். ஆதலால் பாடம் ஏற்படுத்துவதில் சுமக்கும் பாரம் ஏற்றவேண்டும். அதுவும் கசடறக் கற்கவேண்டும். இலையெனில், ஒள்ளிய அறிவு இயலாது.

சோதனைக்குவரும் மாணவர் தொகை நாளுக்கு நாள் அதிகப்படுவதால் சோதிப்பவர் தொகையும் பெருகுகின்றது. பலபேர் சோதிப்பதால் ஒருவருக்கு ஏற்றவிடை மற்றொருவருக்குப் பொருந்துவதில்லை. பலர் பல்மனமுடையார், ஆதலால் தேர்ச்சியடைதல் விதிவசமாகின்றது. நல்லவர் கைப்பட்டமாணவர் நன்மையடைகின்றனர். கொடியார்கைப்பட்டவர் கொலைபடுகின்றனர். வினாக்களுக்கு விடைபெழுதிக் கொடுத்துச் சோதனை செய்யுமாறு விதிக்கப்பட்டால் ஒருவாறு நலமுண்டாகலாம்.

ஐரோப்பிய, அமெரிக்க, ஆஸ்திரேலிய கண்டங்களினின்று வாத்திமைத்தொழிற்கு மக்கள் வருகின்றனர். அவர்கள், விண்ணின்றிரங்கியவர்களாக மதிக்கப்படுகின்றனர். உயர்ந்தபதவி பெறுகின்றனர். அநுபவமுடையாரை அவர் மதிக்கின்றிலர். வந்தவுடன் பாடமேற்படுத்துங்கழகங்களிலும் சோதனைக் கழகங்களிலும் அன்னார் உறுப்பினராகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வரும் வாத்திகளின் படிப்பு இத்தன்மையது என்று இப்பொழுது எவருமறிவர். வந்து சிலவாண்டுகள் கழிந்தபின்னர் தொழிலுக்குச் சிறிது பொருத்தமுடையராகின்றனர். அதுவரை அவரறியாமையும் அநுபவமின்மையும் பிள்ளைகளுயிரை எடுக்கின்றது. ஆயிரம் பெயரைக் கொன்றவர் அரை வயித்தியரன்றோ.

தூரமான நாட்டினின்று இங்நாட்டிற்கேகியவுடன் தூரத்துப் பச்சை கண்ணிற்குக் குளிர்மை என்றவாறு அவர்கள் உயர்ந்த

ஆனர்ஸ் வகுப்பு மாணவருக்குச் சொல்லிக்கொடுக்கப் புகுகின்றனர். இவர் பிதற்றலைத் தலைக்கொண்டமாணவரே சிறந்து தேர்கின்றனர். அல்லாதவர் சோதனையில் தவறுகின்றனர். தேர்ந்தால் தாழ்ந்த வகுப்பில் அன்னார் பெயர்க் காணப்படும். அந்தோ! இதென்னபாவம்! அகற்சியும், ஆழ்ச்சியுமில்லாதவர் அக்குணங்கள் நிறைந்தமாணவரை என்ன பாடு படுத்துகின்றனர்!

படிப்பு முறையைக் கண்ணுறில் அது வியப்பையே தரும். மாணவர்களைக் கேள்விகேட்டல் மாணவர் நிலைமைக்குக் குறையாம். போதகாசிரியர் போதிக்கவேண்டியதன்றி வினவுதல் முறையன்றாம். வாயில் வந்தவாறு சொல்லுதலும், தட்டுத்தடையின்றிப் புலம்பலும், அல்லது சொல்வன்மையில்லாவிடில் பிரஞ்சுக்காரர் ஆங்கிலம் கற்பித்தல்போன்று சொல்லவேண்டியதை நோட்டுப்புத்தகங்களில் எழுதிக்கொண்டுவந்து வரிவரியாகப் படித்து நேரத்தைப் போக்கவேண்டும். இடையில் கடாப்பொறித்தால் விடை தரப்படமாட்டாது. கேட்டலும் ஒழுங்கீனம், விடையளித்தாலும் விளங்காத விடையாயிருக்கும். இத்தகைய மணிகள் உவாத்திமைக்கு வந்தபின்னர் கல்வி வளர்பிறைபோல் எங்ஙனம் வளரும். சென்னைக் கிறித்தவ கல்லூரியில் டாக்டர் மில்லர் தலைமை வகித்த நெடுங்காலத்தில் எடின்பரோ, அபர்டீன் என்ற நகரங்களினின்றும் வரும் கணக்காயரை ஆறுமாதம்வரை பழகிய வாத்தியோடு வகுப்புகளுக்குப் போகச்செய்து சொல்லிக்கொடுக்கு முறையைக்கவனிக்கச் செய்து பின்னர் பாடமெடுக்க அனுப்புதல் வழக்கம். அவ்வாறு பழக்கப்பட்ட ஐரோப்பியர்கள் பிள்ளைகளுடையதன்மையை யறிந்து கற்பித்துவந்தனர். தற்காலத்தில் ஐரோப்பியர்கள் வாத்திமை யேற்றுக்கொண்ட அன்றே பிரசங்கஞ் செய்யத்தலைப்படுகின்றனர். இந்நாட்டுக்கலைமாடக்கல்வி இத்தகையதென்று அறியாமல்தெரிந்தவர்கள் போன்று தலையாட்டல் பண்ணுகின்றனர். நகைக்கப்படுகின்றனர், சோதனையாளராகின்றனர். மாணவர் தம் தேர்ச்சிநோக்கி அன்னார்க்குப் பயப்படுகின்றனர். ஐந்தாண்டுகளாவது அநுபவமில்லாதவர்களை உயர்ந்த வகுப்புக்களுக்குப் பாடமோதவனுப்புதல் பெருந்தவறாம். தாழ்ந்த வகுப்புக்களில் புதிதாகவந்தவர்களை பழக்கப்படுத்தவேண்டும். இவ்விதியைக் கைக்கொள்ளாவிடின் திறமுடையவரேனும் அநுபவக்குறைவால் இகழ்ச்சிக்கு இடமாகின்றனர். முதலில் மாணவர் மதிக்கவில்லையானால் பின்னர் அவர் மதித்தல் இயலாது.

உயர்தரக்கல்லூரிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்டு விட்டபடியால் மாணவர்கள் தத்தமூரினின்று வெளிப்போதலில்லாமலும் பலர் நடையுடை பாவனைகளைத்தெரிந்து கொள்வதற்கு இடமில்லாமலும் பலவூராருடன் கலத்தலாலுண்டாகும் நட்பினயம் பெற வழியில்லாம

லும், கிணற்றுத்தவளைகள் போன்று நாட்டுவளப்ப மறியாதவர்களாக விளங்குகின்றனர். பலநாடுகளுக்குச் சென்று பலமக்களுடன் பேசி பலவுண்மைகளைத் தெரிந்து மனவிசால மெய்திய மாணவரைக்கண்டால் கிணற்றுத்தவளைகள் தம்மேம்பாடு பேசி அன்னாரை நகைக்கின்றனர். ''கூவலாமை குரைகடலாமையைக் கூவலோ டொக்குமோகட'' லென்று வினவுகின்றனர், இஃதன்றியும் பி. ஏ. பட்டம் பெறுபவர் தொகை நாளடைவில் பலமடங்கு அதிகப்படுகின்றது. பலகல்லூரிகள் ஏற்படுவதால் தக்கவாறு திறமையுடைய வாத்திமை ஏற்படுவதில்லை. கல்லூரிகளுக்கு முதல் கிடையாது. பள்ளிச்சம்பளமும் சர்க்கார் உதவியும் பெற்று, கையாற்பொறுக்கி வாயில் போடுதல் போல வரவுஞ் செலவுஞ் சரியாகின்றது. அல்லது கடனேற்படுகின்றது. இந்நிலைமையில் உவாத்திகளுக்குத்தக்க சம்பளங்கள் ஏற்படுவதில்லை, திறமையுடைய உவாத்திகளும் வருவதில்லை. வந்த வாத்திகளும் தரிப்பதில்லை. ஆண்டுதோறும் புத்தம்புதிய வாத்திகள் குறைந்த சம்பளத்தில் அமர்கின்றனர். மாணவருக்கும் உவாத்திகளுக்கும் ஓராண்டே வித்தியாசமிருக்கும்; நேற்றுப் பெஞ்சில் என்னுடன் படித்தவன் இன்று நாற்காலியிலிருந்து போதிக்க வந்துவிட்டானென்று மாணவர் இகழ்கின்றனர். ஆசிரியருக்கும் மாணவர்க்கும் ஒருவிரற்கிடையேயாம்.

பலகல்லூரிகள் உள்நாடுகளிலேற்பட்டதுமின்றி கலைமாடங்களும் தலையெடுக்க ஆரம்பிக்கின்றன. மைசூர்மாடம், ஐதராபாத் கலைமாடம், ஆந்திரக்கலைமாடம், தமிழ்க்கலைமாடம், கோளக்கலைமாடம், இவ்வாறு பலகலைமாடங்களும் தலைப்படின் படிப்பவர் தொகை நாளுக்குநாள்பெருகும். உயர்கல்வி பரவும். இது நன்மையே. ஆனால் படிக்குமாணவரின் நோக்கம் யாது? படித்துப் பட்டம்பெற்றது பிழைப்புககு வழியுண்டாவென்று பார்த்தல் வழக்கம். வாத்திமைத்தொழில், சர்க்கார் உத்தியோகம், வக்கீல் தொழில் இம்மூன்று தொழிலே பெரும்பான்மையார் விரும்புந்தொழில்களாயிருக்கின்றன. ஏனையதொழில்களில் புகுவாரிலர். வாணிபத்தில் சேர்பவர் சிலர். கணக்கற்றமாணவர் இதனால் பிழைப்புக் கிடமில்லாமல் வறுமை எய்துகின்றனர். வயிறுகாயும்பொழுது வாய் பிரலாபிக்கின்றது, சர்க்காரைத் தூறுகின்றது. 'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானு' என்று கடவுளை நோக்கி ஓலமிடுகின்றனா. பணமிகுதியுடையார் உயரியகல்வி கற்றல் இயல்பு. புத்திசாலிகள் பிறருதவிபெற்றுத்தேர்தல் இன்றியமையாதது. சாதாரண அறிவுடைய மக்கள் தங்கள் பெற்றோர் வருவாய்க்குத் தக்கவாறு கல்விகற்று வேலையிலமர்ந்தால் கூக்குரல் இராது. சகட்டுமேனிக்குச் செல்வரும் வறியரும் உயர்தரக் கல்வி கற்க முயலுதலால் விளையும் வருத்தத்திற்கு கணக்குவழக்கில்லை.

ஆதலால் ஏனையநாட்டில் படித்தவர் வறுமை பிறங்குதல்போன்று இந்நாட்டிலும் அன்னார் தேள்குத்த ஆரம்பித்துவிட்டனர்.

இவற்றையெல்லாம் யோசிக்குமளவில் ஆங்கிலக்கல்வி மட்டுக்கு மிஞ்சிப்பெருகுவதால் கேடே விளைகின்றது. விளையுமென்பதும் திண்ணம். உயர்தரக் கல்லூரிகளும் கலைமாடங்களும் பெருகுவதால் அறிவு வளர்ந்தாலும் வளர்ந்த அறிவு வறுமையால் கெடுவழி செல்லுகின்றது. எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வது எம்மக்களின் கடமையாம். நாட்டுக்கு நன்மையாம். உயர்தரக் கல்விச்சாலைகள் சிற்சிலவிடங்களிற் அமையப்பெற்று அவற்றில் அறிவிற் செல்வரும் செல்வ அறிஞரும் கல்விகற்றுத் தேர்ந்து பட்டம் பெறுவார்களெனில் பட்டத்திற்கும் பெருமையுண்டு, கலைமாடங்களும் நன்மதிப்பு எய்தும். கல்லூரிகளையும் கலைமாடங்களையும் உள்நாடுகளில் பெருக்குவதால் நாட்டிற்கு நன்மையுண்டாகுமென்று நினைப்பதற்கிடமில்லை. பொருள் தேட விருப்பமுடையார் வாணிபத்திற் புக வேண்டும், பசியில்லாதவர்கள் அதிகாரம்பெறவுரியவர்களாவர். தொழில் செய்வதில் வல்லவர்கள் தொழில்புரிந்து பொருளாக்க வேண்டும். பெரும் பொருளாக்க விருப்பமுடையார் கல்விச்சாலைகளில் புகுந்துபட்டம் பெற்று தங்களாசையை நிறைவேற்றவெண்ணுதல் வழிதவறிக்குழி வீழ்தல்போலாம்.

இது நிற்க, தாய்மொழிப் பயிற்சி கல்லூரிகளிலும் கலைமாடங்களிலும் குறைந்துவருகின்றது. சிலவாண்டுகளுக்கு முன்வரை தாய்மொழி தழைத்துவந்தது. வடமொழி யேற்றங்கருதித் தாய்மொழியைப்பழித்தவர் செயலால் வடமொழிப் பயிற்சியும் குறைந்தது. யானைதன் தலையில் மண்கோலிக் கொள்ளுதல்போன்று தம் தலைமேல் மண்ணிட்டுக்கொண்டனர். வீட்டில் தாய் தந்தை, உடன்பிறந்தார், பக்கமுளாருடன் பேசுவது தாய்மொழி (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்) தாம் போற்றுவது எழுத்தும் பேச்சுவழக்கு மற்ற வடமொழி. பெற்ற தாயை யகற்றி உற்றநாரியை மேம்படுத்தும் நாகரிகம் தலையெடுத்துவிட்டது. இப் போலி நாகரிகம் ஒழியவேண்டும். தாய்மொழி தழைக்கும்வழியை நாடுதல் கலைமாட வதிகாரிகள் கடமை.

ஆதலால் பலதரப்பட்ட இவ்விடர்ப்பாடுகள் மேலும் நேரிடாமல் இடர்களை யொழிக்கும்வழி நாடுதல் சென்னைக்கலைமாட அதிகார நிபுணர்கள் கடமையாம். மேற்காட்டியவாறு கலைமாடக்கல்வி சீர்திருத்தப்படுதல் இன்றியமையாததாம். பெற்றோர்களும், இதனைக் கவனித்தில் நலம். கையிலுள்ள பொருளையிழந்து அரிப்பரித்துக் கருந்தனந்தேடல் அறிஞர் செயலன்று.

"ஆழியான்."

கல்விபயிற்றுமுறை புகட்டும் பள்ளிக்கூடம்.

பிள்ளைகளுக்குக் கல்விபயிற்றும் சாலைகள் பல. அண்ணாவி (உவாத்தியாயர்)கட்குப் பாடமோதுவிக்கு முறையைக் காட்டும் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டுள. எழுத்தறிந்தவரெல்லாரும் எழுத்தறிவிப்பவராகத் தோன்றுவதால் போதிக்கு முறை காட்டுவது அகத்தியமாயிற்று. கல்வி அகலமும் ஆழமும் வாய்க்கப்பெறாத குரவர்களிடம் கல்விகற்றல் பயனைத் தராது. தற்காலத்தில் தெற்றி (திண்ணை) ப்பள்ளிகளில் பாடஞ் சொல்லிக்கொடுக்கும் அண்ணாவிகட்குத் தாய் மொழிப்பயிற்சி கிடையாது. இலக்கணமென்பதே தெரியாதவர்கள் பெரும்பாலார். ஆங்கில பாடசாலைகளில் ஆறும் பராம்வரை கற்றமாணவர்களே குரவர்களாக ஏற்பட்டுள்ளார். சிறிது இலக்கணமணம் பெற்றிருந்தாலும் இவர்கள் இலக்கணவழுவின்றி உரை எழுதுதலைக் காணுதல் அருமையாம். எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகுமாதலால் எழுதப்படிக்க எண்ணைப் பயிற்றுவித்தல் முதற்கடமைபாம். அரிச்சுவடி கற்பிக்குமுறை புதுப்பிக்சப்பட்டுளது. எண்சுவடி இறந்துபோயிற்று. பெருக்கல்வாய்ப்பாடு தலையெடுத்துளது. இவ்விரண்டு சுவடிகளைக் கல்லாதமாணவர்கள் அகராதிபார்க்க அறியார்கள். சிலேட்டுப் பலகையும் தாளும், எழுதுங்கோலுமில்லாமல் கணக்குப்பார்த்தல் இயலாதாயிற்று. ஏனெனில், எழுத்துவரிசையாகப் படிக்குமுறை நின்றுவிட்டது. ஒன்றுமுதல் பதினறுவரை பெருக்கல் வாய்ப்பாடமேயன்றி பெருக்குமுறையறிந்து பெருக்குதல் கிடையாது. கல்விக்குரவரிடம் அகராதிகிடையாது. நிகண்டு என்ற சொல்லும் மாணவக்குரவர்கட்கு மருந்தாய்விட்டது. அதுபோன்றே தானப்பெருக்கம், குழிப்பெருக்கம் முதலான இன்றியமையாத நூல்களும். இவ்வாறு இளமையில் எண்ணுமெழுத்துமறியாத அண்ணாவிகளாற் பயனென்?

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை முதலான அரும்பெருநூல்களை முற்றிலுங் கற்றுப் பொருள்விளக்க மெய்தியவர் அண்ணாவிகளிற் சிலரேயாவார். வல்லெழுத்துக்கும் இடையெழுத்துக்கும், வல்லினத்துக்கும் இடையினத்துக்கும் வேற்றுமை ஒருவாறு மனப்பாடமாக இலக்கணத்தில் சிறுபான்மையர் அறிந்திருந்தாலும் இலக்கியப்பயிற்சி யின்மையால் எழுதுவதில் அவ்வேற்றுமையை உணர்ந்து வழுவின்றிச் சொற்களை வரைதல் அருமையாம் 'அறஞ்செயவிரும்பு' என்பதை 'அரஞ்செயவிரும்பு' என்று எழுதினல் பொருள் வேறுபடுமன்றோ? தருமஞ்செய்வதை

விரும்பாமல் கொல்லன், தட்டான் கருவியைச் செய்யவிரும்புதல் நூலாசிரியர் கருத்தாகாதன்றோ? இவ்வாறு விளையுங்கேட்டை அகற்றல்வேண்டும்.

சந்திபிரித்துச் சொற்களைப்படித்தலும் எழுதலும் அண்ணாவிகட்கு அருமையாய்விட்டன. 'ஊக்கமது கைவிடேல்' என்பதை 'ஊக்கம் அது கைவிடேல்' என்று பிரியாது 'ஊக்க மது கைவிடேல்' என்றெழுதினால் பொருள் வேறுபடும். 'தைரியத்தைக் கைவிடேல்' என்பது 'ஊக்கத்தைதரும் மதுவை (கள்ளை)க் கைவிடேல்' என்று பொருள்திரிந்தால் நன்மொழி தீமொழியாகின்றது.

இஃதன்றித் தமிழில் பலபொருள்படுஞ்சொற்கள் பலவுள. 'கிழமைப்படவாழ்' இத்தொடர் மொழியில் 'கிழமை' என்பதற்கு இரு பொருள், முப்பொருள் கூறுதல் கூடும், 'உரிமை', 'உரியநாள்', 'கிழட்டுத்தன்மை' என மூன்றாம், பட' என்பதற்கும் 'உண்டாக,' 'கெட' எனப்பொருள் இரண்டாம். 'அன்புரிமை அதிகரிக்குமாறு வாழ்வாயாக,' 'நாள் சழியும் (கெடும்)—படிவாழ்க,' 'கிழட்டுத்தன்மை நீங்குமாறு வாழ்க' என மூன்று வகையாகப் பொருள் கொள்ள விடமுளது. பகரவொற்றி நுத்தலால் பின்னிரண்டு பொருளும் பொருத்தமில்லை பென்பதை அது தெரிவிக்கின்றது. ஒற்று நீங்கின் மற்றிரு பொருளுக்கிட முண்டாம்.

மற்றொன்று கவனிக்கத்தக்கது. கிளிப்பிள்ளைகள் போன்று உரைகளையுட் கொள்ளாமல் உண்மையை ஆயவேண்டும். ஆராய்ச்சி இல்லாத கல்வி ஆயத்திற்குதவாது. 'சனிநீராடு,' இதற்குப் பொருள் 'சனிக்கிழமை தோறும் குளி' என்று புத்தகங்களிற் காண்கின்றோம். ஏனையநாட்களிற் குளிக்கும் வழக்கம் இந்நாட்டில் இருந்ததில்லையா என்று ஆய்தல் முறை. இவ் ஐயத்தை நீக்கும் பொருட்டு உரையாளர் 'எண்ணெய், தைலம் தேய்த்து வெந்நீரில் குளி என்று விரிவுரை செய்திருக்கின்றனர். ஏனெனில் இவ்வழக்கம் இந்நாட்டிலுளது. சனி—ஒருகோளின் (கிரகத்தின்) பெயர். அது பெரும்பாலுங் கேடுவிளைப்பது. ஆதலால் அக்கோளிற் குரியநாளில் உடம்பிற்குக் கேடுவிளையாமலிருக்கும் பொருட்டு தைலந்தடவி சூடானநீரிற் குளித்தல் நன்மை பயக்கும் என்ற உயரிய உண்மையை அத்தொடர்மொழி விளக்குவதாகும். இப்பொருளன்றி வேறுபொருள் கொடுப்பாருமுளர். 'சனி' வடமொழிச் சொல்லென்று கொண்டு 'பிறப்பு' என்ற பொருளை அதன்மேலேற்றி 'பிறந்த,' 'ஜெனித்த,' ஊற்றிலிருந்துண்டாய' நீரிற் குளி என்று உரைசெய்வாருமுளர். குளத்திலுங் குட்டத்திலும் கட்டுக்கிடையாயிருக்கும் நீரில் குளிப்பது நோய்க்கிடமாகும். ஊற்று, யாறுபோன்று ஓடு நீரிற்குளித்தல், தலைமூழ்குதல் சிறப்பாம். 'நீராடு' என்ற தொடருக்கு 'முங்கிமுழுகல்,' என்பதே பொருளாயின் அதற்கும் குளித்தற்கும் பொருள் வேற்றுமைப்பட்டிருத்தல் விளங்கும்.

'குளித்தல்' என்ற கிளவிக்கு வழக்கத்தில் தலைநனையாமல் உடல் கழுவுதல்' என்ற பொருளுண்டு. அங்ஙனமாயின் எந்நாளும் ஓடும் நீரில் முழுகு. தலை நனையாமல் உடலைமட்டுங் கழுவாதே என்ற உறுதிப் பொருள் பயத்தற்கு இடமாகின்றது. உய்த்துணர்வார்க்கு இது புதுப் பொருளாம். இந்நாட்டில் சிறு பான்மையோர் மட்டும் கிழமை தோறும் நீர்மூழ்கி வருகின்றனர். பெரும் பான்மையோர் தலை நனையாமல் உடல் கழுவதலைப்பார்க்கலாம், நாகரிகமுற்ற சிறு பான்மையரில் பெண்களிலனேகர் தலை நனையாமல் யாறுகளில் குளித்து வருவதைக்காணலாம். அதற்குக் காரணம் நாடோறும் நீராடுவதால் தலைமயிர் கழிந்துவிடும் என்கின்றனர். குஞ்சியழகு பெண்மக்கட்கு உரியதன்றோ?

முன்னரெழுதியதில் எழுத்து, சொல்வழுக்கள் இவையென்று காட்டப்பட்டன. குரமாணவர் (குரவர் + மாணவர்)கள் எழுவாய் பயனிலை செயப்படுபொருள், பால்பொருத்தமின்றி உரை எழுதுகின்றனர். 'காயுங்கனியும் வந்தது', 'பழம் மிகுந்து வந்தன', 'ஏழு மலையை ஏறினேன்', 'அம்மா வந்தது', 'அது வந்திரிச்சு'. இத்தொடர்களை யுற்றுநோக்குமளவில் முதற்றொடரில் 'வந்தது', 'வந்தன' என்றிருத்தல் வேண்டும். இரண்டில், 'வந்தன என்பதை வந்தது' என்று திருத்துக; மூன்றில் 'மலையை' என்பதற்குப் பதிலாக 'மலைமேல்' என்று 'படிக்க; நான்காந்தொடரை 'அம்மை வந்தனள்' என்றும், ஐந்தாவதில் 'வந்திரிச்சு' என்பதை 'வந்தது' என்றும் சரிப்படுத்துக. கொச்சை மொழிகள் பேச்சுவழக்கிலிருப்பதால் எழுதுமுறையிலும் சுளுவாகப் புகுந்துவிடுகின்றன. கல்வி கற்றவர்கள் எழுத்தில் இம்மொழிகளை நீக்கவேண்டும், பெரும்பான்மையான குரவர்கள் ஒருமை பன்மை யுணராமல் தவறாக வினைகளை வழங்குகின்றார்கள். இது பெருங் குற்றமாகும். இவ்வழுவை முதன்முதலில் களையவேண்டும். பள்ளி வழக்கம் பாடைமேற் செல்லும்.

ஒரு, ஓர் இச்சொற்களை எவ்விடத்தில் வழங்குதல் சரி என்பதைக் குரமாணவர் அறிதல் கடமையாம். 'ஒரு இலை,' 'ஓர்மனிதன்' இவ்விரண்டும் பிழையாம். 'ஓரிலை', 'ஒரு மனிதன்' இவை திருத்தமாம். விதியென்னை? ஓர் என்ற சொல் உயிரெழுத்துள்ள வருமொழி முன்வரவேண்டும்; காரணம், மெய்யும் உயிரும் எளிதில் புணரும். மெய்யும் மெய்யும் புணராமல் தனித்தனி ஒலிக்கும், இவ்வழு பெரிய உரையாளர் உரையிலும் காணப்படும். குரவ மாணவர் நுட்பமறிந்து அதனை இளமையிற் புகட்டவேண்டும்.

வல்லினம், இடையினம் வேற்றுமை யறியாமல் தவறிழைப்பதை முன்னர் காட்டியுளேன். இடையின வழுவை உற்று நோக்குக. கிழவி, கிளவி இவற்றில் ழ, ள இரண்டும் இடையினம், ஒன்றிற்குப் பதிலாக மற்றொன்றை வரைந்துவிடுத்தால் பொருள் வேறு

படும். கிழவி-உரிமையுடையவள், காதலி, வயதானவள்: கிளவி-சொல், கிளக்கப்படுவது.

சொல்லடுக்கை விரும்பி பொருள் நயத்தை இழத்தலும் வழக்கம். சொல்லடுக்கும் வழக்கத்திலுள்ளவாறே வரவேண்டும், முன்வருஞ்சொல்லைப் பின்னே வைத்தல் தவறாகும். பின்வருஞ்சொல்லை முன்வைத்தலும் அதுபோன்றும். 'மேடுகாடுகளிற் செல்லுங் குருடு கூனும் இடர்ப்பட்டு இடும்பை எய்துவர்.' இத்தொடரில் 'காடு மேடு', 'கூன குருடு' சரியான சொல்லடுக்காம். 'இடர்ப்பட்டு இடும்பை எய்தல்' இதன்பொருளென்னே? துன்பப்பட்டுத் தரித்திரப்படல் என்பதே. 'இடும்பையால் இடர்ப்படுவர்', 'தரித்திரத்தால் துன்பமெய்துவர்' என்பது இயல்பு வழக்கு. இடரும் இடும்பையுமொக்குமெனின் இரண்டு சொற்களிலொன்றை எடுத்து விடலாம். அங்ஙனமெடுக்கப்படுமாயின் தொடர்முடிவு பொருட்திட்பமிழந்து ஒலியிழக்கும் தலைப்பளுவுக்குத் தக்கவாறு இறுதியுமிருத்தல் வேண்டும். அன்றியும், 'எய்துவர்' என்பதற்கு 'எய்தும்' என்றெழுதி முடிப்பாருமுளர். மேல் கீழ், நொண்டி, சப்பாணி, அக்கம்பக்கம், முதலான சொல்லடுக்கு இயல்பாம். இவற்றை மாற்றுதலால் ஒலிச்சிறப்பு ஒழியும். உரைசோதனை செய்யும், குரமாணவர் இவற்றினையுற்று நோக்குதல் தகைமையாம்.

(தொடரும்)

மு. சி. பூரணலிங்கம் பிள்ளை பி. ஏ., எல். டி.

வானத்தில் கல்யாணம்.

அமெரிக்காவில் டெட்ருயிட் என்ற விடத்தில் பூமியிலிருந்து அரை மைல் உயரத்தில் ஆகாயத்தில் மிஸ்டர் ஹாவர்ட் ஒன் போட்டர் அவர்களுக்கும் மிஸ் கிளேடிஸ் மேக்பாக்ஸ்டர் அம்மாளுக்கும் கலியாணம் நடந்ததாம். பெண் ஒரு ஆகாய விமானத்திலும் மாப்பிள்ளை ஒரு ஆகாய விமானத்திலும் ஏறிக்கொண்டனர். சுமார் 3000 அடி உயரத்தில் பறந்து இரண்டு விமானங்களும் சமீபத்தில் கொண்டுவரப்பட்டன. உடனே பாதிரியார் கலியாண சடங்குகாலத்தில் வாசிக்கவேண்டியதை வாசித்தார். அப்பொழுது விமானங்களின் அஞ்சின்கள் நிறுத்தப்பட்டிருந்தன. எல்லாம் வாசித்துமுடிந்தவுடன் அந்நாட்டு ஆசாரப்படி மோதிரம் மாற்றிக்கொண்டு புருஷனும் மனைவியும் ஒரே விமானத்தில் அமர்ந்து கீழே வந்து சேர்ந்தனர். மாப்பிள்ளைத் தோழனும், பெண் தோழியும் இதர குடும்பத்தவர்களும் கீழே நின்றுகொண்டிருந்தனர். இவர்களும் விமானத்தில் செல்லுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

* வாணிகம்.

(140-ம் பக்கத் தொடர்ச்சி.)

(1) "உழவுத்தொழில் இந்நாட்டிற்கு மிகவும் முக்கியமானதால் அதைப்பல வழிகளிலும் வளரச் செய்வதுடன் இப்போது உபாயமாக நடைபெறும் பல கைத்தொழில்களையும் வளர்க்கும் வழியை அரசாங்கத்தார் கண்டு பிடிக்கவேண்டும்."

(2) "சர்க்கரை செய்வதிலும் அதைச் சுத்தி செய்வதிலும் நாட்டிலுள்ள செல்வவான்களின் பொருள் செலவிடப்பட வேண்டும். தோல்களை இந்த நாட்டிலேயே பதனிடுதல்; பட்டு நூல், கம்பளி ஆடைகளை நெய்தல்; ஆடை நெய்வதற்கு பலவகை நார்களை பண்படுத்திக்கொள்ளுதல்; புகையிலையில் பலவிதமான வேலைசெய்தல்; காகிதம், மண்சாடி, கண்ணாடி, சோப், மெழுகுவர்த்தி முதலிய பொருள்கள் செய்யும் தொழில் ஆகிய இவைகளை வளர்க்கவேண்டும். மேலே குறிப்பிட்ட தொழில்களில் சில அரசாங்கத்தாராலேயே நடத்தப்படும் தொழிற்சாலைகளில் இப்போது நடைபெறுகின்றன."

(3) "புதிதாக ஒருதொழிலை ஒரு இடத்தில் செய்யவேண்டியிருந்தால் அல்லது இருக்கின்ற தொழிலை வளர்க்க வேண்டியிருந்தால் தேவையான சங்கதிகளை வேறு நாடுகளிலிருந்து தெரிந்து அறிவிக்க வேண்டும். அல்லது தேர்ச்சியடைந்த தொழிலாளிகளை வரவழைத்துக் கொடுக்கவேண்டும். அல்லது அரசாங்கத்தார் மேற்பார்வை செய்து உதவிசெய்ய வேண்டும். ஐக்கிய நாணய சங்கங்களை (Co-operative Banks) அதிகமாக ஏற்படுத்தவேண்டும்.

(4) தொழிற்படிப்பும் தொழில் நூல் ஆராய்ச்சிப் படிப்பையும் வளர்க்கவேண்டும். இக்காரியங்களை செய்து திறமையடைந்தவர்களுக்குப் பரிசுகளும் பதக்கங்களும் அளிக்க வேண்டும். பொருட்காட்சி சாலைகளைத் தக்க விடங்களில் ஏற்படுத்தவேண்டும். அரசாங்கத்தார் செய்யக்கூடிய பல காரியங்களினால் அதிக நன்மை யுண்டாகும். ஐரோப்பாவில் தொழில் வளர்ச்சிக்காக இந்த விதமானகாரியங்கள் நடைபெறுவதால் அவைகள் எல்லாம் இந்த நாட்டிலும் பல நடைபெற வேண்டும்.

இவையும் இதுபோன்ற பிறவுமாம். மேலேகூறிய பஞ்சக்கமிசன் அறிக்கை 1880-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

---

* தஞ்சை வர்த்தக ஆண்டு விழாவில் ஆண்டிப்பட்டி இறை திரு. பெத்தாச்சிச் செட்டியார் அவர்கள் அவைத் தலைமையில் இந்த பத்திரிகை ஆசிரியர் நிகழ்த்திய விரிவுரை.

ஆனல் அதில் சொல்லப்பட்டுள்ள முக்கியமான வேண்டுகோள் அதிகமாக கவனிக்கப்பெறவில்லை. நமதுநாட்டு மக்களைக்கொண்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்த அதிக ஆதரவு அளிக்கப்பெற வில்லை- தொழில் படிப்பை பரவச்செய்ய ஒன்றும் நம்மவர் களால் இதுகாறும் செய்யப்பெறவில்லை,

1885-ம் ஆண்டில் காங்கிரசுமகாசபை தோன்றிற்று. இந்திய பொதுமக்கள் எண்ணங்களையும் அவர்களுக்கு வேண்டிய வைகளையும் வெளியிடுவதற்காக அச்சபை ஏற்பட்டது. 1887-ம் ஆண்டுகூடிய காங்கிரசு மூன்றாவது கூட்டத்தில் பின்வரும் முடிவு நிறைவேற்றப்பெற்றது.

"தேசமக்களின் வறுமை நிலையை எண்ணித் தொழில் படிப்பை பரவச்செய்ய வேண்டிய வழிகளை அரசாங்கத்தார் எந்த எந்தஇடத்திற்கு எதுஎது எப்படி இருக்கவேண்டுமென்றும், நடைபெறவேண்டுமென்றும், எண்ணித்துணிய வேண்டும். அரசாங் கத்தாருக்கு வேண்டியபொருள்களுக்கு எல்லாம் இந்நாட்டுத்தொழி லையே பண்படுத்திக்கொள்ளவேண்டும். இப்பொழுதிருக்கும் உத் தரவுகளை ஏட்டளவில் மட்டும் விட்டுவிடாமல் அநுபவத்திலும் நடத்திக்காட்டவேண்டும். இதசேதமக்களின் சாமார்த்தியத்தை அதிகமாகப் பண்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இக்கூட்டம் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது."

அடுத்தடுத்துக் காங்கிரசு மகாசபை 1893-ம் ஆண்டு வரைக்கும் இதேமுடிபை விடாமல் பலதடவைகளிலும் நிறைவேற்று மாறு அரசாங்கத்தாரை வற்புறுத்திற்று.

பின்னர் 1896-ம் ஆண்டில் பஞ்சம்தோன்ற நாடெங்கும் நமது மக்கள் எண்ணிறந்தோர் உயிர்துறந்தனர். அந்த ஆண்டில் காங் கிரசு மகாசபை கீழே குறித்த முடிபை நிறைவேற்றியது.

பஞ்சம் அடிக்கடி வாராமல் செய்வதற்கு அரசாங்கத்தார் கூடி யவரைக்கும் வீண் செலவு செய்யாமல் முக்கியமாய் வேண்டியவை களுக்கு மட்டும் செலவழிப்பதோடு இந்நாட்டின் பொருளாதார மூல ப்பொருள்களை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும், நமது நாட்டின் தொழில்களை வளர்க்கவேண்டிய முறைகளைக் கையாள வே ண்டுமென்றும், இதுபோது மேனாட்டின் முறைகளின்படி தொழில் கள் நடைபெறுவதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டு மெ ன்றும், இந்த கூட்டம் முடிவுசெய்கின்றது.

1904-1905ம் ஆண்டுகளிலும் காங்கிரசு மகாசபை இதையே வற்புறுத்திக் கூறியிருக்கின்றது.

1905ம் ஆண்டில் காங்கிரசுமகாசபைமுடிந்ததும் அதனையடுத்து தொழில் வளர்ச்சிச் சங்கத்தின் பெருங்கூட்டம் ஒன்று சில ஆண்டுகள் நடைபெற்றன. அது போது அந்த மகாசபையில் தலைமை வகித்த பரோடா அரசரின் ஆராய்ச்சிச் சொற்பெருக்கு இந்நாள் தோறும் நம்மவர்கள் எல்லோராலும் பெரிதும் பாராட்டப் பெற்று வருகின்றது.

பின்னர்க் காலக்கொடுமையால் காங்கிரசு மகாசபை எக்காரணத்தாலோ இதுபோன்ற தொழில் வளர்ச்சியை நாடும் மகாசபைகளை (Industrial Conference) நடைபெறச் செய்யவில்லை. இதுபோன்ற வர்த்தக சங்கங்கள் பல தமிழ் நாட்டில் வளர்ந்தோங்கினால், மீண்டும் இந்த மகாநாட்டை நடைபெறச்செய்ய தமிழ்நாட்டு வணிகர்கள் எல்லாம் ஒருங்கே உடனே முன்வந்து ஒத்துழைக்க வேண்டும்.

நமது நாடு, தனக்கு நாள்தோறும், வேண்டிய மூலப்பொருள்களுக்கும் பிற பொருள்களுக்கும் பிறநாடுகளையே முக்கியமாக நம்பியிருக்கும்படியாக நேர்ந்துவிட்டது. எவ்வளவுதூரம் நமது நாடு தனது வாழ்க்கையை நடத்தப் பிறநாடுகளை நம்பியிருக்கிறதென்பது அடியிற்காணும் அட்டவணையால் தெரியவரும். 1914-ம் ஆண்டு மார்ச்சுடன் முடிவான ஒரு ஆண்டில் நமது நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் பின்வருமாறு:—

1. உணவுப்பொருள், குடிநீர், புகையிலைப் பொருள்கள் 16,44,4330 பவுன்.

அதற்கு விபரம் பின்வருமாறு:—

	பவுன்.
மீன் (தகரடப்பிகளில் வந்தது தவிர) ...	208,330
பழங்களும், காய்கறிகளும்	753,583
மாவும், தானியமும்	185,560
சாராயங்கள்	1,251,642
பிஸ்கோத் வகை	1,649,087
சம்பைச் சரக்குகள்	1,154,875
சர்க்கரை	9,97[illegible],251
தேயிலை	152,409
மற்ற ஆகாரங்களும் குடிநீரும், வறுத்துப்பொடி செய்த காப்பிக்கொட்டைத்தூள் முதலியன	511,628
புகையிலை	501,923

2. மூலப்பொருள்கள் 7,038,380 பவுன்

இதற்கு விபரம்:—

நிலக்கரியும் மற்ற விறகுப்பொருள்கள்	710,920
பசைவகை, பனிக்கட்டி	175,764
பதனிடாத தோல்கள்	101,066
வேலைசெய்வதற்காகவேண்டிய இரும்புத்துண்டுகள் ...	41,977
எண்ணெய்வகை	2,934,611
விதைகள் பலவிதம்	57,431
கொழுப்பு, மெழுகுவகை	150,638
நெசவுக்கான சாமான்கள், (பருத்தி,நார்முதலியவை) .	1,204,510
மரம்	515,590
சங்கு, கோழி, மீன், எரு, காகிதக்கூழ் முதலியன ...	1,149,873

கைத்தொழிற் பொருள்கள் 96,769,443 பவுன்

இதற்கு விபரம்:—

1.	ஆடை	1,669,389
2.	ஆயுதங்கள், குண்டு, ரவை முதலியன ...	233,713
3.	சைகிள், மோட்டார்வண்டிகள் முதலியன ...	1,422,667
4.	மருந்துகள்வகை	1,605,669
5.	கத்திவகையரு, இரும்புசாமான்கள், கருவிகள் ...	4,291,140
6.	சாயங்கள்	1,510,938
7.	மேசை, நாற்காலி முதலிய மரச்சாமான்கள்	224,323
8.	கண்ணாடிச்சாமான்கள், மண்சாமான்கள் ...	1,728,667
9.	தோல்கள் (பதனிட்டது)	266,683
10.	எல்லா விதமான இயந்திரங்கள்	5,508,397
11.	உலோகங்கள், இரும்பு, எஃகுசாமான்கள் ...	10,633,249
12.	இரும்பும், எஃகும்தவிர மற்றசாமான்கள். ...	41,010,801
13.	காகிதம், காகிதஅட்டை முதலியன	1,524,982
14	இரயில்வே சாமான்களும் வண்டிகளும் ...	6,689,794
15.	நூலும், ஆடைகளும்	50,360,043

சில்லறை சாமான்கள்.

படங்கள், இரப்பர்சாமான்கள், வாசனைதைலங்கள், ஊன்றுகோல், சவுக்கு, சோப்புவகை, விளையாட்டுச்சாமான்கள்வகை, குடையும் பிறவும் ... 5,055,963

சில்லரை (உயிருள்ளபிராணிகள். மிருகங்களின் தீனிவகை)	1,916,135
அரசாங்கத்தார் வாங்கிய பொருள்கள்	5,373,350
வெள்ளி, தங்கம் முதலிய இறக்குமதி செய்யப் பட்டவைகளின் மதிப்பு (பொக்கிஷப்பொருள் சேர்க்காமல்)	127,538,638

இவ்வாறு பண்டைக்காலத்தே, ஊக்கமும் உழைப்பும் பலவழி களிலும் சென்று பயனளித்ததெனினும், அவரது மிக்க உயர்வான நிலை பிற்காலத்தே தாழ்வு அடையலாயிற்று என்பதும் மேற்கூறிய இறக்குமதி சான்றுகளாலும் எண்ணிக்கை நன்குவிளங்கக் கிடக்கின் றது. நமது நாட்டுத்தொழில், வாணிகம் இவைகள் பெரிதும் குறை வதற்குப் பலகாரணங்களுண்டாயினும் அவைகளில் முதலாவது நமமவர்களுக்குப் போதிய கல்வியறிவில்லாததேயாகும் என்றும், ஆங்கில அறிவு ஒருசிறிது பெற்ற நம்மவர்கள் நாட்டின் பற்று ஒரு சிறிது மின்றித்தங்கள் வாழ்நாளையெல்லாம் நம்மவர்கள் முன்னேற்ற த்திற்காகப் பண்படுத்தாது ஆங்கிலேயர்கள் அமைத்து நடாத்தும் பலவகைத்துறைகளில் எல்லாம் சேவகம் செய்து தங்கள் வயிறு வளர்ப்பதே பெரிதும் கடனாகக்கொண்டதாலும் அத்துறைகளுக்கே இப்போதையகல்வி பெரிதும்பயன்படுதலாலும் உழவு, கைத்தொழில் வாணிகம் ஆகியதுறைகளெல்லாம் ஆங்கில அறிவில்லாதவர்களும், கீழோரும், ஏனையோருமே செய்யக்கூடியது என்கிற நினைப்பு நம்ம வர்களில் பெரும்பாலோர்க்கு இன்றும் நிலவியிருத்தாலும், ஏனைய நாட்டின் தற்கால நிலைமைகளேயும், வளப்பத்தையும் ஒரு சிறிதும் ஆராயாமலும் காலத்துக்கேற்ற திருத்தங்களைப்பற்றி ஒரு சிறிதும் கவனியாது நமது வாழ்நாளையெல்லாம் வீணாகக் கழித்ததாலும் ஆகிய பலனே நாம் இப்போது இருக்கும் நிலைமையென்று, சீரிய நோக்கங்கள் பெரிதும் அமைந்த நமது பரோடா அரசர் 1905-ம் ஆண்டு தொழிற்கூட்டத்துப் பேரவையின்கண் தலைமை வகித்தகாலை கூறியிருக்கின்றார். பண்டுமுதல் நமது அறிஞரெல்லாம் நம்மவர் உழவு, தொழில், வாணிபத்துறைகளை ஆராய்ந்து கவலை செலுத்தி வந்திருப்பாராயின் இத்துறைகளில் பிறநாட்டார் அடைந்திருக்கும் மேன்மையில் நாமும் அடைய ஒரு சிறிதும் ஐயமில்லை யென்பதற்கு, நமது பொய்யா மொழிப்புலவர்,

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்,
> தாழாது உஞற்றுபவர்,"

என்ற வாக்கே போதிய சான்றாகும்.

இடைக்காலத்தில், கைத்தொழிற் பெருமையை அறிஞர்கள் அறி யாது கைநெகிழவிட்டமையாலேயே, நமது நாடு இதுபோது உண்

உடுப்பதற்கும், கண்டு களிப்பதற்கும், ஊர்ந்து உலாவுதற்கும், பெருக்கி மெழுகுவதற்கும், ஓர் ஊரைவிட்டுப் பிறவூர் சென்று நமது வழிபாட்டை இறைவற்குச் செலுத்துதற்கும், உறவினரோடும், தோழரோடும் சந்தோஷத்திற்காகவாவது துக்கத்திற்காகவாவது செல்லுங்காலும் நாம் பிறநாட்டாரையும் அவர்கள் கைத்தொழிற் பொருள்கள் உதவியையுமே எதிர் பார்க்கும்படி நேர்ந்திருக்கின்றது.

இவ்வாறு பிறநாட்டாருக்கு நாம் பலவகையிலும் ஈடு பட்டிருப்பதை நீக்கிக்கொள்ள வேண்டின் நம்மைப் பிறநாட்டார் நாகரிக மக்களாகக் கருதவேண்டின் நமது நாட்டிலுள்ள எல்லாச்சீரிய நோக்கமு டைய அரசர்களும், செல்வர்களும், நல்லறிஞரும், நாட்டின் முன்னேற்றத்தைக் கருதிப் பலவகையான துறைகளில் இடைவிடாது உழைத்துப் பாடுபடவேண்டியது இன்றியமையாதது என்பதை நமது திருத்தகு திருவள்ளுவரது.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கமுடையா னுழை."

என்னும் வாக்கே நன்கு வலியுறுத்தும்.

நமது பலவேறு பட்ட சிறுமையர்ன வேற்றுமைகளை அறவேயொழித்து, நமது நாட்டின் மொழிப்பற்றே பெரிதாக வெண்ணி, பொது நோக்கத்திற்கான நமது ஆற்றல்களையெல்லாம் ஒருங்கே திரட்டி ஒற்றுமையுடன் உழைத்து வருவேமாயின் நாம் நினைத்த எண்ணங்கள் யாவும் முற்றுப்பெறுதல் திண்ணம்.

(தொடரும்,) உ. க. பஞ்சரத்தினம்.

தமிழ் அறிஞர்களுக்கு வேண்டுகோள்.

சஞ்சிகைகளுக்கு உரைநடை எழுதும் அன்பர்கள் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் விவரமான தபால் விலாசத்துடனும், சமயப்போர், பிறரைத்தூற்றல், அரசாங்கத்தாரை எதிர்த்தல் முதலியன இல்லாமலும், பொதுமக்கள் நன்மையை நாடியும், தமிழ் மாதம் முதல் தேதிக்கு 15-நாட்களுக்கு முன்னதாகவும் எழுதவேண்டும்,

எழுதும் பொருளைத் திருத்தவும், அவற்றிலுள்ள விஷயங்களைக் குறைக்கவும், கூட்டவும், அச்சிடாமல் நிறுத்தவும் எமக்கு உரிமையுண்டு. எவ்வித காரணத்தாலும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. தக்க காரணம் இல்லையேல் பதிலும் அளிக்கப்படமாட்டா. பொருள் எழுதும் அன்பர்கள் கருத்துக்கள் எம்மைப் பொருத்தனவல்ல.

அமைச்சர், "தமிழர்", தெப்பக்குளம் (போஸ்டு.)

துண்டுத் துணுக்குகள்.

வாடின பூக்கள் மலர்தல்.

சில வீடுகளில் மேஜைமேல் அலங்காரமாகப் பூங்கொத்துகளை வைப்பதுண்டு. இந்தப்புஷ்பங்கள் வாடிப்போனால், எறிந்துவிடுகிறார்கள். மேலும் வெளியூரிலிருந்து வரும் புஷ்பங்களைக் கட்டியனுப்பும்போது வேண்டிய அளவு ஜலம் தெளிக்காததால் அவைகள் வாடியிருப்பதுண்டு. இவைகளை வெகுவாய் உபயோகிப்பதில்லை. வாடின புஷ்பங்களை எறிந்துவிடாமல் சில உபாயங்களால் புதியவைபோல் செய்து மறுபடியும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புஷ்பம் அல்லது புஷ்பக் கொத்தின் அடிக்காம்பில் சிறிதளவு நறுக்கிவிட்டு, மிகுந்த சூடான (ஆனால்) கொதித்துக்கொண்டிராத ஜலத்தில் புஷ்பங்களின் காம்புகளை வைக்கவும். அரைமணி நேரங்கழித்து ஜலம் நன்றாய்க் குளிர்ந்துபோனவுடன் புஷ்பங்கள் அன்று மலர்ந்தனபோலிருக்கும். இவைகளைக் கொஞ்சம் சுத்த ஜலமுள்ள பாத்திரத்தில் வைத்திருந்தால் வெகுநேரம் கெடாமலிருக்கும். அந்த சுத்த ஜலத்தில் சோடா மா ஒரு சிட்டிகை சேர்த்தால் புஷ்பக்காம்புகள் சோடாவின் உதவியால் ஜலத்தை இழுத்துக்கொண்டு புஷ்பத்தை வாடாமல் காப்பாற்றும்.

விதவைக் குழந்தைகள்.

1921-ம் ஆண்டின் மக்கட் கணக்கின்படி கீழ்க்கண்ட எண்ணிக்கையுள்ள கைம்பெண்கள் நம் நாட்டிலுள்ளார்களாம். இதனால் குழந்தைகளுக்கு மணஞ்செய்யும் பழக்கத்தின் கொடுமையையும் அன்னாரைத்திரும்பவும் தக்க வயதில் மணஞ்செய்து கொடுக்கவேண்டிய அவசியத்தையும் நம்மவர் உணர்வார்களென நம்புகிறோம்.

ஒருவயதுக்குட்பட்ட விதவைகள்	597	5-10	85037
1-2	494	10-15	232147
2-3	1257	15-20	396172
3-4	2837	20-25	742820
4-5	6707	25-30	1163720

தங்களுக்கு ஓர் நற்செய்தி

எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும், வேண்டிய எல்லா விதமான காகிதம், மை, பேனா, பென்சல் முதலியன விலை சரசமாய்க் கிடைக்கும். ஒரு முறை விலை விபரத்தை பரீக்ஷித்தறியுங்கள்.

காரியஸ்தர்,

ஜனானுகூல அச்சுக்கூடம், பெரியகடைவீதி, திருச்சி.

ஓர் அநுபவம்.

கடையிலுள்ள சாமான்கள் தாமாகவே விலையாகா !

"விளம்பரம் செய்யாமற்போனால் எவ்வளவு நல்ல சரக்காக விருந்தபோதிலும் வியாபாரம் ஆகாது" என்று பெரிய ஆங்கில வியாபாரிகள் உறுதியாகச் சொல்லுகிறார்கள். விளம்பரம் செய்யக் கூடியது மாதச் சஞ்சிகையில்தான். ஏனென்றால் மாதச்சஞ்சிகை களை மாதம் முழுவதும் படிப்பதுமல்லாமல் ஒரு ஆண்டு கடைசியில் 12 இதழ்களும் பெற்ற பிறகேதான் ஒரு புத்தகமாக பயிண்டு செய்து எப்போதும் புத்தகசாலையில்வைத்து வாசிக்கக்கூடியது. மற்றவை அப்படியல்ல. ஆகவே, "தமிழர்" மாதச் சஞ்சிகையில் உங்கள் விளம்பரஞ்செய்யுங்கள். "தமிழர்" சஞ்சிகை இந்தியா விலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும், வெளிநாடுகளிலுமுள்ள பெருத்த வியாபாரிகள்முதல் சிறிய வியாபாரிகளையும் நாடிச் செல்லு கிறது. இது வியாபாரத்தின் முன்னேற்றத்தை நாடி வெளிவரு கிறது.

2. தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய முன்னேற் றத்தையும் நாடிவருவதால் இந்த சஞ்சிகையைப் பெற்று மகிழ்ச்சி யடையாதார் ஒருவருமே யிருக்கமாட்டார்கள்.

3. இந்த சஞ்சிகையில் விளம்பரம்செய்து அடையக்கூடிய பயனையும் விளம்பரம் செய்வதால் ஏற்படும் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், செலவு ஒன்றுமேயில்லையென்று எண்ணலாம். இதை விடக் குறைந்த சார்ஜுக்கு தமிழ்நாட்டிலுள்ள இதுபோன்ற எந்த சஞ்சிகையும் ஏற்றுக்கொள்ளாது.

4. அடுத்த ஆவணி இதழ் இதைவிட அதிக விஷயங்களைக் கொண்டு 10,000 பேருக்குச் செல்லுவதால் காலந் தாழ்க்காது உடனே உங்கள் விளம்பரத்தை அமைச்சர், "தமிழர்" தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதுக.

ஒரு முழுப்பக்கம் 15—0—0, அரைப்பக்கம் 8—0—0, கால்பக்கம் 5-0-0, துண்டுத் துணுக்கு விளம்பரங்கள் :-ஒரு வார்த்தைக்கு 0-2-0 (இது 24 வார்த்தைகளுக்கு மேற்படல் ஆகாது.)

கண்டிராக்டு ஒப்பந்தம் ரேட்டுகள்:—

ஒரு வருடத்திற்கு மொத்தமாக அட்வான்சு தொகை கொடுப்பவர் களுக்கு 100க்கு 12½ கமிஷன் தள்ளிக்கொடுக்கப்பெறும்.

ஆறு மாதத்திற்கு மொத்தமாக கொடுப்பவர்களுக்கு 100க்கு 6¼ வீதம் கமிஷன் தள்ளி கொடுக்கப்பெறும்.

மூன்று மாதத்திற்குக் குறையாமல் கொடுத்தால் 3⅛% தள்ளிக் கொடுக்கப்பெறும்.

5 ரூபாய்க்குக் குறைந்த விளம்பரப் பகுதிகளுக்கு கமிஷன் கிடை யாது. அமைச்சர் "தமிழர்" நிலையம், திருச்சிராப்பள்ளி.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41

இராமபாணம்.

இது சித்தர்கள் எல்லோராலும் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கியமான மருந்துகளில் ஒன்று. தகுந்தபடி சரக்குகளைச் சுத்திசெய்து முறைப்படி செய்யப்பட்டது. பலரால் புகழப்பட்டது. இதனால் கரப்பான், சூலை, வெடிசூலை, இடிப்புத்து, யோனிதின்னி, லிங்கந்தின்னி, அண்டத்தில் புண் புரை, ஈரல்புத்து, பித்தவெட்டை, சோகை, காமாலை, கிரந்திவகைகள், குஷ்டம் 18, வாதம் 80, கருமேகம்; மேகதடிப்பு, மேககாங்கை, செம் மேகம்முதலிய 21 வகை மேகங்களும் இன்னும் மற்றுமுண்டான கொடிய ரோகங்களும்தீரும். அசுரர் கூட்டத்தை இராமபாணம் எப்படி வேரறுத்த தோ, அதேபிரகாரம் இதுவும் வியாதிக்கூட்டங்களைப் பற்றற ஒழித்தலி னாலே இராமபாணமெனப் பெயர் பெற்றது. இதற்குப் பத்தியமில்லை.

இதன் விலை தோலா 8-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு வேறு.

கணபதி பண்டசாலை,
23, மலைவாசல், தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி.

முதல் புத்தகம் வெளிவந்துவிட்டது.

தமிழ் மக்கள் உடனே முந்துங்கள்.

சித்தர் நூல் பதிப்புக் கழகம்.

ஆரியமும், தமிழும், உயர் தனிச் செம்மொழி யென்பதும், இரண் டுக்கும், இருடிகளும், சித்தர்களும், தலைவர்கள் என்பதும், இலக்கணம் மந்திரம் முதலியன வேறு வேறு என்பதுபோலவே வடமொழி வைத் திய (ஆயுள் வேத)மும், சித்த வைத்தியமும் வேறென்பதும். ஆரி யர் இந்தியாவுக்கு வருமுன்னரே, தமிழர்கள் மிகவும் சீர்திருத்த மடைந்து விளங்கினார்கள் என்பதும், பிறவும், உணர்வதற்குக் கரு வியாகவுள்ளது. சித்தர்நூற் பதிப்புக்கழகத்தின் முதல் வெளியீடாகிய திருமூலர்கருக்கிடைவைத்தியம் 600. இதன் முகவுரையானது படிப்போ ருள்ளத்தில் புதிய வுணர்ச்சியை யுண்டுபண்ணுமென்பது மிகையாகாது. தமிழின் பண்டைக்கால நாகரிகத்தினை விளக்குவதற்கே தோன்றிய இக்கழகத்தில் ஒரு ரூபாய் கட்டி உறுப்பினராவது தமிழ்மக்களின் முதற் கடமையேயாகும். புத்தக விலை: ஒரு ரூபாய் கட்டி உறுப்பினரானவர் களுக்கு அணு 8. அல்லாதாருக்கு ரூ. 1. தபால் செலவு வேறு.

விலாசம்:

சித்தர் நூல் பதிப்புக் கழகம்,
யோகானந்தாச்சிரமம்,
P. O. வண்ணை, சென்னை.

49

பொதுக்குறிப்புகள்.

புலால் உணவு மக்கள் உடலுக்காகாது.

ஒரு பெரிய அமெரிக்கா டாக்டரின் எண்ணம்.

அமெரிக்காவில் பிரபல வைத்திய சாஸ்திர பண்டிதராகிய டாக்டர் ஆர். எச். பேர்க்ஸ் என்பவர் மாமிசபோஜனம் மனிதருடைய தேகத்திற்கு இசையாததென்னும் அபிப்பிராய முடையவர். மாமிச உணவை ஒழித்துச் சைவ உணவைக் கொண்டு வாழ்கின்றார். அவர் தேகாரோக்கியமும் தேகபுஷ்டியுமுடையவராக இருக்கின்றார். இப் பிரபல பண்டிதர் அமெரிக்காவில்போஜன கிரமசங்கத்தார் ஒருவர் சைவ போஜன இயல்பைப் பற்றிச் சில விஷயங்கள் கேட்டபோது பின் வருமாறு கூறினர்.

1. ஒருவன் தன் ஆயுள் முழுவதும் தேகாரோக்கிய முடையவனாகவும் தேகபுஷ்டி யுடையவனும் விவேகியாயும் இருக்க வேண்டினால், அவன் மாமிச போஜனத்தை அறவே யொழித்துச் சைவ உணவுகளையே உட்கொள்ளல் வேண்டும். உயர்ந்த சன்மார்க்க முறையை அனுசரித்துப் பரிசுத்தமாகவும் மனித இயல்புக்கு இயைந்ததாகவும் உள்ள சைவ உணவு கொள்வது ஒன்றே எங்கும் பரவி நிலைபெற்றிருப்பதற்குக் காரணமாகிய நன்மார்க்கமாம்.

2. உலகமெங்கும் பரவி யிருக்கும் வியாதிகளும் தேக துர்ப்பலங்களும் வாயுரோக பாஷாண சம்பந்தமான வேறு பலவியாதிகளும் மாமிச போஜனத்தினாலேயே உண்டாகின்றன. அல்லது, மாமிச போஜனஞ் செய்தவர்களாகிய பூர்வீகர்களுடைய வம்சத்திற் பிறப்பதனாலும் உண்டாகின்றன. ஆயினும், முறையாகச் சைவ உணவு செய்துவரக்கூடுமானால் அவ்வியாதிகளெல்லாம் அறவே ஒழிந்துபோம். நன்றாய்ச்சமைக்கப் படாததும் நோயுள்ளதுமாகிய மாமிசத்தைப் புசிப்பதனால் சொரி சிரங்கு முதலிய தொத்து வியாதிகள் உண்டாகின்றன.

3. இன்னும் ஆஸ்டிரேலியா கண்டத்தில் உழைப்பாளிகளான பக்குவமடைந்த இளம் பெண்கள் மாமிசங்களை விசேஷமாகத் தின்பதனால் அவர்களெல்லோருக்கும் பெரும்பாடு என்னும் உதிரப்பெருக்கு நோய் உண்டாயிருக்கின்றது.

4. சைவ உணவால் விளையும் நன்மைகளை நன்கு அறிந்த ஆங்கிலேய வைத்திய பண்டிதர்கள் எல்லோரும் தம் அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு அஞ்சுகிறார்கள்; மாமிச உணவு நீக்கிவிடுவதனால் கெடுதியுண்டாகுமென்று நினைக்கும் ஜனங்களெல்லாரும் தம்மை அவமதிப்பார் என்றும், தமது பிழைப்புக்குக் குறைவு வருமென்றும் நினைப்பதனாலேயாம். இனி இந்தத் தடைகள் எல்லாம் நீங்குமானால் அப்பண்டிதர்கள் தாராளமாய்த் தம் அபிப்பிராயங்களை வெளியிடுவார்கள்.

5. மாமிசத்தைப் புசிப்பதனால் அஜீரணம் உண்டாகி வாயுரோகம் முதலிய பல வியாதிகள் உண்டாகின்றன. ஜீரண சக்தியை மிகவும் உண்டு பண்ணும் சைவ உணவால் அவ்வியாதிகள் எல்லாம் ஒழிந்துபோகின்றன.

6. பிரபல வைத்திய சாலைகளில் யாம் உத்தியோகம் செய்தபோது அங்கங்கு யாம் தேக பரிசோதனையின் பொருட்டு வியாதியஸ்தர்களின் தேகங்களைப் பதின்மூன்று வருஷ காலமாக, ஏறக்குறையப் பதினாயிரம் பேர் வழிகள் வரையில் அறுத்துப் பார்த்தபோது அவர்களில் ஒருவராவது சைவஉணவு கொள்பவர் அல்லர்; எல்லாரும் மாமிச உணவு கொள்பவர்கள் தாம்.

7. சைவ உணவு கொள்பவர்களாகிய இந்துக்கள் இத்தகைய கொடிய வியாதிகளால் பீடிக்கப்படாது பெரும்பாலும் தேகாரோக்கிய முடையவராக இருக்கின்றனர்.

8. மாமிச உணவு கொள்கிறவர்களுக்கு ஜீரண சக்தி குறைந்து போவதனால் அதனை நிவர்த்திக்கும் பொருட்டு மதுபானங்களை உபயோகப்படுத்துகிறார்கள், சைவபோஜனம் செய்பவர்களுக்கு ஜீரண சக்தி குறைவுபடாமையால் அவர்கள் மதுபான வஸ்துக்களை உபயோகிப்பதில்லை. நாம் அறிந்த மட்டிலும் சைவபோஜனஞ் செய்பவர்களுக்கு மதுபான திரவியங்கள் கொஞ்சமும் வேண்டப்படுவதேயில்லை. இதனால், சைவ போஜனம் எங்கும் விர்த்தியாகுமானால் மதுபான வழக்கம் அறவே ஒழிந்து போம். (ஞான சாகரம்)

காலரா விளம்பரம்.

தற்போது எங்கு பார்த்தாலும் சிற்சில கிராமங்களிலும் காலரா வியாதி நடமாட்ட மிருந்துகொண்டிருக்கிறது, காலரா வியாதி யுண்டாகும் காரணம்பற்றி நமது சுகாதார சபையாரவர்கள் பொதுவாய் சுத்தமா யில்லாத விடங்களில்தானிந்த கொடிய வியாதி பரவு மென்று சொல்லுகிறார்கள். அவை மெய்யே.

நமது புராதான சாஸ்திரங்களிலும் இதைத்தான் வெகுவாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஞானவாசிட்டம் கற்கடிபடலத்தைப் பார்க்கவும். ஆகவே நாமிருக்குமிடத்தைப் பரிசுத்தமாகச் செய்து கொண்டாலந்த வியாதி பரவுதற்கு ஞாயமே இல்லை. பார்ப்பனர் வசிக்கும் தெருக்களிலிந்த வியாதி விசேஷமா யுண்டாவதில்லை யென்பதைக் குறிப்பிடலாம்.

ஆனால் கோடைக் காலத்திலுண்டாகும் காலராவேறு. மழைக் காலத்திலுண்டாகும் காலராவேறு. கோடைக்காலத்தில் வெக்கை யதிகத்தாலுண்டாவதால் துவரானமருந்துகளாக இருத்தல்வேண்டும். குடி தண்ணீரை சுத்தமாய்க்காப்பாற்ற வேண்டும். தண்ணீரைக்காய்ச்சி வடிகட்டி உபயோகிப்பதே எப்போதும் நல்லது.

காலரா காலங்களில் கிணற்றுத்தண்ணீரே மிகவும் சிலாக்கியமானது. வீட்டெக்கருகாமையில் கொசுக்கூட்டங்களும் ஈக்கூட்டங்களும் மொய்க்க விடாமலிருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்: சாக்கடை முதலிய கசமாலங்களை சுத்தப் படுத்திவைத்துக் கொள்ளவேண்டும். காலராநோய்

கண்டால் அவர்களுடன் நெருங்கிக் கட்டிப் புரளுவதாலும் அவர்களிடமிருந்து வெளிப்படும் மலமூத்திரங்களை நாம் புரட்டிக்கொள்வதாலும் அவ்வியாதியஸ்தருக்கு நம்மாலுண்டாகும் நன்மை ஒன்றுமில்லை. அப்படிச் செய்து கொள்வதால் மட்டும் அவர்களிடம் நமக்குண்டான அன்பும் பிரியமும் அதிகப்படுவதில்லை. தூரத்திலிருந்து அவருக்கு வேண்டுமான மருந்து முதலிய உதவிகளைச் செய்வதே அவர்களிடம் நாம் வைத்த அன்பு விர்த்தியாகும்.

காலரு வியாதிக்காரருக்குத் தாகமடங்கத் தண்ணீர் கொடுப்பதைக் காட்டிலும் உதவி வேறொன்றுமில்லை யென்பது அநுபவம்.

எந்த மருந்தும் ஒருவகையாயும் ஒரே வைத்தியரின் இஷ்டப்படி கொடுப்பது மிகவும் நன்மையான காரியம். வியாதியின் கொடுமையால் அவதிப்படும் நோயாளியின் தடபுடலுக்காகவும் வியாதிக்காரனுக்குச் சொந்தக்காரர்கள் பொறுமையில்லாமல் பதறுவதற்காகவும் வைத்தியனும் தடபுடலாயும் நிதானமில்லாமலும் அதிக்கிரமமான மருந்துகளை கண்டபடி வேளைக்கொரு மருந்துகளைக் மாற்றிக் கொடுத்து வியாதிக்காரன் வயிற்றை நிரப்பி குடலையும் புண்படுத்தலாகாது. அப்படிச் செய்யும் வைத்தியம் வியாதியஸ்தனுக்குப் பிரதிகூலமே செய்யும்.

காய்ச்சி வடிகட்டி ஆறின வெந்நீரில் ஒன்றிரண்டு துளி எலுமிச்சம் பழச்சாறு விட்டுக்கொடுக்கலாம்.

சூடப்பதங்கத்தில் தேன்விட்டுக் குழைத்து வைத்தியர் குறித்த அளவில் கொடுக்கலாம். துப்பாக்கி மருந்தை 2 அரிசி எடை வீதம் தேனில் குழைத்துக் கொடுக்கலாம்.

வேப்பிலையும், ஓமமும் கருக்கி கஷாயம் செய்து கொடுக்கலாம். மத்தாப்பு சுட்டசிட்டத்தை தேனில் குழைத்துக் கொடுக்கலாம். சுண்ணும்பும் மஞ்சளும், கருக்கிக் கொடுக்கலாம். மிளகாய் வற்றலை தேன் விட்டு அறைத்துத் தேனில் குழைத்துக்கொடுக்கலாம். பார்லி அரிசி தண்ணீர் கொடுக்கலாம்.

சூடம் பலம் 1; ஓமஉப்பு பலம் $\frac{1}{4}$; பொதி உப்புபலம் $\frac{1}{8}$; 3-ம்சேர்த்து வைத்தால் தைலமாகும்; 2, 3 துளி வீதம் தண்ணீரில் விட்டு மணிக்கொரு தடவை கொடுக்கலாம்.

ஜி. கண்ணுசாமிப்பிள்ளை, வைத்தியபதி.

இதுதான் இயற்கை வாழ்வு.

ஐரோப்பாவில் ஸ்விட்ஜர்லாந்து நாட்டில் ஜூரிச் மாகாணத்திற்கருகிலுள்ள ராபர்ஸ்விப் என்னும் ஊரில் ஏடன் தோட்டவாசிகள்'' என்று சொல்லிக்கொண்டு ஒரு நூதன வகுப்பினர் புதிதாகக் கிளம்பியிருக்கின்றனர். இந்த கூட்டத்தார் ஆதம், ஏவாள் ஆதிகாலத்தில் வாழ்ந்த வண்ணம் தங்கள் வாழ்நாட்களைக் கழிப்பதே தகுதியுள்ளதென்று நம்புகிறார்கள். இந்தக்கூட்டத்தில் வெவ்வேறு தேசங்களின் பெண்கள் சிலர்வந்து சேர்ந்தார்கள். அச்சங்கத்தில் சைனியத்தினின்றும் விலகியுள்ள ஒரு தளகர்த்தரும் பெரியவம்சத்தைச் சேர்ந்த ஒரு சீமாட்டியும் கூடச்சேர்

திருக்கின்றனர். அவர்களைக்கேட்டால், தங்களுக்கு இவ்வுலக வாழ்க்கையின் தற்கால தோரணைகளும், சம்பிரதாயங்களும் பிடிக்கவேயில்லையென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் ஒரேயொரு உடை மாத்திரம் அணிந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வுடை முழங்கால் வரையில் தான்தொங்கும். ஆனால் தெய்வத்தைத் தொழக்கூடும்பொழுது இவ்வுடையையும் களைந்து விடுகிறார்கள். இவ்விதப் பிரார்த்தனைக்கூட்டங்கள் வாரத்தில் இருமுறை கூடும். அவ்வூர் வாசிகள் தாங்கள் போகும் சோலைக்கருகிலுள்ள மரங்களுக்கிடையில் ஆடையணியாது ஆண்களும் பெண்களும் பாடிக்கொண்டும் உலாவிக்கொண்டுமிருப்பதைக்கண்டு பிரமித்து இந்தசுகவலைப் போலீசாருக்கறிவித்தார்கள். போலீசார்இக்கூட்டத்தாரை அக்கோலத்துடனே கைதி செய்து, அவர்களிடமுள்ள உடையை அணியச்செய்து போலீஸ் ஸ்டேஷனில் அவர்களுடைய பெயரைப் பதிவு செய்து கொண்டார்கள். இச்சங்கத்தார் தங்களுடையவிலாசம் "பூலோகம்" என்று சொல்லுகிறார்கள்!"

1001-ம் இலை அதிசயம்.

திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த வைக்கம் என்னும் சிவக்ஷேத்திரத்தில் தினந்தோறும் ஓராயிரம் ஜனங்களுக்கு ஆலயத்தில் அன்னமிடுகிறார்கள். சாப்பாட்டுக்காக ஜனங்கள் சாரி சாரியாக கோவிலுக்குட் புகும்போது முகத்துவாரத்தில் காவலாளர் நின்று விழிப்புற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனங்களை எண்ணி ஒவ்வொருவரும் உண்பதற்கு ஒரு பெரிய வாழையிலையைக் கொடுக்கிறார்கள். இலைகளைப் பங்கிடுமுன் அவைகளை எண்ணி ஏற்றக் குறைவில்லாமல் சரியாக ஓராயிரம் கணக்கிட்டு வைக்கிறார்கள். ஓராயிரமானவுடனே ஓராயிரத்தவன் கடைசியாக உட்புகுந்தவுடனே கோவிற்கதவுகளைச் சாத்தி விடுகிறார்கள். ஆயிரம் ஜனங்களும் வித்தியாசம் பாராட்டாமல் சமமாக உட்கார்ந்த பின்பு அவர்களைமறுபடியும் எண்ணிப்பார்க்கிறார்கள். ஆயிரம்ஜனங்களுக்கு அன்னம் பரிமாறுகிறார்கள். திரும்ப எண்ணிப்பார்க்கிறார்கள் ஆனால் அன்னமுண்ட இலைகளை மறுபடி எண்ணிப்பார்க்கும் போது ஓர் இலை அதிகமாக யிருக்கின்றது. மொத்தம் ஆயிரத்தோர் இலைகள் காணகின்றன. இது பெரிய அதிசயமாயிருக்கின்றது. ஆயிரத்தோராம் இலை எப்படி வந்தது? ஆயிரத்தோராவான் யாவன்? இவ்வற்புதத்தை நாஸ்திகர், பௌதிக சாஸ்திரிகள் ஜாலவித்தை வல்ல மாயாவிகள், முதலான பற்பலரும் காதலுப்பார்த்து எண்ணி ஆராய்ந்து ஆலோசித்து இந்தச் சூதைக் கண்டுபிடிக்க ஆனவரையில் பிரயத்தனப்பட்டார்கள். இது சூதானால்லவோ இவர்கள் கண்டு பிடிப்பதற்காகும்? இவ்வற்புதத்தின் காரணத்தை எவருமே கண்டறிந்தாரில்லை. வைக்கத்து அப்பனே ஆயிரத்தோராவது இலையில் சாப்பிடுவதாக ஐதிகம்.

செய்திக்கொத்து.

பெர்க்கன்ஹெட் பெருமகனாரின் விரிவுரை.

இந்திய அரசியல் அமைச்சர் (Secretary of State for India) பெர்க்கன்ஹெட் பெருமகனார் ஆங்கிலப் பெருமக்கள் மன்றததில் (House of Lords) இந்திய நாட்டைப்பற்றி ஏதோ நண்மைசெய்யப் போவதாகத் தாம் வாக்களித்திருந்தபடி ஓர் பெருஞ்சொற்பொழிவு செய்தார். காலஞ்சென்ற திரு. தாசர் உட்படப்பல பெரியோர்கள் அச்சொற்பொழிவில் இந்தியாவுக்குப் பல நன்மைகள் கொடுக்கப்படுமென்பதாக விளம்பரஞ் செய்யப்படுமென்று எதிர்பார்த்திருந்தார்கள். அவர்களுடைய ஆசை வீணாகப் போயிற்று. நல்லவேளை! இச்செய்தி வரு முன்னரே திரு தாசர் காலஞ்சென்றார். அத்துரைமகனார் செய்துள்ள பெரிய விரிவுரை சிறிய வெற்றுரையாகக் காணப்படுகிறது. ஆங்கில நாட்டில் இப்பொழுது அதிகாரத்திலிருப்பவர்கள் முற்போக்குக்கஞ்சிய (Conservatives) கட்சியாராவர். எனவே, இந்தியாவுக்குப்புதிதாக ஒரு உரிமையையும் அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதிற்பயனில்லை. ஆங்கில அரசாங்கத்தாரும் அவர்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட இந்திய அரசாட்சியாரும் இப்பொழுது இதனைப் போற்றிப் பின்பற்றிவரும் சென்னை நியாயக்கட்சி போன்ற மிதவாதிகளுக்குங் கூட வருத்தத்தையும் வெறுப்பையும் உண்டுபண்ணிவருகின்றன. இரட்டையாட்சிவேண்டாமென்று கூக்குரலிட்டுவரும் நமக்கு இரட்டையாட்சிதானிருக்கவேண்டுமென்று அதிகாரத்தோடு பெர்க்கன்ஹெட் பெருமகனார் சொல்லிவிட்டார். 1929ம் ஆண்டுக்கு முன்னர் ஒருவித உரிமைகளும் கொடுக்கப்படாவாம். "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்", என்ற பழமொழியின் உண்மை இப்பொழுதுதான் தெளிவாக விளங்குகின்றது. காந்தியடிகள் சொல்லுகிறபடி நமது வீட்டை நாம் ஒழுங்காக வைத்துக்கொண்டால் எவ்வித உரிமைகளும் தாமாகவே நம்மை வந்து அடையும். ஆங்கிலமக்களின் பிற்போக்கான எண்ணங்களை மாற்றி இந்தியாவுக்குப் புதிய உரிமைகள் பெறுவதற்கென திரு. ஏ. இராமசாமிமுதலியாரும், திரு. எஸ். சத்தியமூர்த்தி அய்யரும் ஒன்றுசேர்ந்து சீமையில் சொற்பொழிவுகள் செய்துவருகிறார்கள். நாமும் இங்கு ஒற்றுமைக்காகப் பெரும்பாடு படுவோமாக.

சி. வே.

பனகால் அரசர்.

சர் பிட்டி தியாகராயச் செட்டியாரின் இடத்துக்குச் சென்னை மாகாண முதன்மை யமைச்சரும் பார்ப்பனரல்லாதாரின் பழந்தலைவர்களுள் ஒருவருமான பனகால் அரசரை நியாயக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

திரு. ஜே. எம். சென் குப்தர்.

சுயராச்சியக்கட்சியார் திரு. தாசரின் இடத்துக்கு திரு. சென் குப்தரை கட்சித்தலைவராகவும் கல்கத்தா நகராண்மைக்கழகத்துத் தலைவராகவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

கட்டாயப் போர்ப்பயிற்சி.

நம் நாட்டைப் பகைவரிடமிருந்து பாதுகாக்க நமக்குத்திறமையில்லாமையால் நமக்குத் தன்னரசு கொடுக்கப்படாதென நமது அரசாட்சியாரும் மற்றோரும் நம்மைக் குறைகூறுகின்றனர். அவர்கள் சொல்வது முற்றும் உண்மையாகையால் அவர்களுக்குத்தக்க மொழியொன்றும் நம்மாற் கூறுவதற்கில்லை. நாம் போர்முறைகளைத் தெரிந்துகொள்வது நமது அரசாட்சியார்க்கு இன்பத்தைத் தராதென்பதும் போர்முறை தெரிந்துகொள்வதில் நமக்கும் ஊக்கமில்லையென்பதும் யாவரும் அறிந்த உண்மைகள். தன்னரசு அவாவுகின்ற நாம் போர்க்குப்பின்னிடுவது பெருந்தவறு. கொள் என்றால் வாயைத்திறப்பதும் கடிவாளமென்றால் இறுக மூடிக்கொள்வதும் மிகவும் இழிவானசெயல். போர்செய்தல் கொடுந்தொழிலெனினும் உலகத்தார் எல்லோருமே போர்த்தொழிலைக் கைவிட்டாலொழிய, நாம் போர்க்குஆயத்தமாக இல்லாதிருப்பது நமது அழிவுக்கே காரணமாயிருக்கும். ஆகையால் மேல் நாடுகள் போல், கல்லூரியிற் படிக்கும் ஆண்மக்களெல்லோரும் போர்முறை பயின்று தேர்ச்சிப்பெற வேண்டும். அவ்வகை ஏற்பாடு செய்தால் நம்நாடு எவ்வேளையிலும் பகைவரை எதிர்த்துத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமை எய்தும். நாம் இப்பொழுது சேனைகளுக்காகச் செய்துவரும் பெருஞ்செலவும் மிகக் குறையும். எனவே, கட்டாயப் போர்ப்பயிற்சி நம் நாட்டிற்கு இன்றியமையாதது.

சி. வே.

உரிமைகள் மலிந்த "ஒற்றுமைப்பட்ட அமெரிக்க நாடுகள்."

"ஒற்றுமைப்பட்ட அமெரிக்க நாடுகள்" எனப்படும் (United States of America) நாடு இருநூறு வருடங்கட்கு முன்னர் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்து, தாய் நாட்டுடன் நேர்ந்த சில சண்டைச் சச்சரவுகளாற் பெரும்போர் நிகழ்த்திக் குடியரசாக மாறிற்று. அந்நாட்டில் மக்களுக்கு அதிக உரிமைகளுண்டென்றும் மக்களாட்சி (Democracy) பெற்றநாடுகளிலெல்லாம் அந்நாடே மிக்க புகழ்பெற்றதென்றும் கூறுவர். இவ்வாறு போற்றப்படும் நாட்டில் நமது இந்திய மக்களை ஓராண்டாக மிக இழிவாக நடத்திவரத் தொடங்கிவிட்டார்கள். பல இந்தியர்கள் அமெரிக்காவுக்குச் சென்று கல்வி கற்று அலுவல்கள் பெற்று அந்நாட்டுப் பெண்மணிகளையும் மணந்து குடியேறியுள்ளார்கள். இதுவரை அவர்களெல்லோரும் அந்நாட்டு மக்களாகவே எண்ணப்பட்டு உரிமைகள் கொடுக்கப்பட்டு வந்தனர். இப்பொழுது அவர்கள் "அடிமைகளல்லாத வெள்ளைச் சாதியாரைச் சேராதவர்களென்ற குற்றத்துக்காக அந்நாட்டு மக்களல்லவென்று நீதிமன்றத்தில் தீர்ப்பாகிவிட்டது. இவர்களுடன் இவர்களை மணந்த அமெரிக்கப் பெண்மணிகளும் உரிமையற்றவர்களென விளம்பரஞ் செய்யப்பட்டுள்ளார்கள். இவ்விந்தியர்களும் அவர்களுடைய மனைவியர் மக்களும் இந்தியச்சட்டப்படி இந்திய மக்களாகவும் கருத வழியில்லையாம். நமது சட்டப்படி அமெரிக்கர்களுக்கு நம்மைவிட தண்டனை முதலிய விஷயங்களில் சிறப்பான விதிகள் ஏற்பட்டுள்ளன. ஏன் நமது சட்டசபை உறுப்பினர்கள் கிளர்ச்சிசெய்து நமது சட்டத்தை மாற்றி அவர்களுக்கு அறிவு புகட்டப்படாது?

சி. வே.

தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்து இருப்புப்பாதை.

தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தார் (District Board) தமது சொந்தப் பணத்திலிருந்து போட்டுள்ள இருப்புப்பாதையைத் தென்னிந்திய இருப்புப்பாதையாளர்க்கு விற்றுவிடும்படி இந்திய அரசாட்சியார் கேட்டிருக்கிறார்கள். முன்னொருகாலத்தில் அரசாட்சியாரே முன் வந்து நமது மாகாணத்திலுள்ள மாநாட்டாண்மைக் கழகங்களை இருப்புப்பாதைகள் போட்டுக்கொள்ளும்படி தூண்டியதுண்டு. அப்போது இதற்கெனத் தனியாக வரிபோட்டு, ஏராளமான பணம் சேர்த்துப் பல இடையூறுகளையுங்கவனியாது முதல்முதல் இருப்புப்பாதை போடத்துணிந்தவர்கள் தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தாரேயாவர். அவர்களை இவ்வாறு வருத்தி உண்டாக்கிய இருப்புப்பாதையை விட்டுவிடும்படி இப்பொழுது கேட்பது சரியாகாது. திருவாரூர், அறந்தாங்கி இருப்புப்பாதையைச் செட்டி நாட்டின் வழியாகக் கொண்டுபோய் இராமநாதபுரத்தோடும் தூத்துக்குடியோடும் சேர்த்துக் குறுக்குப்பாதை ஏற்படுத்துவது தென்னிந்திய இருப்புப்பாதையாளர்க்கு இடைஞ்சலாயிருக்குமென்றால் அதற்குப்பதிலாக தஞ்சை மாநாட்டுக்குள் வேறோரிடத்தில் அதே அளவுக்கு ஏதாவது இருப்புப்பாதைத் துண்டைக் கொடுத்துவிடுவது ஒழுங்காகும். இவ்விஷயத்தைப்பற்றி ஒரு திங்கட்கு முன்னர் உதக மண்டலத்தில் கோஷின் பெருமகனும் பனகால் அரசரும், தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தலைவர் திரு. பன்னீர்ச்செல்வ உடையாரும், இந்திய இருப்புப்பாதைக் கழகத்து உறுப்பினர் திரு. சைம் என்பாரும், தென்னிந்திய இருப்புப்பாதைத்தலைவர் திரு பி.சி. ஸ்காட்டும் கூடி ஆலோசனை செய்தார்கள். விழுப்புரம்—திருச்சி; மாயவரம்—திருச்சி; மாயூரம்—அறந்தாங்கி; ஆகிய இம்மூன்று பிரிவுகளையும் முக்கியபாதைகளாக ஏற்படுத்தப்போவதால் இருப்புப்பாதைப் பிரிவுகளொன்றும் கொடுக்க இயலாதென்று திரு. ஸ்காட்டு சொன்னதின்பேரில், திரு. சைம் தஞ்சைமாநாட்டாண்மைக கழகத்தாரைத் தென்னிந்திய இருப்புப்பாதையாளருடனும் இந்திய அரசாட்சியாளருடனும் தென்னிந்திய இருப்புப்பாதைகள் முழுமைக்குமே மூன்றாவது சொந்தக்காரர்களாக்கி, வருகிற இலாபத்தை அரசாட்சியாரும் தென்னிந்திய இருப்புப்பாதையாளரும் பங்கிட்டுக்கொள்வதுபோல் தஞ்சைமா நாட்டாண்மைக் கழகத்தாருக்கும் பங்கிட்டுக் கொடுத்து விடலாமென்று யோசனை கூறினர். இது திரு. சைம்மினுடைய சொந்த யோசனையாகையால் இந்திய அரசாட்சியார் ஒப்புவார்களோ என்னவோ, எனினும், சில கட்டுப்பாடுகளுடன் இந்த யோசனையை ஒப்புக்கொள்ளுதல் தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்துக்கு அதிக இலாபத்தையுங் கொடுக்கும், தொந்தரவும் குறையும்.

நேபாளத்தில் அடிமை வணிகம் ஒழிந்தது.

நேபாள அரசர் நாற்பது இலட்சம் ரூபா கொடுத்துத் தமது நாட்டிலுள்ள அடிமைகளையெல்லாம் விலைக்கு வாங்கி விடுதலைசெய்துவிட்டாராம். இனிமேல் அடிமைகள் இருக்கப்படாதென்றும் சட்டம் விதிக்கப்பட்டுள்ளதாம்.

மேல் நாடுகளின் தற்கொலை முயற்சி

ஆங்கில நாட்டு அமைச்சருள் ஒருவராய திரு. சர்ச்சில் இயற்றிய ஓர் கட்டுரையில் வெள்ளையர்கள் விரைவில் இவ்வுலகத்தில் இல்லாமலே ஒழிந்து விடுவாரோ என்று அஞ்சுகிறார். சென்ற பெரும்போர் முடிந்ததற்குப் பிறகு ஒவ்வொரு நாடும் அடுத்த பெரும்போர்க்காக ஆயுதங்களைச் சேர்த்துக் கொண்டும், கப்பற்படைகளையும், ஆகாயப்படைகளையும், காலாட் படைகளையும் அதிகப்படுத்திக்கொண்டும். மின்சாரம், விஷக்காற்று முதலிய கொடிய பொருள்களின் உதவியைத் தேடிக்கொண்டும் இருக்கிறார்களாம். இவ்வகைப்போர்களினால் ஒருக்கால் நல்லொழுக்கமும் நல்லறிவுமுடைய நாடுகள் அழிந்து பழிக்கும், பாவத்துக்கும் அஞ்சாத கொடிய நாடுகள் தலைசிறந்து விளங்குமென்றும் எதிர்பார்க்கிறார். போர் என்பதேயில்லாது ஒழித்துவிடுவதாகக் கூறிவரும்பல நாட்டார் அவையம்(League of Nations) முற்றும் பயனற்ற அவையம் என்பது போதரும்' சி. வே.

மேட்டூர் பேரணை.

ஈரோட்டுக்கு முப்பது மைலுக் கப்பால் காவேரியை மடக்கி ஓர் பெரிய அணைகட்டுவதற்கு நமது மாகாண அரசாட்சித் தலைவர் கோஷீன் பெருமகனாரும், சர் செ. ப. இராமசாமி ஐயரும், தலைமைப் பொறிவளாலரும், வளர்நெறியமைச்சரும் பிறரும் மேட்டூருக்குப் போயிருந்து அடிப்படைக்கல் நட்டுவந்துள்ளார்கள். இவ்வணையால் தண்ணீரைத் தேக்கி வைத்திருந்து தஞ்சையிலுள்ள பட்டுக்கோட்டை அறந்தாங்கி, உரத்த நாடு தாலுக்காக்களுக்கு புது ஆறுகள்வழியாகத் தண்ணீர்ப் பாய்ச்சி நஞ்சைப் பயிர்த் தொழிலை வளரச் செய்ய வேண்டுமென்பது அரசாட்சியாரின் எண்ணம். இத்துடன் மேட்டூரில் அணையிலிருந்து வழிகின்ற நீரின் வேகத்திலிருந்து மின்சாரம் உண்டாக்கவும் ஏற்பாடு செய்கிறார்களாம். இதற்குச் செலவு மதிப்பு ஆறரைக்கோடி ரூபா எனத் தெரியவருகிறது. சி. வே

பழைய தென்னிந்திய அரசரும் நீர்ப்பாய்ச்சலும்.

கடைச்சங்ககாலத்திலிருந்தே தென்னிந்திய அரசர்கள் தம்நாடுகளுக்குக் குறைவற்ற நீர்வளன் அமையவேண்டுமென்ற எண்ணத்தோடு பல அரிய வேலைகள் செய்துள்ளார்கள். காவிரியாற்றில் வெள்ளம் வந்து ஊர்களையும் பயிர்களையும் ஆண்டுதோறும் அழித்து வருவதைத்தடுக்க வேண்டி சோழன் கரிகாலன் அவ்வாற்றின் இருபக்கமுமுள்ள கரைகளை உயர்த்தினதாகவும், பலபுதிய யாறுகளையும் கால்வாய்களையும் வெட்டியதாகவும் சரித்திரங்கள் கூறும். இது போலவே சோழ அரசர்கள் அணைகள் கட்டியதாகவும் ஆறுகள் வெட்டியதாகவும் அறியக்கிடக்கின்றன. இவ்வுண்மைக்குக் காவிரியின் பிரிவுகளாகிய ''முடிகொண்டான்'', ''வீரசோழன்'' போன்ற பெயர்களே போதிய சான்றுகள். நமது நாட்டுப்பல்லவ அரசர்கள் மழையில்லாத இடங்களில் ஏரிகளையும் குளங்களையும் வெட்டி நீர்ப்பாய்ச்சலுக்கு வசதிகள் செய்து கொடுத்த உண்மை செங்கற்பட்டு சில்லாவிலுள்ள ''மகேந்திரதடாகம்'', ''பரமேஸ்வரதடாகம்'', ''வைரமேகதடாகம்'' என்ற பெயர் கொண்ட தடாகங்களே தக்க சான்றுகளாகும். சி. வே.

கல்லல் மணிவாசக சரணாலய சுவாமிகள்.

கல்லல் மணிவாசக சரணாலய சுவாமிகள், தமிழ்நாடு முன்னேற்றத்திற்காக, கலியுகவரதராகிய, ஸ்ரீமுருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் குன்றக்குடி என்னும் திருப்பதியில், ஒரு அரிய பெரிய செந்தமிழ்க் கலாசாலை ஒன்று அமைத்து, அதில் நிராதரவான ஐம்பது ஏழைப்பிள்ளைகளுக்கு உண்டி, உடை கொடுத்து, ஆரம்பக்கல்விமுதல் பெரும்புலமைப் படிப்புவரை படிப்பிக்கச் செய்தும், சமயவளர்ச்சி நூல்கள் முற்றினும் கற்கச்செய்தும், பண்முறையே சமயத்திரு முறைகளைக் கற்கச்செய்தும், சமயசம்பந்தமான வடமொழி கற்கச்செய்தும் சஞ்சாரத்துக்குத் தகுதியாக ஆங்கிலத்தைக் குறுகிய காளளவிற் கற்கச்செய்தும், அவைகளுக்குப் போதமான உபாத்தியாயர்களை நியமகஞ்செய்தும், மிக்க விரைவில் தமிழையும் சைவ சமயத்தையும் வளர்த்தற்குரிய தொண்டு செய்து வருகின்றார்கள். எப்பொழுதும் ஐம்பது பிள்ளைகள் படித்து வரும் என்றும் மேல்வரும் பிள்ளைகளையும் சம்பளமின்றிக் கற்பிப்பதாயும் வாக்குறுதி கூறுகின்றார்கள். இந்தக் கலாசாலை முடிந்து நடைபெற்றவுடன் இன்றியமையாதனவான பலவூர்களில் பலகலாசாலைகள் அமைத்தும் தமிழை வளர்க்கவேண்டுமென்றும் துணிவுகூறுகின்றார்கள். மேற்கண்ட கலாசாலைகளுக்கு வேண்டுவனவாகிய பெரும்பொருள்கள் சேகரிக்குமுறையானே சேகரிப்பதாக ஆரம்பித்து வசூலித்து வருகின்றார்கள். வரும் ஆவணிமாத குன்றக்குடிக் கலாசாலை வேலை ஆரம்பமாகும். சுவாமிகள் பூர்வாச்சிரமச் சரீரசம்பந்தமான சனசமூகங்களும் மற்றைத் தமிழர்கள் கூட்டுறவுகளும் மிகவும் விரிந்துள்ளன. அதனால் அவர்கள் பொருள் சேகரித்தல்கூடும். குன்றக்குடியில் அமைக்கப்பெறும் கலாசாலைக்கு, "தமிழர் தமிழ்ச் சங்கத்து செந்தமிழ்க்கலாசாலை, அறக்கடவுணிலையம்." எனப்பெயர் சூட்டுவார்கள் போலும். தமிழர்கள், தமிழ்நாடு சைவசமயம், இவைகளுக்குழைப்பதே தவமெனக் கொண்டு தொண்டுபுரியும் நமது சுவாமிகள் எண்ணத்தின்படி முருகன் முன்னின்று முற்றுறச் செய்வானென்பது திண்ணம்.

ஆனி 3, மாலை 4-30-முதல் 8-30 மணிவரையில் மானாமதுரையில் ஒக்கூர் திருவாளர் வெள்ளையப்பச் செட்டியார் ஹைஸ்கூலில் "தமிழும் சைவமும்" என்னும் விஷயத்தைப்பற்றியும், 5-ம்வ "சைவசித்தாந்தமும் பக்தியும்" என்னும் பொருளைப்பற்றியும், கல்லல் உயர் திரு மணிவாசக சரணாலய சுவாமிகள் அவர்களால் பேருரைகள் நிகழ்த்தப் பெற்றன. நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் வந்திருந்து கேட்டு மகிழ்ச்சியடைந்தனர்.

முதல் நாள் தமிழ்ப்பண்டிதர் ஐயர் அவர்களும், இரண்டாம் நாள் நீதிமன்றத்துத்தலைவர் உயர் திரு இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் அவைத்தலைவர்களாக அமர்ந்திருந்தார்கள்.

இன்னும் பல அரிய விரிவுரைகள் அடுத்தடுத்து அவ்வூரில் நடைபெறும்.

நிகழும் ஆனித்திங்கள் 16, 20-ல் பாகனேரி நகரம் புல்வநாயகியம்பாள் உத்ஸவத்தில் கல்லல் மணிவாசக சரணாலய சுவாமிகளால் "நம்மவர்களின் முற்காலத்திய மேன்மையும் தற்காலத்திய பரிதாபநிலைமையும்"

என்றதைப்பற்றியும், "சைவ சித்தாந்தம்" என்பதைப்பற்றியும், அரிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. கேட்டோர் இன்பக்கடலில் மூழ்கினார்கள்.

26, 27, 28 தேதிகள் மேற்படி சுவாமிகளால் இளையான்குடி நகரத்தில் "பாண்டியன் சுரந்தீர்த்த திருவிளையாடலும்" "தமிழும் சைவமும்" என்பதைப் பற்றியும் "இந்து முஸ்லீம் ஒற்றுமை" என்பதைப்பற்றியும் அரிய சொற் பொழிவுகள் நிகழ்ந்தன. நகருள்ளாரனைவரும் பிறப்பின் பயனடைந்தார்கள்.

கல்லல் சுவாமிகள் இயற்றிய நூல்கள்.

கல்லல் மணிவாசக சரணலய சுவாமிகளாலியற்றப் பெற்ற ஸ்ரீ முருகக்கடவுள் சோடசதலச்சந்தப்பிரபந்தமும் சேற்றூர்ப் பிரபந்தத்திரட்டும் ஸ்ரீ முருகக்கடவுள் விண்ணப்பக் கலிவெண்பாவும், வெற்றி நகர் அன்னபூரணியம்மன் அட்டப்பிரபந்தமும் அச்சிலிருக்கின்றன. அவைகள் கூடிய விரைவில் வெளிவரும். அதின் விலைகள் மறுசஞ்சிகைகளில் தெரிவிக்கப்படும். மேற்கண்ட பிரபந்தங்களின் தன்மை வெளிவந்து படித்துப் பார்த்தாலன்றி எழுதிக்காட்டுவது பெருமையன்று. அத்தகைய அருமை வாய்ந்தவைகள் இவைகளல்லாமலும் "தென்கருவை பால்வண்ணர் ஆயிர நாமக்கலிவெண்பா" என ஒரு பிரபந்தம் முடிகின்றது. அவையும் கூடியவிரைவில் அச்சேறும். அது ஒருமுறைபடித்தால் ஆயிர நாமஞ் சொல்லி அருச்சனை செய்த பலனளிக்கத்தக்கது.

திரு. ஹில்டா ஞானதுரையம்மாள் எம். ஏ..

திருச்சிராப்பள்ளி புத்தூர் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு, எஸ். கே. ஞானதுரையவர்களின் மனைவியார் திரு. ஹில்டா ஞானதுரையம்மாள் இந்திய அரசாட்சியார் அன்புடனளித்த உதவிச் சம்பளத்தைப் பெற்று, உயர்தரக்கல்வி பயில்வதற்காக ஆங்கில நாட்டிற்குச் சென்ற மாதம் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். மூன்று ஆண்டுகள் அங்கே இருப்பதாக அவர்கள் எண்ணம். இவ்வம்மையார் 1920-ம் ஆண்டு ஹீபர் கல்லூரியினின்றும் பி. ஏ. பட்டம் பெற்று 1922ல் எம். ஏ. பட்டமும் பெற்றுக் கத்தோலிக்கரின் பெண்கள் கல்லூரியில் உதவித்தலைவராக வேலைபார்த்து வந்தார். இவர் திருச்சிமாநாட்டுக் கல்விக்கழகத்தில் ஓர் உறுப்பினராவர். இறைவன் இவர்க்கு உடல் நலம் முதலிய எல்லா நலன்களையும் அளித்து இவரைத் திரும்பவும் கல்விப்பெருமையுடன் நமது ஊரிற்கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்பதே நாம் இறைவனை வேண்டுவது.

தஞ்சை பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

ஐந்தாவது தஞ்சை பார்ப்பனரல்லாதார் மகா நாடு சென்னை நகராண்மைக்கழகத் தலைவரும் சென்னைச் சட்டசபை உறுப்பினரும் உயர்நீதி மன்ற வழக்கறிஞருமாகிய இராவ் பகதூர் ஓ. தணிகாசலஞ்செட்டியார் அவர்களின் தலைமையின்கீழ் ஆகஸ்டு மாதம் 22, 23 ம் நாட்களில் நடைபெறும். திரு. ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் வரவேற்புக் கழகத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். நமது சென்னை மாகாண அமைச்சர்கள் மூவரும் மகாநாட்டுக்கு வருவதாக ஒப்பியுள்ளார்கள்.

திரிசிரபுரம் சைவசித்தாந்தசபை.

குரோதன ஆண்டு ஆடித்திங்கள் 13-ஆம் நாள் (28—7—25) சைவ சமயாச்சாரியர் நால்வருள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானது திருவடியை அடைந்த திருநாள் ஆதலின், அதனைக் கொண்டாடும் பொருட்டு அன்று மாலையில் இச்சபையின் கூட்டம் நடைபெற்றது.

அதுபொழுது இச்சபையின் உறுப்பினரும் தமிழறிஞரும் ஆகிய திரு. ம. பெரியசாமிப் பிள்ளையவர்கள் "சுந்தரமூர்த்தி சுவாமிகள்" என்பது பொருளாக ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். அவர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தை ஒழுங்கு பெறக்கூறி அதன்கண் உள்ள அரிய நீதிகளையும் உயர்ந்த கருத்துக்களையும் பல மேற்கோள்களுடன் கேட்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு மொழிந்து, சுவாமிகள் வரலாற்றில் காணப்படும் 'செங்கல் பொன்னாதல்' 'குண்டையூர் நெல் 'லழைத்தல்', முதலையுண்டபாலனை மீட்டல்' முதலிய அரும்பெரும்நிகழ்ச்சிகட்கு அகச்சான்றாக தேவாரத்தினின்றே சில திருப்பாட்டுக்களை எடுத்து நன்கு விளக்கிக்காட்டினார்கள்.

பின்னர், சபையின் அமைச்சர் திரு. உ. க. பஞ்சரத்தினம்பிள்ளை அவர்கள் சொற்பொழிவாளர் கூறியவற்றை மிகவும் பாராட்டித் தாமும் சில அரிய பொருளை எடுத்து மொழிந்து விரிவுரையாளருக்கு நன்றி கூறினார்கள். இறைவன் திரு ஆராதனையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

அம்பலப்புழையில் சத்தியாக்கிரகம்.

வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்ததுபோல் அதே நோக்கத்துடன் அதே திருவாங்கூர் நாட்டிலுள்ள அம்பலப்புழையிலும் சத்தியாக்கிரகம் செய்வதாக அவ்வூர் கீழ்வகுப்பார்கள் தீர்மானித்து விட்டனரெனக் கேட்டு மகிழ்கிறோம். தீண்டாமையும், சாதி வேற்றுமையும் நம் நாட்டிலிருந்து அறவே ஒழியவேண்டும்; அவை ஒழிந்தால்தான் இந்து சமயமும் நமது நாடும் கடைத்தேறும். இக்கொடுமைகளுக்குப் பயந்தன்றோ இந்து கீழ் வகுப்பார்கள் திருநெல்வேலி, திருவாங்கூர் முதலிய இடங்களில் கிரிஸ்தவராகவும் முகம்மதியராகவும் ஆகிவிடுகிறார்கள். இதைக் கண்டும் இந்துமக்களுக்கு அறிவு வாராதது வியப்பாக உளது.

ஒரு அங்குல சதுரத்தில் பத்து இலட்சம் பதங்கள்.

அமெரிக்காவில் ஒருவர் ஒரு அங்குல சதுரத்தில் "பைபிள்" என்ற கிரிஸ்தவ வேதநூலை எண்பதுமுறை அச்சிட்டுத் தந்திருக்கிறாராம். இவ்வெழுத்துக்களை அரிய பெருக்கக் கண்ணாடிகளாற்றான் படிக்க முடியுமாம்.

காலஞ்சென்ற உயர் திரு. டாக்டர் லாசரஸ் அவர்கள்.

தமிழ்ப் பேரறிஞரும் கிறித்துவப் பாதிரியாருமான உயர் திருவாளர் டாக்டர் லாசரஸ் அவர்கள் முதிர்ந்த வயதில் ஒரு திங்கட்கு முன்னர் இவ்வுலகவாழ்வை நீத்தார். அவரது உயிர் இறைவனின் அடிகளிற் சார்ந்து அமைதியும் ஆனந்தமும் அடையவேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

அதிசயமான "கொரான்" நூல்கள்.

நாலடி நீளமும் இரண்டரையடி அகலமும் ஓரடி மொத்தமுமுள்ள முகம்மதிய வேதநூலாகிய "கொரான்" ஒன்று இலண்டன் நகரில் இருநூறு பொன்னுக்கு ஏலம் எடுக்கப்பட்டதாம். அந்நூலின் மேலேடுகள் மரத்தாற் செய்யப்பட்டன. அதைத்தூக்க இரண்டு ஆட்கள் வேண்டும். எழுத்துக்களின் உயரம் நாலு அங்குலம். ஒவ்வொரு ஏட்டிலும் பத்தே வரிகள்தான் உண்டு. இப்பெரிய நூலோடு சேர்த்து ஒன்றரை யங்குல சதுரமுள்ள மற்றொரு "கொரான்" நூலும் ஏலமிடப்பட்டதாம்.

பட்டினி கிடத்தல்.

ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு நாளாவது உணவு எடுத்துக்கொள்ளாமல் தண்ணீர் மட்டும் வேண்டியமட்டும் பருகிக்கொண்டிருந்தால் உடலும் மனமும், ஆத்துமாவும் மிக்க நன்மையடையுமென்று அறிஞர்கள் கூறுகின்றனர். கொலைபட்டினிக் கிடப்பதைவிட இரண்டு மூன்று நாட்களுக்குப் பழவகைகளையே உட்கொண்டிருத்தல் அதிக நன்மை பயக்குமாம். பழங்களின் சாறு நமக்கு உணவாகி உதவி செய்வதோடு குடலிலுள்ள பூச்சிப் புழுக்களைக்கொன்று இரத்தத்தைச் சுத்தி செய்வதாகவும் கூறுகின்றனர்.

திரு. பெசண்டு அம்மையார்.

தாம் வரைந்த இந்திய சமூச மசோதாவை ஆங்கிலருக்கு விளக்கிக் காட்டி இந்தியாவுக்குத் தன்னரசு வாங்கித்தருவதாகத் திரு. பெசண்டு அம்மையார் சீமை போயிருக்கிறார்.

இந்து சமய மானியச் சட்டம்.

இச்சட்டம் சென்னை ஆட்சித்தலைவராலும், இந்திய ஆட்சித்தலைவராய ரீடிங்கு பெருமகனாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோடு, இப்பொழுது ஆங்கிலநாட்டு இந்திய அரசியலமைச்சர் பேர்க்கன் ஹெட் பெருமகனாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டதாகச் செய்தி வந்துள்ளது. இச்சிறந்த சட்டத்தைத் தொலைப்பதற்காக நமது மடத்தலைவர்களிற் பலர் ஒருங்குகூடி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்போகிறார்களாம். ''தருமமே இறுதியில் வெற்றி பெறும்'' என்ற ஆன்றோர் வாக்கை நம்பி, வாளாவிருக்கின்றோம்.

வடபாதிமங்கலம் வழக்கு.

காலஞ்சென்ற வடபாதிமங்கலத்தின் நிலக்கிழவர் திரு. சோமசுந்தர முதலியாரவர்களின் இளைய மனைவியாரும் தெத்துப்பிள்ளையும் ஒருபக்கமாக, மூத்த மனைவியார் மற்றொரு பக்கமாக ஓர் பெரிய வழக்கு திருவாரூர் நீதிமன்றத்தில் நடைபெறுவதாகத் தெரியவருகிறது. திரு. முதலியாரவர்கள் பெரும் பாடுபட்டுச் சேர்த்துவைத்து விட்டுப்போன பொருள் வாதுக்கும் வழக்குக்கும் வீணாக அழிக்கப்படுகிறதேயென்ற துயரத்தை வெளியிட்டுக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. மேலே பணம் செலவு செய்யாமல் ஒருவிதமாக இருகட்சியாரும் ஒத்துப்போனார்களென்றால் இருதிறத்தார்க்கும் நலம்.

மதிப்புரை.

"சிந்தனைக் கட்டுரைகள்"

"தாயின் புறுவ துலகின் புறக்கண்டு,
காமுறுவர் கற்றறிந்தார்"—(திருக்குறள்).

சிந்தனைக் கட்டுரைகள். (Reflective Essays) என்னும் ஓர் நூல் எமது பார்வைக்கு வந்துளது. இது அடிசன் (Joseph Addison) என்னும் மேனாட்டு நல்லிசைப்புலவர் ஆங்கிலத்தில் எழுதிய 'மிர்சாவின் காட்சி' (The Vision of Mirza) என்பது முதலிய ஆறு கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்தெழுதப் பெற்றது. இம்மொழிபெயர்ப்புப் புனைந்துறை வகையால் ஆங்கிலக் குறியீடுகட்கு (பேர்கட்கு) ஈடாகத் தமிழ்ப் பெயர்கள் தரப்பெற்றும், மொழிபெயர்ப்பினை ஆக்கியோராது வறலாற்றின் பகுதிகளில் சிற்சில சேர்க்கப்பெற்றும் தமிழ்ச்சுவைக்கு ஏற்பச் செய்யப் பட்டதாகும். இதன்கண் முதலதாகத் திகழும் 'முருகவேள்கண்டகாட்சி' (The Vision of Mirza) என்பதில், மக்கள் தமது வாழ்நாளில் அடையும் இன்பதுன்பங்கட்கும், மக்கள்வாழ்க்கைக்கு உரித்தாகவுள்ள நூறாண்டளவும் நில்லாது பெரும்பாலும் சிலசில ஆண்டிலேயே உடலைவிட்டு நீங்குதற்கும் ஏது இன்னின்ன என்பதும், நல்வினை தீவினைகட்கு ஏற்ற பயனை மறுமையில் எய்தியே தீரவேண்டும் என்பதும், உருவக வகையால் விளங்கக் கூறப்பெற்றுள. மற்றைய ஐந்து கட்டுரைகளும் இங்ஙனமே அரும்பெரும் பொருள்களை விளக்குவன. இது தூய்மையான தனித்தமிழ் உரைநடையில், பலதிறப்பட்ட பொருள்களையும் சுட்டுதற்கு உரிய தமிழ்ச் சொற்களால், தமிழ் என்பதற்கு உள்ள இனிமை என்னும் பொருளை எடுத்துக்காட்டுவதாய் எழுதப்பெற்றுளது. தனித்தமிழ் உரை நடை எழுதப் புகுவார்க்கு வழிகாட்டியாய் உள்ளது. 'தமிழ்மொழியில், பலதிறப்பட்ட அரிய பொருள்களைக் குறிப்பதற்கு உரிய சொற்கள் இல' என்னும் வெற்றுரையை வெற்றுரையாக்குவது. இதன் அருமை பெருமையினை உணர்ந்தே இதனைக் கேம்பிரிட்சு கலைமாடத்தார் (Cambridge University ஓர் பாடமாக அமைத்துள்ளார். ஆகலின் கல்லூரியில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் (College Students) தமிழ் கற்க விழையும் ஏனையோர்க்கும் இது ஓர் சிறந்த நூலாகும்,

ஆக்கியோர் உயர்திரு சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள். தமிழுலகத்தில் இப்பெரியாரை அறியாதார் இரார் என்பது எமது துணிபு. இவர் தமிழ்க்கல்வியினைத் துறைபோகக் கற்ற நுண்மாண் நுழைபுலம் உடையவர்; சைவ சமய நுண்ணறிவாளர்; ஆங்கிலம், வடமொழி இவற்றில் நிரம்பிய பயிற்சி உடையவர். இதுபோது தமிழ்நாட்டில் இவருக்கு ஒப்பாக இம்மூன்று மொழிகளிலும் வல்லுநர் உளரோ என்பது ஆராய்ந்துரைக்கற்பாலது. உளரெனினும் அவர்கள் மிகச் சிலரேயாவர். பல பல அரிய ஆராய்ச்சியுரைகளையும், கட்டுரைகளையும், விரிவுரைகளையும் எழுதி வெளியிட்டுவரும் இப்பெரியார் தமிழ்மொழிக்கும் தாய் நாட்டுக்கும் செய்யும் பணிகள் மேலும் மேலும் மிகுதற்பொருட்டு இவர்கட்கு நீண்ட ஆயுளும் உடல் வலியும் எல்லாம் வல்ல இறைவன் தந்தருள்வாராக,

இச் 'சிந்தனைக்கட்டுரைகள்' என்னும் நூலுக்கு முன்னுரை ஒன்று இதன் ஆக்கியோரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றுள்ளது. இதனை யாம் ஒருமுறைப்படித்தேம்; அதன் பயன் இதனைப் பலமுறையும் படித்தல் வேண்டும் என்னும் பேரவா எம் உள்ளத்தில் எழுந்ததேயாம். தமிழ்பற்றி பல பலவகையாக எழும் பொருந்தாக் கேள்விகட்குத் தக்க விடைகளையும் வேறுபல அரிய செய்திகளையும் இம்முன்னுரையில் விளங்கக் காணலாகும்.

தமிழ்க்கலைமாடம் (Tamil University) நிறுவுதல்வேண்டுமென்று பேசப்படும் இக்காலத்து—தமிழ்மொழியின் வழியாகப் பல துறைகளினும் கல்வி பயிற்றல் வேண்டும் என்று சொல்லப்படும் இக்காலத்து—'அதற்கு வேண்டும் நூல்களைத் தமிழிற்செய்தல் இயலாது,' என்று நுவலப்படும் இக்காலத்து இந் நூலாசிரியர் போன்ற பேராற்றலும் அறிவும் உள்ளவர்களைப் பலவழியினும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைச் சென்னைக் கலைமாடத்து உறுப்பினர்களும் மற்றைய அறிஞர்களும் இனியேனும் உணர்வார்களா? சென்னைக்கலைமாடத்தார் இந்நூலையும் இவர்கள் இயற்றிய மற்றைய நூல்களில் ஏற்றவற்றையும் கல்லூரிகளிற் பாடமாகவைத்து இவர்களுக்கு ஊக்கமளிப்பார்களாக; தமிழறிஞர்களும் இவைகளை வாங்கிப்படித்துவரின் தமிழின் சுவையறிந்து தாமின்புறுவதோடு இவர்கட்கும் பேரூக்கமளித்தவராவர் என்பது எமது துணிபு.

> "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு."—(திருக்குறள்.)

சில குறிப்புகள்.

1. சந்தா நேயராகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரை விவரமாய், தபாலாபீசு, கிராமம், தாலூகா, ஜில்லா, இரயில்வே ஸ்டேஷன் முதலியன கண்டு தெளிவாய் எழுதவேண்டும்.

2. சந்தாத் தொகையை முன்பணமாகச் செலுத்தாதவர்களுக்கு சஞ்சிகை வி. பி. மூலமாக அனுப்பப்படும். எப்போது சேர்ந்தாலும் சித்திரை மாதமுதல் கணக்குவைத்து சித்திரை முதல் சஞ்சிகைகளெல்லாம் சேர்த்து அனுப்பப்பெறும்.

3. வி. பி. யில் வரவழைக்கிறவர்கள் வி. பி. தபால் செலவுக்கு அனுவசியமாக 3 அணு சேர்த்துக்கொடுக்கவேண்டும். முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு இந்த 3 அணு அனுவசியமாகக் கொடுக்கவேண்டியதில்லை. ஆகவே முன்பணம் அனுப்புதல் நலம்.

4. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் தமிழ் மாதம் 15-ம் தேதிக்குமேல் தமிழ்மாத முடிவிற்குள் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளவேண்டும். அதற்குப் பின்னர் தெரிவித்தால் அனுப்ப இயலாது.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தை தமிழ்மாதம் பிறப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்னதாகவே தெரிவித்து விட்டு, தங்கள் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீசோடு ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

6. நேயர்கள் எழுதும் கடிதங்களிலெல்லாம் சந்தா எண் குறிப்பிடல் வேண்டும். பதில் வேண்டுவோர் தபால் தலைகளை யனுப்புதல் நலம்.

வேம்பினால் செய்யப்பெற்ற பொருள்கள்.

தோல் சம்பந்தமான எல்லா வித வியாதிகளுக்கும் வேம்பு நல்ல மருந்தென்று ஆயுர்வேத, சித்தவைத்தியமுறையில் தேர்ந்தவர்களுக்கு நெடுநாளாகத் தெரிந்த விஷயமே ஆகும். இது இன்னின்ன வியாதிகளுக்கு நல்லதென்று கல்கத்தா கெமிக்கல் கம்பெனியார் (The Calcutta Chemical Co , Ltd.) இக்கால ரீதியில் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்த விஷயங்களை இந்தியாவில் பிரசுரமாகும் வைத்தியவிஷயமான பத்திரிகைகள் மூலமாய்த் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். சாதாரணமாய் உபயோகிப்பதற்காக மேற்படிக் கம்பேனியாரால் வேம்புசேர்த்துச் செய்யப்பெற்ற சாமான்களாவன:—

வேம்பு சோப்பு.

மார்கோ சோப்பு:—வண்டுகடி, சொறிசிரங்கு முதலிய தோல் சம்பந்தமான வியாதிகளைச் சௌக்கியப்படுத்துவதற்கும் அவைகளைத் தடுப்பதற்கும் உபயோகப்படுத்தப்படும் கார்பாலிக் முதலிய மருந்து சோப்புகளை விட இது ரொம்பவும் விசேஷமானதென்று அனுபவத்தில் காணப்பட்டிருக்கிறது. வேறு சோப்புகளைப்போல் காலத்தால்தோலைத்தின்னும் குணம் இதற்கில்லை, வேப்பெண்ணெயின் துர்நாற்றத்தை விலக்கி ஒரு விதமான சுகந்தம் சேர்த்துச் செய்யப்பட்ட படியால் இதை நாள்தோறும் குளிக்கும்போது உபயோகித்து வரத்தக்கதாகும். பிராணிகளின் கொழுப்பாவது கெடுதல் செய்யக்கூடிய வேறு எந்த பொருள்களாவது கலப்பில்லை,

வேம்பு மெழுகு.

மார்கதுவென்டம்:—சொறிசிரங்கு, நெருப்பினால் அல்லது வெந்நீரினால் ஏற்படும் கொப்புளம், வெட்டுண்ட காயம், இன்னும்பலவிதமான இரணங்களுக்கும் உபயோகித்தால் குணப்படுத்தும் திறமையுடையதாகும். கால் கை வீங்குதல், கை மரமரப்பு, இவைகளுக்கு வேம்பு சோப்பினால் தினந்தோறும் நன்றாய்க்கழுவி மார்க்குவென்டத்தைத் தடவி வந்தால் குணப்படும்.

மார்கதுவென்டம் (எச்,)—மற்றுயாதொரு மருந்தினாலும் சௌக்கியத்திற்குவாராமல் நெடுநாள்பட்ட புண்கள், வண்டுகடி, எச்சல்புண், தேமல், கருஞ்சுணங்கு இவைகளுக்கு மார்கோ சோப்பினால் கழுவி மேற்சொல்லிய மார்கு வென்டம் (எச்) என்பதைத் தேய்த்து வந்தால் நல்ல நிலைமையையடைவிக்கும்.

மார்கோபிரிஸ் (பல்பொடி.)

கசப்பு கொஞ்சமும் இல்லை.

இந்தியர்களின் பல் அழகாயும் ஊனமின்றியுமிருப்பதின் காரணம் அவர்கள் வேம்பின் குச்சியினால் தந்த சுத்தி செய்வதினாலேயே யென்று

நாம் நன்கு அறியக்கூடினதாகும். அப்படி அவர்கள் செய்வது இச் சூரணத்தில் நீக்கப் பட்டிருக்கிறது. தினசரி உபயோகிப் பதனால் பல் வியாதிகளெல்லாவற்றையும் கண்டிக்கும். தவிர விஷம், கெட்டநாற்றம் முதலியவைகள் சேராமல் தடுக்கக்கூடியதான வேம்பின் முக்கியமான குணங்களும் இதில் அமைந்திருக்கின்றன.

முகத்திற்குப் பொடி.

குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் முகத்தில் போட உப யோகித்து வரும் தூள்களிலெல்லாவற்றிலும் இது மிகவும் விசேஷமானது. இனிமையான வாசனையுள்ளது. நாள்தோறும் மார்கோ சோப்பு தேய்த்துக் குளித்து, இதை உபயோகித்து வந்தால் மிகவும் சூடான நாடுகளில் வசிப்ப வர்களுக்குண்டாகும் தோல் சம்பந்தமான வியாதிகளைத் தடுப்பதுடன் தோலைச் சுத்திசெய்து குணப்படுத்தும் குணமுமுடையது. தண்ணீர் சேர்க்காமல் நேருகவும் உபயோகிக்கலாம்.

அழகியபடம்! பூசிக்கத்தக்கது!!

சிந்தாந்தப்படமும்,

சித்தாந்தப்பட விளக்கம் என்னும் புஸ்தகமுமாகிய இவற்றில் தத்து வங்களின் தோற்றமும், தொழிலும், அண்டபகிரண்டங்களின் அமைப்பும், பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் முதலியலோகங்களின் அமைப்பும் இன்னும் அனேக அரிய பெரிய விஷயங்களும் சைவ சித்தாந்த சாஸ்திர ரீதியாக விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன. 8 வர்ணமுள்ள அழகிய 30"×20" இஞ்சு அளவுள்ளபடமும், அதன் விபரங்கள் அடங்கிய டிம்மி $\frac{1}{8}$ அளவில் 20 பாரங்கொண்டதும் இதயதாமரை, பஞ்சேந்திரியக் கருவிகள் அத்துவாக்கள் முதலியபடங்களும் வர்ணப்படங்கள் அடங்கிய தும் கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, முழுகாலிகோ பயிண்டு செய்யப்பட் டதுமான நூலும் தயாராகவிருக்கின்றன. இவை ஒவ்வொரு இந்துமக னிடமும் இருக்க வேண்டியது அத்தியாவஸ்யம். உயர் திரு பஞ்சாட்சர புரம் வாலையானந்த சுவாமிகளால் இயற்றப்பெற்றது.

இவற்றின் விலை ரூ. 4-0-0 தபாற்செலவு வேறு.

டைகர்பாம்.

சிறந்த மருந்து! குறைந்த விலை!!

சகலவிதமான நோய்களையும் அறவே ஒழிக்கும்
சிறந்த சஞ்சீவி இது ஒன்றே.

இந்த மெழுகு அடியிற்கண்ட நோய்களை உடனே பறக்கடிக்கும்:— தலைவலி, இடுப்புவலி, பல்வலி, மார்சளி, வாதரோகம், வீக்கம், கீல்வாய்வு, சுவாசகாசம், இருமல், பூரான்கடி, வெட்டுக்காயம், விஷக்கடி கள், முதலியவை. விலை அணா 8.

கணபதி பண்டசாலை,
23, மலைவாசல்.
தெப்பக்குளம் (போஸ்ட்), திருச்சிராப்பள்ளி.